VII

ஸூர்ய நமஸ்கார ப்ரச்னம்

அர்த்த சுருக்கம்

உரையாசிரியர்:

ப்ரம்மஸ்ரீ G. R. ராமச்சந்திர சாஸ்திரிகள்

கும்பகோணம்.

அ. சுப்பராமன்
நெ. 9, ஐந்தாவது க்ராஸ் தெரு,
சி. ஐ. டி. காலனி, சென்னை-4

1999

SURYA NAMASKARA PRASHNA

ஸூர்ய நமஸ்கார ப்ரச்னம்

அர்த்த சுருக்கம்

உரையாசிரியர் :

ப்ரம்மஸ்ரீ G. R. ராமச்சந்திர சாஸ்திரிகள்,
கும்பகோணம்.

அ. சுப்பராமன்
நெ. 9, ஐந்தாவது கிராஸ் தெரு,
சி. ஐ. டி. காலனி, சென்னை-4

1999

முதற்பதிப்பு : ஏப்ரல் 1996
இரண்டாம் பதிப்பு : அக்டோபர் 1999

உரிமை : பதிவு செய்யப்பட்டது

விலை : இலவசம்

அச்சிட்டோர் :

ப்ரபு பிரிண்ட்ஸ்,
82/A, பஜார் ரோடு,
மயிலாப்பூர்,
சென்னை : 600 004.
☎ 498 17 97

முகவுரை

தைத்திரீய ஆரண்யகம்

(சூரிய நமஸ்கார ப்ரச்னம்)

वेदोऽखिलो धर्ममूलम् । यस्य निश्वसितं वेदाः-
यो वेदेभ्योऽखिलं जगत् । निर्ममेतमहं वन्दे विद्यातीर्थं
महेश्वरम् ॥

உலகில் வாழும் 84 லக்ஷம் விதமான ஜீவராசிகளும் சுகமுடன் வாழ்வதற்கு உத்தமமான தர்மங்களை அந்தந்த அதிகாரிகளுக்கு தக்கவாறு ஸ்ரீ பரமேச்வரன் தன்னுடைய ஆக்ஞாரூபமான சப்த ப்ரஹ்ம ஸ்வரூபமான வேத மூலமாக உபதேசித்தருளியுள்ளார். அந்த தர்மங்கள் அதிகாரிகளால் (மக்களால்) முறைப்படி நன்கு அனுஷ்டிக்கப்பட்டால் மக்கள் யாவருமே குறைவொன்றுமின்றி இன்பமுடன் வாழலாம் என்றும், நம் முன்னோர்கள் அவ்விதம் வேதோக்த தர்மங்களை அனுஷ்டித்து வந்ததால் எங்கும் சுபிக்ஷமும், ஸந்தோஷமும் நிறம்பி இருந்தன என்று நமது இதிஹாஸங்கள் முதலியவைகளில் படிக்கிறோம்.

பொதுவாக அருணம் 1 முதல் 10 ப்ரச்னங்களையும் அருணம் 10 ப்ரச்னங்கள் என்று சொல்

வது வழக்கம். அவைகளில் வரும் விவரத்தை மிகவும் சுருக்கமாக எழுதுகிறோம்.

1-ம் ப்ரச்னம் : ஆருணகேதுக சயனம்—சூரிய நமஸ்கார ப்ரச்னம் என்றும் கூறப்படுகிறது. விரிவாக இந்த ப்ரசுரத்தில் பின்னால் எழுதுகிறோம்.

2-ம் ப்ரச்னம் : இதில் ஸந்தியோபாஸனம், அர்க்யம் இவைகள் வேதத்தின் அடிப்படையிலும், ச்ராத்தத்தில் சொல்லப்படும் ராக்ஷோக்ன மந்திரங்களும், கர்மாக்களுக்கு முன்னால் தன்னை சுத்திச் செய்து கொள்ள கூச்மாண்ட (கூஷ்மாண்ட) ஹோமமும், ப்ரம்ம யக்ஞத்தின் சிறப்பும், பஞ்ச மஹா யக்ஞத்தின் சிறப்பும் ஸ்வரூபமும் சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் அவகீர்ணி (ப்ரம்மசாரி ஸ்திரீகமனம்) ப்ராயச்சித்தம் சிம்சுமார மந்திரங்களும், திக் நமஸ்கார மந்திரங்களும் சொல்லப்பட்டிருக்கின்றன.

3-ம் ப்ரச்னம் : யாகத்தில் சயன பூர்வமாக செய்யும்போது அதற்கு வேண்டிய மந்திரங்கள் சொல்லப்பட்டுள்ளன. ஸ்மார்த்தத்தில் ப்ரதிகிரஹம் வாங்கும்போது அதற்கு பரிஹாரமாக சொல்ல வேண்டிய மந்திரங்களும், அபரக்ரியை விசேஷமாக ப்ரம்மமேத ஸம்ஸ்காரத்துடன் செய்வதாக இருந்தால் அதற்கு வேண்டிய மந்திரங்கள் முழுவதும் இதில் கூறப்பட்டிருக்கிறது.

4-ம் ப்ரச்னம் : ஸோம யாகத்தில் ப்ரவர்க்யம் என்ற கர்மாவுக்கு ஸாதனங்கள் தயாரிப்பது, உபயோகிக்கும் போது சொல்ல வேண்டிய மந்திரங்கள் இதில் அடங்கி இருக்கிறது. ஸ்மார்த்தத்தில் சொல்லப்படுகின்ற பஞ்ச சாந்தி, கோஷ சாந்தி, விவாஹத்திற்கு முன்பு செய்யக்கூடிய அஷ்ட வ்ரத மந்திரங்களும் அடங்கியுள்ளது.

5-ம் ப்ரச்னம் : இந்த ப்ரச்னத்திற்கு ப்ரவர்க்ய ப்ராம்மணம் என்று பெயர். 4-ம் ப்ரச்னத்தில் சொல்லப்பட்ட மந்திரங்களுக்கு ப்ரவர்க்ய கர்மாவில் எங்கெந்த இடத்தில் எப்படி செய்யவேண்டும் என்பதை கூறுகிறது. கடைசி அனுவாக மந்திரம் உதக சாந்தியில் உபயோகப்படுத்தப்படுகிறது.

6-ம் ப்ரச்னம் : அக்னி ஹோத்ரிகள், அக்னி ஹோத்ரம் செய்யாத ஔபாஸனம் மாத்திரம் செய்பவர்கள், க்ரஹஸ்தர்கள், ப்ரம்மசாரிகள் முதலியவர்களுக்கு அபரக்ரியை ஸமஸ்காரத்திற்கு வேண்டிய மந்திரங்கள் பூராவும் (வ்ருஷோத்ஸர்ஜனம் தவிர) அடங்கியுள்ளது.

7 ம் ப்ரச்னம் : ஆத்ம வித்யை அடைவதற்கு வேண்டிய உபாஸனைகள் சொல்லப்படுகின்றன.

8-9 ப்ரச்னங்கள் : இரண்டிலும் வேதாந்த தத்வங்களும், ஜீவன் முக்தியினுடைய நிலை சொல்லப்படுகின்றன.

10ம் ப்ரச்னம்—ஸந்தியாவந்தனம், ச்ராத்தம், அகமர்ஷணம், துர்கா, ம்ருத்யு, மேதா ஸூக்தங்கள், த்ருஸுபர்ணம், விரஜா ஹோம மந்திரங்கள், மஹா வ்யாஹ்ருதிகள், வைச்வதேவ மந்திரங்கள், ஜீவப்ரம்ம ஐக்யத்தை அடைய வேண்டிய ஸாதனங்கள் சொல்லி, ஜீவப்ரம்ம ஐக்யமும் கூறப்படும் மந்திரங்கள் செல்லப்படுகின்றன.

முதல் ப்ரச்னம் ஆரண்ய பாகம் மஹா மந்திரங்களை கொண்டிருப்பதால், இதை பரிசுத்தமான வனத்தில் க்ரஹணாத்யயனம், தாரணாத்யயனம் செய்யவேண்டும். அதனால் தான் இதற்கு ஆரண்யகம் என்று பெயர். அருணர் - கேது என்ற மஹர்ஷிகளால் தபோ பலத்தால் கண்டறியப்பட்டு, இந்த யாகம் அனுஷ்டிக்கப்பட்டதால், இதற்கு ஆருண கேதுக சயனம் என்று பெயர்.

சயனத்தின் ஸ்வரூபம்—பரிசுத்தமான ப்ரதேசத்தில் உத்தரவேதியில் ரதசக்ரம் போன்று, வர்த்துளமாக - தர்த்தம் (பள்ளம்) யஜமானனுடைய முழங்களால் அளவு தோண்டவேண்டும்.

(जानुदघ्नीमुत्तरवेदिं खात्वा) ।

அந்த பள்ளத்தில் கணுக்கால் அளவுக்கு ஜலத்தை நிரப்பி, முதலில், தாமரை இலைகளால் நன்கு மூடி, அடுத்தபடியாக தாமரைத் தண்டுகளாலும், பிறகு, ஸமூலமான தாமரைச் செடி

களாலும் (வேர், தண்டு, இலைகள், புஷ்பம்) மூட வேண்டும். அந்த இடத்தில் நீண்ட மரப்பலகையால் ஒரு மஞ்சம் (பீடம்) அமைக்கவேண்டும். அதன்மேல் விதிப்ரகாரம் செய்யப்படும் கர்மாவுக்கு அனுகூலமான அக்னியை ப்ரணயனம் செய்து, (ஸ்தாபித்து) உபஸமாதானம் செய்து (நன்கு மூட்டி) மஞ்சத்திற்கு கீழே உள்ள இடத்தில் ஒவ்வொரு மந்திரத்தையும் சொல்லி இஷ்டகைகளை அடுக்கவேண்டும். பொதுவாக சயனத்திற்கு உபயோகப்படும் இஷ்டகைகள் 'சுக்கான்' என்று சொல்லப்படும். சயனத்திற்காக உள்ள லக்ஷணத்துடன், அளவுடன், களிமண்ணால் செங்கல் தயாரிக்கும் மரக்கட்டை போன்று செய்யப்பட்ட இதற்காக ஏற்பட்ட மரக்கட்டை வார்புகளைக் கொண்டு (கல்லறுத்து) செங்கல் தயாரித்து, சூளையிட்டு தயார் செய்யப்படும். இந்த ஆருண கேதுக சயனத்தில் இஷ்டகைகள் அவ்விதமன்று. ஜலத்தினாலேயே சயனம் செய்ய வேண்டும். ஜலத்தையே கல்போல் பாவித்துக் கொண்டு, கையினால் ஜலத்தை எடுத்து, மந்திரத்தைச் சொல்லி, சயனம் செய்ய வேண்டும் (அடுக்கவேண்டும்). அப்படிச் செய்யும் பொழுது ஜலம் சிதறி விடுமல்லவா. அதற்காக சிறுசிறு மண் குடுவைகள், சிறு ஸ்தாலி போன்ற மண் பாத்திரங்கள் தயார் செய்து, அதில் ஜலத்தை மொண்டு, விதிக்கப்பட்ட இடத்தில், கையினால நிமிர்ந்த நிலையில் அடுக்கவேண்டும். இந்த ஜலம்

கிணறு முதலிய ஜலாசயத்திலிருந்து எடுத்து வந்து தசாபவித்ரத்தினுல் (வஸ்த்ரத்தால்) வடிகட்டியதாக இருக்கவேண்டும். இந்த சயனத்தில் உபயோகிக்கப்படும் ஜலம் முழுவதும் மேற்கூறியபடி வடிக்கப்பட்டதாக இருக்கவேண்டும். சயனம் முடிந்த பிறகு, ப்ரணயனம் செய்யப்பட்ட அக்னியில், ஸங்கல்பிக்கப்பட்ட பசுபந்தம் முதலிய யாகத்தை அனுஷ்டிக்க வேண்டும்.

தைத்திரீய ஆரண்ய பாகத்தில் முதல் ப்ரச்னத்தைக் கொண்டு, ஸூர்ய நமஸ்காரம் செய்வது, பானுவாஸரங்களில் பாராயணம் செய்வதானது இந்த ப்ரச்னத்தில் விதிக்கப்பட்ட "ஆருண கேதுக சயனம்" எனும் புண்ய கர்மானுஷ்டானத்தினுல் உண்டாகும் ஆரோக்யம், தீர்காயுஸ், நேத்ர பாடலம் (பார்வையில் அபரிமிதமான சக்தி) நல்ல புத்ர பாக்யம், பசுதன வ்ருத்தி, நல்ல வ்ருஷ்டி (மழை), சத்ரு ஜயம், வியாதி நிவ்ருத்தி, தேஜஸ், கீர்த்தி, ப்ரம்ஹவர்சஸ் முதலிய ஐஹிக ஸௌக்யங்களையும், ஸ்வர்கம் முதலிய ஆமுஷ்மிக ஸௌக்யங்களையும், இதையே நிஷ்காம்யமாக அனுஷ்டித்தால், சித்த சித்தித்வாரா உத்தம புருஷார்த்தமான ஜனன, மரண சுழலற்ற சுகஸ்வரூபமான மோக்ஷ சாம்ராஜ்யத்தையும் அளிக்க வல்லது. ஒரு கும்பத்தில் ஸ்ரீ சூர்ய பகவானை ஆவாஹனம் செய்து, ஷோடசோபசார பூஜை செய்து, நமஸ்காரங்களை

செய்து, நவக்ரஹ மந்தரத்தினுல் நமஸ்காரங்கள், நக்ஷத்ர அஷ்டவாக்யங்களால் நமஸ்காரம், இம்முறையில் ப்ரதிதினமோ அல்லது பானு வாஸரங்களிலேயோ ஜன்ம நக்ஷத்ரங்களிலோ, ச்ரத்தையோடும், பக்தியோடும் அனுஷ்டித்து வந்தால் பெற முடியாதது ஒன்றும் இல்லை.

अलङ्कार प्रियो विष्णु:, अभिषेक प्रिय: शिव:, नमस्कार प्रियोभानु:

என்ற வசனப்படி சூரியனுக்கு நமஸ்காரம் செய்வதினுல் ஸகல பாபங்களும் நீங்கி, தீர்க காலம் கண் ஒளி கொடுப்பார். ஸாக்ஷாத் விஷ்ணுவுக்கு சூரியன், சந்திரன் இருவரும் கண்களாக சொல்லப்படுகிறது. சூரியனை வழிபடுவதால் கண் ரோகத்திலிருந்து காப்பாற்றப்படுகிறது.

शरीरमाद्यं खलु धर्म साधनम्

என்று காளிதாஸன் சொல்லியபடி, எந்த விதமான தர்மானுஷ்டானத்திற்கும் சரீர ஸௌக்யம் மிகவும் அவசியம்.

आरोग्यं भास्करादिच्छेत्

என்ற வசனப்படி சூர்யனைக் குறித்து நமஸ்கரிப்பது மிக ஆரோக்யத்தை கொடுப்பதாகும்,

சூரிய நமஸ்காரம் வெறும் உடற் பயிற்சிக்காக செய்வது மட்டுமல்ல. அதனுடைய மஹிமை ஒருவர் தேக அஸௌக்யத்தால் மிகவும் படுத்த படுக்கையாக இருந்தால், அவருடைய ஸௌக்யத்திற்காக, மந்த்ரங்களுடைய அர்த்தத்தை அறிந்து, நியமத்தோடு சூர்ய நமஸ்காரம் பிறர் செய்தால் படுத்திருப்பவர் ஸ்வஸ்தமாகி எழுந்திருக்கிறார். இது மந்திரங்களுடைய சக்தியை குறிக்கிறது. யுத்தத்தில் வெற்றிபெற ராமாயணத்தில் அகஸ்த்யர் ஸ்ரீ ராமனுக்கு ஆதித்ய ஹ்ருதயத்தை உபதேசித்தார். இதுவும் சூர்யனுடைய மஹிமையே குறிக்கிறது. இந்த ப்ரச்னத்தில் மேலும் ஒரு விசேஷம் என்னவென்றால் नमो॑ नमस्पूर॑म् 13வது அநுவாகம் பூராவும் ஸ்திரீக்கு ப்ரஸவ வலி எடுத்த உடனே ஆரம்பித்து திரும்ப திரும்ப ப்ரஸவம் ஆகும் வரை ஜபிப்பது ஸுகப்ரஸவமாக ஏற்படுகிறது என்று பெரியோர்களின் கருத்து.

வாழ்க்கையில் நடைமுறையில், காலையில் சூர்யன் உதித்தால் தான் ஜீவராசிகள் சுறுசுறுப்புடன் அவரவர்கள் வேலையை தொடங்குகிறார்கள். தாவரங்களும் மலர்கின்றன. சூரிய கிரணங்கள் சம்பந்தமில்லாவிட்டால் ஜலங்கள் கெட்டுவிடும். கால சக்ரமான ராசி, வருஷம், அயனம், ருது மாதம், வாரம் திதி, க்ஷணம், முகூர்த்தம் இவைகளுக்கெல்லாம் சூர்யனே யஜமானன்,

இந்த ப்ரச்னத்தில் 8 சூர்யர்களும், அவைகள் எவ்வளவு விஸ்தீர்ணம், பூமியிலிந்து எவ்வளவு தூரம், எவர்கள் இந்த சூர்யர்களை நேரில் கண்டார்கள் என்பதையும் சொல்லப்பட்டுள்ளன. ஆயிரக்கணக்கான கிரணங்களையுடைய சூர்ய கிரணங்களில் மரீசீ என்ற கிரணம் ஜீவராசிகளுக்கு உயிர் தந்து அவரவர் வேலையைச் செய்ய தூண்டுகிறது.

सहस्रगुण मुत्स्रष्टुं आदत्तेहि रसं रवि:

என்பது போல் கோடை காலத்தில் ஜலம் வற்றுவது என்பது சூர்ய கிரணங்களால் உண்டாகி, அப்படி க்ரஹிக்கப்பட்ட ஜலங்கள் மேகங்களாகி காற்றும், மின்னலுடனும் மறுபடியும் ஆயிரக் கணக்கான மடங்கு அதிக மழை பொழிவது சூர்ய கிரணங்களையே ஆச்ரயித்து இருக்கின்றன. வஸந்த ருதுவில் மரங்கள் புதியதாக துளிர்விடும். யாகம், விவாஹம், உபநயனம் முதலிய மங்களகரமான கார்யங்களும், க்ரீஷ்ம ருதுவில் வெளுப்பு வஸ்தரம் தரித்து ருத்ரகணங்கள் ஜபமும், வருஷ ருதுவில் பயிரிடுவது முதலிய கார்யங்களும், சரத்ருதுவில், வருஷ ருதுவில் ஏற்பட்ட வியாதி, மழையினுல் உண்டான கஷ்டங்கள் நீங்கி தெளிவாக இருக்கும் நிலையும், ஹேமந்த, சிசிர ருதுக்களில் குளிரினுல் கஷ்டம் ஏற்படுவதும் சிசிர ருதுவில் இலைகள் பழுத்து உதிர்வதும் சூர்யனுடைய

ஆக்ஞையினால் நடைபெறுகின்றன. மேற்கூறிய ருதுக்களின் ஸ்வபாவத்தை அறிந்து, அந்தந்த காலங்களில் விதிக்கப்பட்ட அனுஷ்டானங்களை எவர் ஒழுங்காக கடைப்பிடிக்கின்றனரோ, அவர் ஸம்ருத்தியை அடைகிறார். இந்த ப்ரசுரத்தில் ஆருணகேதுக சயனம், சூர்ய நமஸ்கார மந்திரங்கள் ருக் ருக்காக அர்த்த சுருக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஆஸ்திக அன்பர்கள் அனைவரும் இவ்வறிய நூலை சிறத்தையோடு படித்து பயன் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஸ்ரீ:

தைத்திரீய ஆரண்யகம்

(ஸூர்ய நமஸ்கார ப்ரச்னம்) அர்த்த சுருக்கம்

गुरु चरण सेवावाप्त विद्या प्रसाद:
परिमित विषयज्ञ: स्वल्पविद्योपि नूनम् ।
मतिविशद सिध्यै मन्द बुध्यापियुक्त:
विलिखाति सुनिबन्धं सौरमन्त्रार्थं सारम् ॥

(குரு சரண ஸேவையினால் கல்வியில் தேர்ச்சி பெற்றவரும், அளவுகுட்பட்டு விஷயங்களை அறிந்தவரும், சிறிது அளவு கல்வி பெற்றவருய் இருந்தாலும், மந்த புத்தியுள்ளவனாக இருந்தாலும், புத்தியின் தெளிவுக்காக சூரிய நமஸ்காரம் மந்திரங்களின் அர்த்த ஸாரத்தை ஒரு சிறிய கட்டுறையாக எழுதுகிறார்.)

அனுவாகம்—1

भद्रङ्कर्णेभि:......सन्दृशि ॥

இதில், முதல் இரண்டு ரிக்குகள் சாந்த்யர்த்தம் படித்து, இந்த இரண்டு ரிக்குகளால் இரண்டு இஷ்டகைகள் உபதானம் செய்யவேண்டும்.

भद्रं कर्णेभिः......यदायुः ।

முதல் ரிக் இந்த்ராதி தேவர்களே, (உங்களுடைய அனுக்ரஹத்தால்) வேதம் ஸ்ம்ருதி முதலிய மங்களகரமான சப்தங்கள் எங்களுடைய ஆசார் யாள், சிஷ்யர்கள், ரித்விக்குகள் யஜமானர் களாகிய எங்களுடைய காதுகளால் கேழ்ப்போ மாக. கேட்டு, யாகத்தில் யோக்யதையை (தகு தியை) உடைய நாங்கள், மங்களமான யக்ஞாதி களை எங்கள் கண்களால் நேரில் காண்போமாக அதாவது அனுஷ்டானம் செய்வோமாக, குறை வற்ற கண், காது முதலிய இந்திரியங்களோடு கூடிய சரீரத்தை உடையவர்களாக உங்களை ஸ்தோத்திரம் செய்து, அதன் பயனாக அபம்ருத்யு பயமின்றி ப்ரஹ்மதேவரால் கொடுக்கப்பட்ட பூர்ண ஆயுஸ்ஸுடன் வாழ்ந்து கொண்டு வெகு காலம் நல்லவைகளைக் கேட்டுக் கொண்டிருப் போமாக,

स्वस्ति न इन्द्रो वृद्ध श्रवाः......दधातु ।

மஹநீயர்களான வ்ருத்தர்களால் (முன்னோர் களால்) புராணாதி க்ரந்தங்களில் கொண்டாடப் படும் இந்திரன் நமக்கு வேதாத்யயனம் வேத ச்ரவ ணம், வேதோக்த கர்மானுஷ்டானம் இவைகளின் க்ஷேமத்தை அனுக்கிரஹிக்க வேண்டும். ஸர்வ க்ஞரான பூஷா எங்களுக்கு மங்களத்தை அருளட்

டும். மரத்தாலான ரதசக்ரத்தின் (வண்டி சக்ரத்தை) சிதராமல் இரும்புகட்டு காப்பாற்றுவது போல், அஹிம்ஸா தர்மத்தை பரிபாலனம் செய்துவரும் கருடன் நமக்கு மங்களத்தைச் செய்யவேண்டும். ப்ருஹஸ்பதியும் ப்ரஹ்மவர்ச்சஸ்ஸைப் பாதுகாத்து மங்களத்தை அருள வேண்டும்.

आपंस्रापी என்பது முதல் वस्त्रं देवी: ।

என்பதுவரையிலான महानाम्नीः என்ற நாமதேயமுள்ள (பெயர் உள்ள) ஐந்து மந்தரங்களால் உஷ்ணோதகம் நிரம்பிய மண்குடுவைகளை உபதானம் செய்யவேண்டும்.

आपस्वापामप:......सहसंचस्करर्द्धिया ।

அக்னி, வாயு, சூரியன் இவர்களுடைய அனுக்கிரஹித்தால் இந்த லோகத்திலிருந்தும், ஸ்வர்க்க லோகத்திலிருந்தும் ஆங்காங்கு உள்ள கங்கை, காவேரி, ஸரஸ்வதி, யமுனை, கோதாவரி முதலிய புண்ய தீர்த்தங்களிலிருந்து நல்ல ஜலத்தை அடைந்துள்ளோம். இந்த ஜலத்தை அக்னி முதலிய தேவர்களோடு சேர்ந்து கொண்டு மேலும் குணமுள்ளவைகளாகச் செய்கிறேன்.

वात्वश्वारश्मिपतयः......पुत्रवत्वाय मे सुत ।

ஹே ஜலங்களே (தீர்த்தங்களே) நீங்கள் வாயு தேவரை குதிரையாகக் கொண்ட ஸூர்ய ரச்மிகளால் சுமந்து வரப்பட்டவர்கள் (கொண்டு வரப்பட்டவர்கள்.) ஸூர்ய கிரணங்கள் உங்களுக்கு ஆதாரமான சரீரம். ஸ்வச்சமாக பிரகாசிப்பவர்கள். ஒருவருக்கும் கெடுதல் செய்யாதவர்கள். உலகங்களை உண்டு பண்ணுகிறவர்கள். இவ்வளவு மஹிமையுள்ள நீங்கள், நான் நல்ல புத்ரர்களுடன் புத்ரவானாக இருப்பதற்கு அனுக்கிரஹிக்க வேண்டும்.

महानाम्नीर्महामानाः......पुत्रवत्वाय मे सुत ।

ஹே தீர்த்தங்களே, நீங்கள், ஸர்வ பலப்ராப்திக்கு ஸாதனமானவர்கள். ஆகையால் மஹத்வம் பொருந்திய நாமாக்களையுடையவர்கள். அதிகமான பூஜ்யதையை உடையவர்கள். ஸர்வ கர்மாக்களிலும் யாவற்றுக்கும் சுத்தியை அளிப்பதால் ஸமஸ்த பூஜாதிகர்மாக்களும் தங்கள் ஆதீனம். எல்லோருக்கும் ச்ரத்தையை உண்டு பண்ணும் காரணத்தால் (முறையில்) ஸமஸ்த தேவதா பூஜாதிகளுக்கு காரண பூதர்கள். உதகத்தினால் தானே, பூஜைகளில் அர்க்ய பாத்யாதிகளை ஸமர்ப்பிக்க முடியும். ..பிரகாசமானவரின்

மேகத்தினுல் அழைத்துவரப்பட்டவர்கள். அத்த கைய நீங்கள், நான் ஸத்புத்ரவானுக இருப்பதற்கு அநுக்ரஹம் செய்யவேண்டும்.

अपाग्न्युष्णिमपारक्षः.....अपदेवीरितोहित ।

பிரகாசமான ஜலங்களே! நீங்கள் உண்டு வாழும் ஜனங்களை வாட்டுபவரும், ஹிம்ஸிப்ப வரும், அவர்களின் வீடுகளை தஹிப்பவருமான, ஹிம்ஸிக்கும் அக்னியையும், ஜ்வரத்தைக் கொடுக் கும் அக்னியையும் விலக்கியருள வேணும். ஜ்வராதிகளுக்கு காரணமான பாபத்தையும் தாரித்ரியத்தையும் போக்கி ரக்ஷிக்க வேண்டும்.

वज्रं देवीरजीता᳚ऋ...योनिनोर्ध्वमुदीषत ।

ஹே ஜலங்களே, தேவர்களுக்கும் ப்ரோக்கர் களான நீங்கள், எங்களை ரக்ஷிப்பதற்காக வஜ்ரா யுதத்தை ஆகாசத்தில் உயர்த்துங்கள். எங்களை ரக்ஷிக்கும் நிலையில், சத்ருக்களால் ஜயிக்க முடி யாத நிலையில், எங்களை உயர்த்தி ரக்ஷிக்க வேணும், எங்களுக்கு உபயோக வஸ்துக்களான பசு முதலியவைகளையும் அபிவ்ருத்தி செய்து ரக்ஷிக்கவேண்டும். மேலும் ஸமஸ்த தேவர்களை யும், மாதாவான அதிதி தேவியையும் எங்களுக்கு நன்மை அளிப்பவர்களாகச் செய்து அனு க்ரஹிக்க வேண்டும்,

शिवानश्शन्तमा भवन्तु । दिव्या आप ओषधयः ।

என்னும் மந்திரத்தைச் சொல்லி ஒஷதிகளோடு கூடிய அபிஷ்டகைகளை மண் குடுவையிலுள்ள ஜலங்களை அத்வர்யுவிடம் கொடுக்கவேண்டும். அத்வர்யு இதைப் பெற்றுக் கொண்டு மேற் கூறிய மந்திரத்தை சொல்லி உபதானம் செய்ய வேண்டும். மந்த்ரார்த்தம்—த்யு ஸம்பந்தமான தீர்த்தங்களும், வ்ரீஹி, யவை முதலிய ஒஷதி களும் எங்களுக்கு நன்மை அளிப்பவைகளாக ஆகட்டும்.

सुमृडीका सरस्वति । माते व्योम संदृशि ॥

ஏரி, பெரிய குளங்களுடன் கூடி - பூமி ரூப மான ஹே இஷ்டகையே, நீங்கள் நன்கு சுகத் திற்கு காரணமாக இருக்கவேண்டும். ஸஸ்யாதி களால் மறைக்கப்பட்டுள்ளதால் இடைவெளி (வரட்டு பூமி) காணப்படவேண்டாம். செழுமை நிரம்பியதாக இருக்கவேண்டும் என்பது தாத்பர்யம்.

அனுவாகம்—2

स्मृतिः प्रत्यक्षमैतिह्यम्......दद्यात् ॥

இந்த அனுவாகத்தில் உள்ள எட்டு ருக்குகள் (மந்திரங்கள்) ப்ராம்மணத்தில் சொல்லப்பட்

மந்திரம் தான். இஷ்டகைகளை உபதானம் செய்ய வேண்டும்.

स्मृतिः प्रत्यक्षमैतिह्यम्...सर्वैरेव विधास्यते ।

மன்வாதி ஸ்ம்ருதிகள், ப்ரத்யக்ஷமாய் கேட்கப்படும் ச்ருதிகள், இதிஹாஸம், புராணம், ராமாயணம், மஹாபாரதம் முதலிய இதிஹாஸங்கள்—சிஷ்டாசாரம் இந்த ப்ரமாணங்களால் ஆதித்ய மண்டலம், அதன் ப்ரவர்த்தனம், அதனால் ஏற்படும் மன்வந்தராதி காலப்ரமாணங்கள், யுகாதி க்ரமேண ஏற்பட்ட ஸ்ருஷ்டி ப்ரகாரங்கள் முதலியன தெரிந்து கொள்ளப்படுகிறது. ஹே இஷ்டகையே, நீ அத்தகைய ஸௌர்யமண்டல ஸ்வரூபிணியாக இருக்கிறாய்.

सूर्यो मरीचिमादत्ते...स्मृतं कालविशेषणम् ।

இந்த ஸௌர்ய பகவான் ஜகத்ஸ்ருஷ்டியாரம்பத்தில் எல்லா வ்யவஹாரத்திற்கும் ஹேதுவான தன்னுடைய கிரணத்தால் ஸகல பதார்த்தங்களிலும் ரஸம், வீர்யம், அதன் விகாரங்கள் யாவற்றையும் ஏற்படுத்தி ப்ராணிவர்க்கங்களுக்கு அனுக்ரஹம் செய்கிறார். அந்த ரச்மியின் உஷ்ண விசேஷத்தால் அந்தந்த பதார்த்தத்தில் ஏற்படும்

விகாரத்தால் (மாறுபாட்டால்) விதையின் பாக
தால் அங்குரம், காண்டம் (முளை, தண்டு) இலை
கிளை, புஷ்பம், பழம் என்னும் முறையில் காலத்
ஞல் ஏற்பட்ட விகாரத்தால் க்ஷணம், முகூர்த்த
ஜாமம், நாள், மாதம், ருது, ஸம்வத்ஸரம் முதலி
கால பேதங்கள் யாவும் அறியப்படுகிறது.

नदीव प्रभवात्काचित्......सोऽस्सर्ती न निवर्तते ।

முன் மந்திரத்தில் கூறப்பட்ட ஸம்வ
ஸராத்மக கால ஸ்வரூபத்திற்கு த்ருஷ்டாந்த
காண்பிக்கப்படுகிறது. ஸதாகாலமும் ஜல
தோடு கூடிய உற்பத்தி ஸ்தானத்திலிருந்
கோதாவரி முதலிய மஹா நதிகள் ப்ரவஹித்து
செல்கின்றன. இந்த மஹா நதியில் பல சிறி
நதிகள் (சிற்ருறுகள்) வந்து சேர்ந்து மிகவு
விஸ்தாரமாகப் பெருகிக் கொண்டு, ஜீவநதியா
சாச்வதமாக இருந்து வருகிறது.

एवन्नाना समुत्थानाः...सर्वसमवयन्त्विरम् ।

சிறிய நதிகள் மஹா நதிகளோடு சேர்ந்
ப்ரவஹிப்பது போன்று, காலத்தின் சிற
அவயவங்களான, க்ஷணம், முஹூர்த்தம், தினம்
பக்ஷம், மாஸம் முதலிய சிறிய காலாவயவங்கள்
ஸம்வத்ஸரமான மஹா காலத்துடன் சேர்ந்
சாச்வதமாக நடந்து வருகின்றன.

सर्वैस्संवर्स्समाविष्टः...तदेवलक्षणे ।

இத்தகைய மஹாகால ஸ்வரூபியான ஸம்வத்ஸரத்மகமான காலத்தின் அதீனமாகத்தான் ஸர்வ ஜகத்தும் விளங்கி வருகிறது.

अणुभिश्च महद्भिश्च...नाधिसत्वः प्रदृश्यते ।

இவ்விதம் க்ஷணாதிகளோடு சேர்ந்த ஸம்வத்ஸாரத்மக கால ஸ்வரூபமானது ப்ரத்யக்ஷமாக காணப்படுகிறது. ஆனால் காலஸ்வரூபம் இதற்கு அதீனமான ஸர்வஜகத், எல்லாவற்றிற்கும் காரணமாயும், எல்லாவற்றிற்கும் அதீதமானதும், நித்யமானதும், அவயவமற்றதுமான பரமாத்மா தான் எல்லாவற்றிற்கும் உத்பாதகர். இத்தகைய பரமாத்மா சாஸ்திரத்தின் மூலம்தான் அறியத் தகுந்தது.

पटरो विश्लिघः पिङ्गः...सहस्रं तत्र नीयते ।

பரமாத்மாவை ஏன் கண்ணால் காணமுடியவில்லை எனில் நம்முடைய பௌதிக சக்ஷுஸ் பரமாத்மாவை மறைக்கும் திரைச் சீலையாக இருக்கிறது. இந்த பௌதிக சக்ஷுஸ் சர்மா (தோல்) ஸர்வதா நீர் நிரம்பிய தன்மை, பலபல வர்ணங்கள் பொருந்திய தன்மை. ஆகவே திரையாகவே

ஆகிவிடுகிறது. தீபத்திற்கு திரைச்சீலே இட்டது போல, பரமாத்மாவை மறைத்து விடுகிறது. சாஸ்திர த்ருஷ்டியாகிற திவ்ய சக்ஷுஸ்ஸால் அறிய முடியும். இந்த காலஸ்வரூபி க்ஷணம், முகூர்த்தம், தினம், மாஸம் என்று பலவிதமாக வ்யவஹரிக்கப்படுகிருர்.

एकं हि शिरो नाना मुखे......जल्पितं त्वेव दिहृते ।

வ்யவஹாரத்திலுள்ள இந்த காலஸ்வரூபத்திற்கு ஸம்வத்ஸரம்தான் சிரஸ்தானீயம் (சிரஸ் போல) முக்யமாகவுள்ளது. தக்ஷிணுயணம், உத்தராயணம் இரண்டும் முகங்கள். இவ்வளவும் சேர்ந்த முழுஸ்வரூபம் தான் ருதுக்களே ஞாபகப்படுத்துகிறது. இந்த முகஸ்தானமான இரண்டு அயனங்களிலிருந்து ஏழு இந்திரிய த்வாரங்களோடுகூடிய சரீரங்கள் உண்டாகின்றன. (இரண்டு கண்கள், இரண்டு காதுகள், இரண்டு நாஸிகைகள், ஒருவாய்—ஏழு இந்திரியங்கள்) ஆனுல் இவ்வளவு வ்யவஹாரங்களும் ப்ரமையே. சாஸ்திர முகமாக பார்க்கும் பொழுது இவை அவ்வளவும் பொய்யே.

"वाचारम्भणं विकारोनामधेयं वेहनामास्त-किचंन । मायामात्रमिदंद्वैतम् ॥

எல்லா பதங்களின் அர்த்தங்களும் வாக்குனுல் மட்டும் கூறப்படுகின்றன. விகாரங்கள்

பெயர் மாத்ரந்தான். காரண ஸ்வரூபமான பரமாத்ம ஸ்வரூபத்தில் ஆத்மாவைத் தவிர்த்து த்விதீயபத அர்த்தமே கிடையாது. த்வைத மாகப்படுவது யாவும் மாயா மாத்ரந்தான். இந்த வ்யாவஹாரிக காலவிஷயமாக ப்ராஹ் மணம் இவ்விதம் கூறுகிறது. இந்த ஸம்வத்ஸர ஸ்வரூபத்தில் ராத்ரி, பகல் இரண்டும் உள்ளன. இந்த விபரம் கீழே சொல்லப்படுகிறது.

शुक्लकृष्णे संवत्सरस्य......तस्यैषा भवति ।

शुक्रन्ते अन्यद्यजतन्ते अन्यत्...भद्रातेपूषन्निहरस्विति ॥

ஹே ஜகத்போஷகரான ஸம்வத்ஸர தேவ தையே, தங்களுடைய அம்சரூபமாக ச்வேத வர்ணமான பகலும், க்ருஷ்ண வர்ணமான இரவும் தனித்தனியே இருக்கிறது. இவை பரஸ்பர விலக்ஷணமானவை. இவைகளு மத்தியில் நீங் கள் இருக்கிறீர்கள். இவைகளை நடத்துபவராக விளங்குகிறீர். அன்னவானுன ஹே ஸம்வத்ஸர தேவதைத்யே! இந்த மாயையினுல் உண்டான பக்ஷ, மாஸாதிகளை ரக்ஷிக்கிறீர். ஹே பூஷதேவ தையே, நாங்கள் செய்யும் இந்த கர்மாவில் தங் களுடைய ராத்ரியானது நல்ல பலத்தை அளிக் கட்டும். இந்த மந்த்ரத்தை சொல்லி ஒரு இஷ்ட கையை உபதானம் செய்யவேண்டும். இதை ப்ரதிபாதனம் செய்யும் ப்ராம்மண வாக்யம்.

नाव भुवनम्...तमाहरणं दद्यात् ।

இந்த மந்திரத்தில் பாரமார்த்திக (உண்மை யான) தத்வம் வியாவஹாரிக (உலக வழக்கில் உள்ளது) தத்வமும் பிரித்து காண்பிக்கப்படு கிறது. பரமார்த்திக தத்துவத்தில் பூஷா எனும் தேவதையே! புவனமோ, ஸம்வ்த்ஸரமோ கீழே சொல்லப்பட்ட யாவுமோ, பசுக்களோ, ஆதி யனே ஒன்றுமே கிடையாது. ஆனால் கீழே சொல்லப்பட்ட ஸம்வத்ஸராதிகள்தான் உண்மை யான சாஸ்திரங்களை அறியாதவர்களுக்கு பிரியமானவை. ஆனால் இந்த பாரமார்த்திக தத்வத்தை ஜனங்களுக்கு உபதேசிக்க வேண் டாம். இந்த ப்ரியதமங்களையே கூறி இந்த கர்மானுஷ்டானத்தை செய்யுங்கள் என்று உப தேசிக்க வேண்டும்.

அனுவாகம்—3

साकंजानां......इत्यर्थः ॥

இந்த அனுவாகத்திலுள்ள 11 மந்த்ரங்களால் 11 அபிஷ்டகைகள் உபதானம் செய்யவேண்டும்.

साकंजानाँ सप्तथमाहुरेकजम्...विकृतानि रूपशः ।

ஸூர்ய மண்டலத்திலிருந்து ஏழு ரச்மிகள் சேர்ந்தால் போல் உண்டாகின்றன. ஆனால் இவை

களுள் ஏழாவது ரச்மி மரீசி பிரதானமானது. முதலிலேயே உண்டானது இதுதான்

सूर्योमरीचिमादत्ते

என்று முன் அனுவாகத்தில் கூறப்பட்டது. ஸகல ஸ்ருஷ்டிக்கும் காரணமாயுள்ளது. மற்ற ஆறு ரச்மிகளும் பிரகாசத்தோடு கூடியதால் ரிஷிகளுக்கு ஸமானமானவை. இந்த ஆறு ரச்மிகளும் (கிரணங்களும்) தயிர், பால்வைக்கும் உரியின் பிரதானமான மேல் பாகத்திற்கு, தொங்கும் கயர்கள் ஸஹாயமாக இருப்பதுபோல், முக்யமான ஏழாவது ரச்மிக்குக்கு ஸஹாயமானவை இந்த ஆறு ரச்மிகளுக்கும் தனித்தனியாக ஸ்தானங்கள் உள்ளன. இவைகள் ஆறு ருதுக்கள். இவைகள் வஸந்தம், க்ரிஷ்மம் எனும் க்ரமத்தில் நிகழ்ந்து கொண்டு உலகவாழ்க்கைக்கு வேண்டிய குளிர்ச்சி, உஷ்ணம், மழை, காற்று முதலியவைகளை உற்பத்தி செய்து உலகத்தை ரக்ஷிக்கின்றன.

कोनु मर्या अमिथितः...जहाको अस्मदीषते ।

அவச்யம், பாவி மரணத்தோடு ஸம்பந்தமுள்ள மனுஷ்யர்களே, நான் சொல்லும் (உபதேசிக்கும்) வசனங்களை எல்லோரிடமும் சொல்

லுங்கள். எதை? பரஸ்பரம், த்ரோஹ எண்ணம் இல்லாது இரண்டு ஸ்நேஹிதர்கள் இருக்கிறார்கள். இவ்விருவர்களுள் மற்றவரால் - பாதிக்கப் படாத மற்றவர், தன் ஸ்நேகிதர் இடத்தில் மூன்றாவது ஸ்நேஹிதரைப் பற்றி இவ்விதம் கூறுகிறார். (இதோபார்). இவர் எனக்கு துரோஹம் செய்துவிட்டு "நான் இதற்கு பிரதியாக ஏதாவது செய்துவிடுவேனோ என்னும் எண்ணத்தில், பிரிந்து செல்லும் குணத்தையுடையவரான இவர் என்னிடம் பயந்து கொண்டு ஓடுகிறார். ஆனால் இது சரியானது அல்ல. ஏன் "அவர் நமக்கு துரோஹம் இழைத்துவிட்டார்", ஆகையால் நாமும் இவருக்கு துரோகம் இழைக்கவேண்டும் எனும் மனோபாவம் உள்ளவர்களிடந்தான் இந்த ஸம்பவம் நேரிடும். ஆகவே இது ஸரியான ஸ்நேஹபாவம் ஆகாது. இரு ஸ்நேகிதர்களுக்குள் மற்றவர் துரோஹம் இழைத்தாலும் பிரதி செய்யாதவராக இருக்கவேண்டும். நன்மையே செய்ய வேண்டும். அப்படியிருந்தால் அவரே உணர்ந்து கொள்வார். விரிசலுக்கே இடம் இல்லாமல் போய்விடும். "என்னிடம் பயந்து கொண்டு விலகி ஓடுகிறார்" என்னும் பேச்சே உண்டாகாது. நட்பு அத்தகையதாக அமையவேண்டும் என்பது தாத்பர்யம்.

यस्तित्याज सखिविदं सखायम्.....सुकृतस्य पन्थामिति।

எந்த ஒரு. துஷ்ட ஸ்வபாவமுள்ள மனிதன் தன்னை (இந்தப் பேர்வழியை) "தன்னைச் சேர்ந்த

வன் நம்முடைய ஸகா என்று எண்ணி விசுவாஸத்துடன் இருக்கிருனே அந்த நல்ல ஸ்வபாவமுள்ளவனை விட்டுவிடுகிருனே—அவனுக்கு துரோகம் இழைக்கிருனே—அத்தகைய க்ரூரன் (பெரியோர்கள் புரியும் ஆசீர்வாத பாக்யத்திற்கு பாக்யமில்லாதவன்) இந்த ஸகித்ரோஹிக்கு, வேத சாஸ்திர அத்யயனத்தில் கூட பாக்யம் கிடையாது—வேதங்களால் விதிக்கப்பட்ட கர்மானுஷ்டானத்திலோ அதன் பலனிலோ பாக்யமேது?

இவன் வேத வாக்யங்களை கேழ்க்கின்றுனே வெனில் அதுவும் பொய்யாகத்தான், நம்பிக்கையில்லாமல் தான் கேட்கிருன்—மித்ரத்ரோஹம் செய்பவன் வேதத்ரோஹிதான்—இவன் புண்ய மார்க்கத்தையே அறியமாட்டான். இவ்விடத்தில் இரண்டு தத்வார்த்தங்கள் கூட சொல்லப்படுகிறது.

1. நமக்கு நன்மை புரிவதற்காகவே - பகவானுல் அனுக்கிரஹிக்கப்பட்ட வேதத்தை, வேத மார்க்கத்தை த்யாகம் செய்தவன் சிறிது கூட நன்மையைப் பெறமாட்டான். ஆகவே முடிந்த வரை வேதத்தை அத்யயனம் செய்யவேண்டும். யதா சக்தியாவது வேத கர்மாக்களை அனுஷ்டிக்க வேண்டும்.

2. இந்த ப்ரகரணம் ஸூர்யப்ரதிபாதகத்தை முக்யமாகக் கொண்டது. ஆதித்ய பகவான் நம்

எல்லோருக்கும் ஆப்த ஸ்நேகிதருக இருந்து கொண்டு நமக்கு வேண்டிய பதார்த்தங்களை உண்டுபண்ணிக் கொடுத்து பரோபகாரம் செய்து வருகிறார். இதை ப்ரத்யக்ஷமாகக் காண்கிறோம். இந்த ஸூர்ய பகவானை நாம் நம்முடைய ஸந்த்யோபாஸநமாகிற நித்யோபாஸனத்தால் ஆராதிக்கவேண்டும் என்று வேதமாதா உபதேசம் செய்துள்ளாள். ஸந்தயோபாஸனம் செய்யாவிடில் மித்ரத்ரோஹம் (மித்ர-ஸூர்யன்) ஸகித்ரோஹம் (வேதத்ரோஹம்) எனும் பெரிய பாபத்தைச் செய்தவர்களாகிறோம். ஆகவே அவசியம் ஸந்த்யோபாஸனம் செய்யவேண்டும். ஸ்வாத்யாய ப்ராஹ்மணமான

सह वै देवानां च ப்ரச்னத்திலும்

यस्तित्याज सखिविद॒ँसखायम्

எனும் பாஷ்யத்திற்கும் இந்த ரீதியில்தான் தாத்பார்யம் என்பதை ஸாயனர் ப்ரதர்சனம் செய்துள்ளார். இந்த மந்திரம் சாகாந்தரத்தில் உள்ளது என்பதை 'इति' சப்தம் போதிக்கிறது.

ऋतुरृतुना नुद्यमानः...शुक्लकृष्णौ च षाष्टिकौ ।

...ஸம்வத்ஸரத்தில் அந்தர்பூதமான வஸந்தாதி ருதுக்களின் லக்ஷணமும், அதனதன் ஸ்வபாவ

டும், அதன் ப்ரவர்த்தியும் கூறப்படுகிறது. 30 முகூர்த்தங்கள் கொண்டது ஒரு தினம். ஒரு முகூர்த்தம் இரண்டு நாழிகைகள் கொண்டது என்னும் முறையில் சொல்லப்பட்டுள்ளது. இம்மாதரி 60 தினங்கள் ஒரு ருதுவுக்கு, இதில் 15 முகூர்த்தங்கள் 30 நாழிகைகள் சுக்லம் பகல், 15 முகூர்த்தங்கள் (30 நாழிகைகள்) க்ருஷ்ணம் இரவு. இதுபோன்று 15 தினங்கள் சுக்லபக்ஷம், 15 தினங்கள் கிருஷ்ணபக்ஷம். 60 நாட்கள் கொண்ட ஒரு ருது பூர்த்தியானதும், அடுத்த தினத்திலேயே அடுத்த ருதுவின் ஆரம்பம் ஸ்பஷ்டமாக ஏற்பட்டுவிடும். ஞாயிறு சென்றதும் திங்கள்போல, நடுவில் இடைவெளியே இருக்காது, அதாவது 60 நாட்களில் உள்ளன. ருது ஸ்வபாவம் அன்றோடு பூர்த்தியாகிவிடும். அடுத்த ருதுவின் முதல் தினத்தில் அடுத்த ருதுவின் ஸ்வபாவம் தோன்றிவிடும். அதாவது அடுத்தடுத்து அடுத்த கால ஸ்வபாவத்தை தோற்றிவித்துக் கொண்டே கால சக்கரம் சுழன்று கொண்டிருக்கும்.

सारागवस्वैर्जरदक्षः...प्रैषकृत् प्रथमस्स्मृतः ।

வஸந்த ருதுவின் ஸ்வபாவம் (லக்ஷணம்) இரண்டு மந்திரங்களால் தெரிவிக்கப்படுகிறது. எல்லா பதார்த்தங்களையும் முறைப்படி உத்பத்தி செய்கின்ற ஸம்வத்ஸர தேவதைக்கு, இந்த

ருதுக்கள் ஆக்ஞா காரிகள் (பணியாட்கள் போலுள்ளவர்கள்) இவர்களுள் வஸந்த ருது அபிமானி தேவதை முக்யமானவர், முதன்மை யானவர். இவர் ப்ரஜைகளின் நல்வாழ்வுக்கு காரண பூதர்களான சாயம் தோய்த்த வஸ்த்ரங் களை தரித்த அஷ்ட வஸுக்கள் என்னும் தேவர் களோடு ஸம்வத்ஸர தேவதைக்கு ஆக்ஞாகாரி கள். இந்த வஸந்தர் ஜலங்களை ஸ்வச்சமாகச் செய்வதில் ஸமர்த்தர். இந்த காலத்தில் ஜலம் தெளிவாகவும், ஸ்வச்சமாகவும் இருக்கும் என்பது தாத்பரியம்.

अमूनादयतेत्यन्यान्...यत्रैतदुपदृश्यते ।

வஸந்த ருதுவில் உபநயனம் முதலிய மங்கள கர்மாக்களை நடத்துவது என்பது (சாஸ்திரங் களில்) கல்ப ஸூத்ரங்களில் கூறப்பட்டுள்ளது. வஸந்த ருதுவில் அக்னியாதானம், ஜ்யோதிஷ் டோமம் முதலிய சிரௌத கர்மாக்கள் விதிக்கப் பட்டுள்ளது. இவைகளுக்கு வரும் பந்துக்களை யும் வெளியூர்களிலிருந்து வந்துள்ள மஹான் களையும் உபசரித்து போஜனம் செய்து வையுங் கள். வந்த மஹநீயர்களை தனதான்யங்களைக் கொடுத்து ரக்ஷியுங்கள் என்பது போன்ற வசனங் கள். இந்த மாதிரியான வாக்யங்கள் இந்த ருது வில் விசேஷமாக கேட்கப்படும்.

एतदेव विजानीयात्...ऋतूनान्तन्निबोधत ।

வஸந்த ருதுவுக்குச் சொல்லப்பட்ட 60 நாட்கள் முதலியவைதான் எல்லா ருதுக்களுக்கும். வஸந்த ருதுவுக்குக் கூறப்பட்ட அஸாதாரண தர்மம் தனிப்பட்ட சிறப்பம்சங்களை சொல்லுகிறோம், தெரிந்து கொள்ளுங்கள். ''ஒவ்வொரு ருதுவும் வஸந்த ருது போன்ற கால பரிமாணத்தைக் கொண்டது என்பது பொது. அதற்குத் தனியான குணங்கள் உள்ளன.

शुक्लवासा रुद्रगणः...ज्योतिषाप्रतिख्येन सः ।

இதில் க்ரீஷ்ம ருதுவின் ஸ்வபாவம் சொல்லபடுகிறது. க்ரீஷ்ம ருதுவின் அபிமானி தேவதை சுக்ல வஸ்த்ரமணிந்து ஏகாதச ருத்ரர்களோடு ஸம்வத்ஸர தேவதையின் ஆக்ஞைகளை நிறைவேற்றுகிறார். இந்தக் காலத்தில் மிகவும் கடுமையாக ஜ்யோதிஸ்ஸால் (அதிக தாபத்தால்) பூமி காய, மிகவாட்டுகிறார். இதைக் கொண்டு இது கிரீஷ்ம காலம் என்பதை அறிந்து கொள்ளலாம்.

विश्वरूपाणि वासाँसि...वर्षाभिर्ददताँ सह ।

இது முதல் நான்கு மந்த்ரங்கள் ''வர்ஷ'' ருதுவின் விசேஷங்களை ப்ரதிபாதனம் செய்

கின்றது. அடுத்த வர்ஷ ருது வரையில் க்ருஷி யினுல் வேண்டிய பதார்த்தங்களை வர்ஷா ருது தேவதையோடு ஜனங்களுக்கு உண்டுபண்ணிக் கொடுத்து உபகாரம் செய்யும் த்வாதச ஆதித்யர் கள் விசித்ர வர்ணங்கள் பொருந்திய வஸ்த்ரங் களை அணிந்துள்ளவர்கள்.

अदुःखो दुःखचक्षुरिव...रुरुदक्ष इव दृश्यते ।

இந்த வர்ஷ ருதுவானவர் ஸ்வயம் துக்க வாணுக இல்லாவிட்டாலும் இந்த நாளில் ஏற்படக் கூடிய காமாலை முதலிய கண் ரோகத்தினுல் பீடிக்கப்பட்ட ஜனங்களால் யாவுமே மஞ்சளாகத் தான் பார்க்கப்படும். அந்த முறையில் இந்த வர்ஷ ருதுவும் கண்ரோகத்தினுல் பீடிக்கப்பட்ட வர் போல் காணப்படுகிருர். மழை, காற்றினுல் ஏற்படும் சீத பாதையினுல் (குளிரினுல்) வேதனைப் படுபவர் காணப்படுகிறது. உண்மையில் வேதனையில்லை. குளிர் காற்று உபத்ரவத்தை நல்ல போர்வையாலும் ''கணப்புச் சட்டி''யில் குளிர்காய்வதாலும், குளிர் உபத்ரவத்தை விலக்கிக் கொண்டு விடலாம் அல்லவா? அதனுல் தான் வேதனைப்படுபவர் போல் எனக் கூறப்பட் டுள்ளது. மேலும் இந்த வர்ஷ ருதுவில் ஆரண் யங்களில் புற்கள், இளந்தளிர்கள் அபரிதமாக இருக்குமாதலால் ''ருரு'' (ஒருவகை மான்

முதலிய மிருகங்கள் ஸஞ்சாரம் பஹுளமாக வனங்களில் காணப்படுகின்றது.

ह्लादयते ज्वलतश्चैव...संवत्सरात्ता भ्रंश्यन्ते ।

இந்த ருது ஜனங்களை மிகவும் ஸந்தோஷப் படச் செய்கிறது. நல்ல மழை பெய்துள்ளது. பயிர் செழிப்பாய் வளர்ந்துள்ளன. ஆகவே அடுத்த மழை நாள்வரை தேவையான தான்யாதிகள் நிரம்பக் கிடைக்கும் என்பது ஸந்தோஷ காரணம். ஓஷதிகள் யாவுமே பளபளவென்று பசுமையுடன் பளபளப்பாக பிரகாசிக்கும். உபத்ரவம் இல்லாமல் சாந்தமாக அமைந்திருக்கும் இந்த ருது புருஷனின் கண்கள். இதுவே ஜனங்களுடையவும் தன்மையாகும் என்பது தாத்பர்யம். எந்த ஜனங்கள், இந்த வர்ஷா காலத்தை க்ருஷியாதிகளால் பயன்படுத்திக் கொள்ளவில்லையோ அவர்கள் ஒரு வருஷத்திற்குத் தேவையான தான்யாதிகளை இழந்து விடுகிறார்கள்.

ब्राह्मणवाक्यम्

याः प्रसितिष्टन्ति...वर्षाभ्य इत्यर्थः ।

எவர்கள் இந்த ருதுவில் உழுது, விதை தெளித்து, க்ருஷி கர்மாவை நன்கு செய்கின்றார்களோ, அவர்கள் தான்யாதிகளை நன்கு நிரம்பப்

பெற்று வருஷம் பூராவும் அடுத்த வர்ஷா காலம் வரையிலும் ஸுகமாக வாழ்கின்றார்கள்.

அனுவாகம்: 4

अक्षिदुःखोत्थितस्यैव...आवृणे ।

இந்த அனுவாகத்தில் 6+1=7 இஷ்ட கோபதானம் விதிக்கப்படுகிறது. இரண்டு மந்த்ரங்களாலும் மேலும் அர்த்த (பாதி) ரிக்கினாலும் (4 பாதி மந்த்ரத்தாலும்) சரத்ருதுவின் விசேஷம் கூறப்படுகிறது.

अक्षिदुःखोत्थितस्यैव...ऋभूणान्तन्निबोधत ।

சரத்ருது வர்ணிக்கப்படுகிறது. வர்ஷருது வில் ஏற்பட்ட கண்ரோகம் சரத்ருது ஆரம்பித்ததும் நீங்கிவிடுகிறது என்று கூறப்பட்டுள்ளது. கண்ரோகம் நீங்கியதும், கருவிழி நிர்மலமாகவும் ப்ரஸன்னமாக ப்ரகாசிக்குமோ, அவ்விதம் மேக மூட்டங்கள் யாவும் நீங்கி உலகமும் ப்ரகாசிக்கின்றது. கண்ரோகம் நீங்கியதால் ஜனங்கள் கண்ணுக்கு மை தீட்டிக் கொள்ளுகிறார்கள். கண் பார்வையை மறைக்கும் பனி முதலியவை இல்லாததால் நன்கு பார்க்க முடிகிறது. இவ்வளவு பெருமையும் இந்த ருதுவின் தேவதை

களான ரிபுக்களின் ஸாமர்த்தியமே. அடுத்த மந்திரத்தில் ரிபுக்களின் அலங்காராதிகள் தெரிவிக்கப்படுகின்றன.

रुक्माभानि वासांसि...अहं वो जीवनप्रदः ।

இந்த ரிபு தேவர்கள் ஸ்வர்ணத்திற்கு ஒப்பான நூதனவஸ்த்ரம் தரித்தவர்கள் ஹே ஜனங்களே! இதைத் தெரிந்து கொள்ளுங்கள். எதை? புஷ்டிதரும் பக்ஷ்ய, போஜ்யங்களை இந்த ருதுவில் சாப்பிடுங்கள். சாப்பிட்ட உடன் கை, முகம் இவைகளை நன்கு அலம்பிக் கொண்டு சுத்தம் செய்து கொள்ளுங்கள். சரத்ருதுவாகிய நான் நல்வாழ்கையை அளிக்கிறேன்.

மூன்றாவது மந்த்ரத்தில் முன்பாதி

एता वाचः प्रयुज्यन्ते । शरद्यत्रोपदृश्यते ।

முன் கூறப்பட்ட வாக்யங்கள் சரத்ருதுவில் ப்ரயோகம் செய்யப்படுகின்றன (பேசப்படுகின்றன). இவைகளால் சரத்ருதுவை அறிந்து கொள்ளலாம்.

பின்பாதி

अभिधून्वन्तोऽभिघ्नन्त इव । वातवन्तो मरुद्गणाः ।

இனி ஹேமந்தருது வர்ணிக்கப்படுகிறது
இந்த ஹேமந்த ருதுவில், மருத்கணங்க
யாவற்றையும் அசைத்து நேரடியாகத்தாக்கு
சக்தியுள்ள பெருங்காற்றுகளோடு கூடியவ
களாக விளங்குகின்றன.

अमुतो जेतुमिषुमुखमिव...विशिखास: कपर्दिन: ।

வாயு லோகத்திலிருந்து இவ்விடம் வந்
வாயுக்கள் (வாயு தேவதைகள்) யுத்தகளத்தி
எதிரிகளால் எய்யப்பட்ட பாணங்களின், கூர்மை
யான அஸ்த்ரங்களை ஜயிப்பதற்காக (அதிலிருந்து
பாதுகாத்துக் கொள்ள) கவசங்களை அணிந்து
கொண்டு யுத்தத்திற்கு தயாரானவர்கள் போல
ஸஞ்சரிப்பவர்களாக காணப்படுகிறார்கள். அத
ுல் தான் ஜனங்களும் இந்த ருதுவில் சீதபாதா
களிடமிருந்து பாதுகாப்பிற்காக வேண்டாமென்று
தள்ளப்பட்ட நீர்க்காவி ஏறிய பழைய வஸ்திர
களால் கவசம் போன்ற சட்டைகளை தயா
செய்து அணிந்துக் கொண்டும், விதவிதமான
சிகைகளையும் சிகாபந்தத்தையும் உடையவ
களாகவும், தலைப்பாகைகளை உடையவர்களா
வும் காணப்படுகின்றனர். (வண்ணான்
வெளுத்தும் மெல்லியதுமான வஸ்த்ரங்கள்
குளிரிலிருந்து பாதுகாக்க முடியாத காரணத்த
ுல் கெட்டியான அழுக்கேறிய (நீர்காவி ஏறிய)

வஸ்த்ரங்களை இரண்டாக, மூன்ருக மடித்துப் போர்த்துக் கொண்டுள்ளார்கள்.

अक्रुद्धस्य योत्स्यमानस्य...अक्षणयोः क्षिपणोरिव ।

ஹேமந்த புருஷன் கோபிஷ்டனுக இல்லாமல் இருந்தாலும், மிகுந்த கோபத்தோடு யுத்தம் செய்கின்ற யுத்த வீரனுடையது போன்ற ரக்தம் போல சிவந்தவைகளாக இருக்கின்றன.

दुर्भिक्षं देवलोकेषु...वैद्युतो यान्ति शैशिरीः ।

சசிர ருதுவின் லக்ஷணம் சொல்லப்படுகிறது.

இந்த சிசிர ருதுவில், மழை இல்லாததால், அந்தரிக்ஷ லோகத்தில் (வானத்தில்) யாசிப்பதற்குகூட (சிறிதுகூட) ஜலம் துர்லபமே— மனுஷ்யர்களுடைய வீடுகளில், கிணறு முதலியவை இருப்பதால் ஜலம் உள்ளது. ஆகவே செல்லும் மார்க்கங்களில், ஜலத்திற்கு வசதி இல்லாததால் வீட்டுக் கிணறுகளிலிருந்துதான் ஜலத்தைப் பெறவேண்டும். கையில் ஜலத்தோடு செல்ல வேண்டும். இவ்விதமான வாக்யங்களைச் சொல்லிக் கொண்டு, மிக்க தாபத்தோடு பிரயாணம் செய்கின்றனர். மக்களின் இந்த ஜல கஷ்டத்தைப் பார்த்து அக்நி பகவான் இவர்களைக் குறித்து இவர்களுக்கு வேண்டிய ஜலத்தை

நான் காணவில்லையே இவர்களுக்கு என்ன ஏற்படப் போகிறதோ என்று கவலையுள்ளவராக ஆகிருர். இது ப்ராஹ்மண பாகத்தின் பொருள்.

இது ப்ராஹ்மண வாக்யம்

ता अग्निः पवमाना अन्वैक्षत । इह जीविकामपरिपश्यन् ।

तस्यैषा भवति । इहेहवस्वतपसः...शर्म सप्रथा आवृणे ॥

ஸந்தாபம் ஜலம் இவைகளின் ஸ்வதந்தரம் உள்ளவர்களும் ஸூர்யன் போல் பிரகாசிக்கின்றவர்களுமான ஹே மருத்கணங்களே, உங்களிடமிருந்து விஸ்தாரமானதும் ஸுகத்தைக் கொடுப்பவைகளுமான ஜலங்களை, ஜலமில்லாமல் சிரமப்படும் இவர்களுக்கு ஜலம் அளந்து அருள வேண்டும் என்று அக்னி தேவனை நான் வேண்டிக் கொள்ளுகிறேன். இந்த மந்த்ரத்தாலும் ஒரு இஷ்டகையை உபதானம் செய்ய வேண்டும்.

அனுவாகம் 5

असिताम्त्राणि...य एवंवेद ॥

இந்த அனுவாகத்தில் நான்கு மதந்தீஷ்டகைகள் உபதேசிக்கப்படுகின்றன. உஷ்ணோதகத்

திற்கு "மதந்தீ" என்பது ச்ரௌத (வைதிக) பரிபாஷை இது விஷயம் ப்ரவர்க்ய ப்ராஹ்மணத்தில் கூறப்படுகிறது. ஆகையால் அந்த நியமப்படி ஆரம்பத்தில்

शन्नोवाचे...अनुमदन्तु

என்னும் சாந்தியைப் படித்து உபதானம் செய்ய வேண்டும். முடிவிலும்

शन्नोवातः पवताम्...शन्नोमाहासीत्

எனும் சாந்தி பாடத்தை படனம் செய்ய வேண்டும்.

अतिताम्राणि वासाँसि...अग्निजिह्वा असश्चत ।

சிசிர ருது தேவதைக்கு ஸஹாய பூதர்களான விச்வேதேவர்களின் வஸ்த்ரங்கள், ஆயுதங்கள் கூறப்படுகின்றன. வஸ்த்ரங்கள் நல்ல சிவந்த நிறமுள்ளவை. அஷ்டி - பிச்சுவாபோன்ற - கெட்டியான கத்தி - வஜ்ராயுதம், சதக்நி, கையில் தரிக்கும் பீரங்கி, விச்வேதேவர்கள் இந்த ஆயுங்களால் சத்ருக்களை ஸம்ஹரிக்கிறார்கள். ஆருண கேதுக அக்னிகளின் ஜிஹ்வைகளால் (நாக்கினால்) உத்ஸாஹத்தோடு ஜயகோஷம் செய்வார்கள்.

नैव देवो न मर्त्यः...मातृकश्चन विद्यते ।

ஜய கோஷத்தின் ஸ்வருபம் கூறப்படுகிறது. தேவர்களிலோ, மனிதர்களிலோ, அரசர்களிலோ எங்களுக்கு ஸமானமானவர் கிடையாது. அது போல் ஸம்ராட்டான வருணனும் ஸமானமாக மாட்டார். மேலும் அக்னி, இந்திரன், வாயு இவர்களும் எங்களுக்கு நிகரில்லை. இவ்விதம் உத்கோஷிக்கின்றனர்.

दिव्यस्यैका धनुरार्त्निः...धनुर्ज्यामच्छिनत्स्वयम् ।

இந்த ஆருணகேதுக அக்னிபகவான் பெரிய வில்லை கையிலுடையவர். வில்லின் ஒரு கோடி (ஒருநுனி) அக்ரபாகம் ஆகாசத்தை வ்யாபித்துள்ளது (தேவலோகத்தை). மற்றொரு கோடி (அக்ரபாகம்) பூமியில் இருந்தது. இந்த வில்லைப் பார்த்த தேவேந்திரன் பயந்தவனாக, இது செயல்படாமல் இருப்பதற்காக கரையான் ரூபத்தை அடைந்து, வில்லின் நாண்கயிற்றை அறுத்து விட்டான்.

तदिन्द्रधनुरित्यज्यम्...एतद्रुद्रस्य धनुः ।

அறிவாளிகள் மேகக்கூட்டத்தில் காணப்படும் வில்லை (Rainbow) நாணற்றுக் காணப்படுவதால்

இந்த்ரன் கரையான் உருவங்கொண்டு நாண் கயிற்றை அறுத்ததால் இது இந்த்ரதனுஸ், என்று கூறுகிறார்கள். மேலும் ப்ருஹஸ்பதி புத்ரரான சம்யுவுக்கும் ருத்ர ரூபமான, ஆருண கேதுக அக்னி பகவானுக்கும் இதுதான் வில். ஆகவே இது மிகவும் உத்க்ருஷ்டமானது. இனி ப்ராஹ்மண வாக்யம்.

रुद्रस्य त्वेव धनुरार्त्निः...य एवं वेद ॥

நாண் அறுபட்டதும் ஏற்பட்ட நிகழ்ச்சி காண்பிக்கப்பட்டுள்ளது. வில்லின் மேல்பாகத்தில் தலையை சாய்த்துக் கொண்டதாக இருந்தது. இந்த அக்னி பகவானின் சிரஸ்ஸை, வில்லின் வேகசக்தி தூக்கி எறிந்துவிட்டது. அந்த சிரஸ் ஙா என்று சப்தித்துக் கொண்டு கீழே விழுந்து நொறுங்கிவிட்டது. ஆனால் இது ப்ரவர்க்யம் எனும் புண்யகர்மாவாகத் தோன்றியது. ஆகையினால் எந்த யஜமானன் 'ப்ரவர்க்ய' கர்மாவை அனுஷ்டிக்கின்றானோ அவன் ஆருணகேதுக அக்நி புருஷனின் தலையை (சிரஸ்ஸை) சரீரத்துடன் ஸந்தானம் செய்தவனாகிறான். இந்த விஷயமறிந்தவனை ஸ்ரீ ருத்ரபகவான் ஹிம்ஸிக்க மாட்டார்.

அனுவாகம்—6

अत्यूर्ध्वाक्षः....सनिर्वचना: ॥

ருதுமண்டலங்கள் எனும் மூன்று இஷ்டகை களும் 'த்ரப்ஸீத' என்கிற இஷ்டகையும் ஆக நான்கு இஷ்டகைகள் உபதானம்.

अत्यूर्ध्वाक्षोऽतिरश्चात्...नचक्षुः प्रतिदृश्यते ।

சிசிர ருதுவின் ஸ்வரூபம் வர்ணிக்கப்படு கிறது. சிசிர ருதுவில் கடுங்குளிரைத்தாங்க முடியாமல் நடுங்கிக் கொண்டு கைகளினல் மார்பை அணைத்துக் கொண்டும் (மறைத்துக் கொண்டும்) புருவங்களை நெறித்து உயர்த்திக் கொண்டு வாயினல் உஸ்உஸ் என்று சப்தித்து கொண்டும் இருப்பர். தென்புரமோ, வடபுரமோ திரும்பிப்பாரார். ஒரு பக்கத்தையும் பார்க்க விரும்பமாட்டார்கள். தேஹத்தை அழகுகூட்டு வதற்கோ ஆடம்பரமான வஸ்த்ர தாரணத்திலோ விரும்பமாட்டார்கள். கண்ணாடியில் முகம் பார்த்து அலங்கரித்துக் கொள்வதிலும் ஆதர வுடன் இருக்கமாட்டார்கள். குளிரிலிருந்து தங்களை பாதுகாத்துக்கொள்வதிலேயே நாட்ட முடையவர்கள் என்பது பொருள்.

अन्योन्यं तु न हिंस्रात:....सूर्यस्योदयनं प्रति ।

இந்த ருதுவில் சத்ருக்கள் ஒருவருக்கொருவர் ஹிம்ஸையில் இறங்கமாட்டார்கள், யுத்தம் புரிய மாட்டார்கள். இந்த ருதுவின் மேற்கூறிய இயற்கை குணங்கள் ஸூர்ய தேவனால் தோற்று விக்கப்பட்டவை. இந்த ருதுவின் அதிதேவதா புருஷனின் கண்கள் சிவந்து இருக்கும். சிரஸில் பெண் கிளியின் நிறம் ப்ரகாசிக்கும். இந்த நிகழ்ச்சி ஸூர்யோதய வேளையில் உள்ளது. இதில் கூறப்பட்ட சில (தர்மங்கள்) அடையாள நிகழ்ச்சிகள் மக்கள்பால் உள்ளவை. சில கண்ணில் சிவந்த நிறம், தலையில் பெண் கிளிப்பச்சை நிறம் இந்த ருதுதேவதையினுடைவை.

त्वंकरोषिन्यञ्जलिकाम् । त्वं करोषि निजानुकाम्...अमी

वाचमुपासतामिति ।

கடும் குளிர்காலத்தில் வயல், காடு சூழ்ந்த கிராமப்புறங்களில் கணப்புச் சட்டிகளில் கைகள், மார்பு, வயிறு இவைகளை சூட்டை அடையும் முறையில் முட்டிக் காலிட்டுக் கொண்டு கைகளை அக்னி அனலில் காய்ச்சி உடலில் ஒத்திக்கொள் வார்கள். இம்மாதிரி உட்கார்ந்து கொண்டு

குளிர் காய்ந்தால்தான் உடல் முழுவதும் சூடு பரவும். இன் நிகழ்ச்சி இயற்கையாக வர்ணிக்கப் படுகிறது. இந்நிலையை இந்த ருது தேவதை யின் செய்கையாகவும் காண்பிக்கப்படுகிறது. சிறுவர்களுக்கும் இந்த முறை அறிவுருத்தப்படு கிறது. இனி இலைகள் பற்றிய ப்ராஹ்மண வாக்யங்கள் (இவைகளை அறிந்தவன் பெருமை - அவனால் ஏற்படும் பெருமை முதலியவைகளை தெரிவிக்கும் வாக்யங்கள்).

तस्मै सर्वं ऋतवो नमन्ते...तस्यैषा भवति ।

எந்த உத்தம புருஷன் இதுவரை கூறப் பட்டுள்ள ருதுக்களின் கால பரிமாணத்தையும், ருதுக்களின் ஸ்வபாவத்தையும் (லக்ஷணத்தை) நன்கு அறிந்துள்ளானோ அவனுக்கு ருதுக்கள் ஸ்வாதீனமாக - அதாவது கெடுதல் செய்யாமல் நன்மைகளே செய்பவைகளாக இருந்து வரும், ப்ராஹ்மணருள் சிரேஷ்டனாக இருப்பான். இவன் தேஹபாதத்திற்குப் பிறகு (மரணத்திற்குப் பிறகு) ஸம்வத்ஸர தேவதையாக ஆகி, அதாவது ஸம்வத்ஸரத்தை உண்டுபண்ணும் ஆதித்ய ஸ்வரூபத்தை அடைந்து, ஆருண கேதுகாக்னி ஸ்வரூபத்தை பெற்று தன்னால் நடத்திவைக்கப் பட்ட - ஆருணகேதுக சயன கர்மாவை உடைய யஜமானனுக்கு ஸர்வாபீஷ்டங்களையும் பூர்த்தி செய்விக்கிறான். மேலும் உதக ஸ்வரூபமாகவும்

அதர்வது மழையை உண்டுபண்ணி ஜனங்களுக்கு க்ஷேமத்தை கொடுக்கிறான். இதை ப்ரதிபாதனம் செய்யும் ருக்கு அடியில் கூறப்படுகிறது.

अवद्रप्सो अंशुमतीमतिष्ठत्.....उपस्तुहि तं नृमणामथद्रामिति ।

உதக ஸ்வரூபனான - ஆருணகேதுக அக்னி தேவர் க்ருஷி கர்மாவிற்கு (விவசாயத்திற்கு) ஹேதுவானவர். சிறிய வடிவிலுள்ளவரான இவர் - ஆயிரக்கணக்கான ஸூர்ய ரச்மிகளை ஆச்ரயித்து அவைகளால் ஸஞ்சரித்துக்கொண்டு ஒஷதிகள் (பயிர் பச்சைகள்) நிரம்பிய இந்த பூமியை அடைந்து ஸ்வஸ்தமாக இருப்பவர் (அதாவது வ்ருஷ்டிக்கு அதிபதி), மழைக்கு அதிபரான ஹே ஆருணகேதுக பகவானே இந்திரனே, தாங்கள் அவ்வப்பொழுது வேண்டப்படும் காலத்தில் (தேவைப்படும்) அடிக்கடி தங்களுடைய சக்தியுடன் இவ்விடத்திற்கு வந்து இடி மின்னல்களோடு கூடியதும், ஜனங்களால் விரும்பப்படுவதுமான மேலிருந்து கீழ்நோக்கிப் பொழியும் "த்ரப்ஸம்" எனும் விசேஷ ஜலவ்ருஷ்டியைப் பெருகச் செய்யவேண்டும். மழை பொழிந்து அனுக்ரஹிக்க வேண்டும் என்பது தாத்பரியம். இந்த மந்திரத்தால் ஒரு இஷ்டகையை உபதானம் செய்யவேண்டும்.

இனி ப்ராஹ்மண வாக்யம் அடியில் கூறப் படுகிறது.

एतयैवेन्द्रस्सलावृक्या सह....अत ऊर्ध्वं संनिर्वचनाः ॥

வ்ருஷ்டிக்கு ஈச்வரனான ஆருணகேதுகாத்மக இந்திரன், ஜலம் பயிர்பச்சைகளோடு கூடிய இந்த பூமிக்காகவும் தேவலோகத்தின் நன்மைக் காவும் மேகங்களை உடைத்து மழை பொழியச் செய்கிறார். இவ்வித பெருமை வாய்ந்த ஆருண கேதுக சயநத்தை நடத்திவைக்கும் ஆசார்யாள், அத்வர்யுவும், அனுஷ்டிக்கும் யஜமானரான சிஷ்ய னும், இந்த ப்ரச்னத்தை அத்யயனம் சொல்லி வைக்கும் ஆசார்யனுக்கும், அத்யயனம் செய்யும் அந்தேவாஸிக்குள் ஒருவொருக்கொருவர் த்ரோஹச் செயல் செய்யக்கூடாது. அப்படி த்ரோஹம் புரிந்தால், த்ரோகம் செய்பவர் ஸ்வர்க் கத்திலிருந்து நழுவி விடுகிறார். ஸுகம் பெற மாட்டார் என்பது கருத்து. இதுவரை ருத் மண்டலங்கள் பற்றி விஸ்தரிக்கப்பட்டது. இனி ஆதித்ய மண்டலத்தினுடைய விவரணம் கூறு வோம்.

அனுவாகம்—7

आरोगोभ्राजः....कश्यपश्चेति ॥

अरोगः முதல் कश्यपः வரை எட்டு இஷ்டகைகள்

यत्ते शिल्पं

என்பதாக ஒன்று, ஆக 9 இஷ்டகைகள்.

आरोगोभ्राजः पटरः पतङ्गः । स्वर्णरो ज्योतिषीमान् विभासः ।

ஆரோகன், ப்ராஜன், படரன், பதங்கள். ஸ்வர்ணரன், ஜ்யோதிஷ்மான், விபாஸன், என்ற இந்த ஏழு ஸூர்யர்களும் இந்த உலகத்தின்

ते अस्मै सर्वे दिवमातपन्ति । ऊर्जं दुहाना अनपस्फुरन्त इति ।

நன்மைக்காக ஆகாசத்தை ப்ரகாசிக்கச் செய்கிறார்கள். என்ன செய்து கொண்டு? மழை மூலமாக (பூமியை செழிக்கச் செய்து) ஔஷதிகள், தான்யங்கள், பால், தயிர் முதலியவைகளை வ்ருத்தி செய்து கொண்டு மேலும் ப்ராணிகளுக்கு நன்மையையே செய்து கொண்டு வருகின்றனர். ஆரோக:, முதலிய ஒவ்வொரு நாமாவினால் ஒவ்வொரு இஷ்டகையை உபதானம் செய்ய வேண்டும்.

कश्यपोऽष्टमः । ...तस्यैषा भवति ।

கச்யபர் எனும் எட்டாவது ஸூர்ய பகவான் மஹாமேரு பர்வதத்தில் எப்பொழுதும் பிரகாசித்துக் கொண்டிருக்கிருர். பர்வதத்திலிருந்து நீங்குவது இல்லை. இவரைப் பற்றிய ரிக் அடியில்

यत्ते शिल्पं कश्यपरोचनावत् । ...तस्मिन् राजानमधि-

विश्रयेममिति ।

ஹே கச்யப ஸ்வரூப ஸூர்ய பகவானே! தங்களுடைய இந்த ஜகத் ரக்ஷணரூப ப்ரகாசமானது மிகவும் விசித்ரமானது. தங்களுடைய தான இந்த ப்ரகாசத்தில்தான் முன் கூறப்பட்ட ஏழு ஸூர்யர்களும் ப்ரகாசிக்கின்றனர். இந்த தங்களுடைய விசித்திரமான ப்ரகாசத்தில் இந்த யஜமானனை ப்ரகாசிக்கச் செய்து எல்லோரிலும் உயர்ந்தவனாக ஸ்தாபிக்க வேணும். ஏனெனில் தங்களுடைய இந்த விசித்ரமான ப்ரகாசமானது மிகவும் ஒளி பொருந்தியது. நல்ல ஸாமர்த்திய முள்ளது, பூர்ணமானது. இந்த கச்யப ஸூர்ய பகவானுடைய விசித்ரமான இந்த ப்ரகாசத்தை ஏழு ஸூர்யர்கள், எவ்விதம் ஆச்ரயித்துள்ளார் கள் என்பது கூறப்படுகிறது.

ते अस्मै सर्वे...भ्रस्ताकर्मं कृदिवेवम् ।

முன் கூறப்பட்ட ஏழு ஸூர்யர்களும் ஜகத்தை ப்ரகாசம் செய்வதற்காக கச்யப ஸூர்ய பகவானிடம் இருந்து ஜ்யோதியை அடைகின்றனர் (பெறுகின்றனர்).

ஏழு ஸூர்யர்களும் இயற்கையில் ஒளி உள்ளவர்கள் தான். ஆனாலும் இந்த கச்யபருடைய ஜ்யோதியை பெற்றதால் மாசு போன்ற சிறு சிறு இருட்டையும் போக்கிக் கொள்கிறார்கள். ஆனால் ஸோம தேவதைதான் அவர்களை கச்யபருடைய சமீபத்தை அடைவித்தார். கச்யபருடைய அனுக்ரஹத்தினால் ஏழு ஸூர்யர்களுக்கும் அதிக ப்ரகாசம் ஏற்பட்டுள்ளது. இதற்கு லௌகீக திருஷ்டாந்தம் கூறப்படுகிறது. தங்க ஆபரண வேலை செய்பவர்கள் பொன்கிமிளையோடு கூடிய தங்கத்தை அக்னியில் இட்டு தோலான துருத்தியை கொண்டு நன்கு ஊதி அக்னியை ப்ரகாசிக்கச் செய்து ஸ்புடம்போட்டு மாசற்ற நல்ல பளபளப்பு பொருந்திய சுத்த தங்கத்தை பெற செய்கிறார்களோ, அவ்விதம் ஏழு ஸூர்யர்களும் ஸோம தேவதையினால் கச்யபருடைய சமீபத்தை அடைவிக்கப்பட்டு சிறிது கூட இருளற்ற பிரகாசத்தை பெற்றனர், பெருகின்றனர்.

प्राणो जीवानीन्द्रियजीवानि....सूर्या इत्याचार्याः ।

अपश्यमहमेतान्त्सप्त ....महामेरुं गन्तुम् ।

சில ஆசார்யர்கள் ஏழுவித செய்கைகளோடு கூடிய முக்ய ப்ராணனே அதாவது முகத்திலும் நாசிகைகளிலும் சஞ்சரிக்கும் ப்ராணன் ஸப்த ஸூர்யர்கள் என்று அபிப்ராயப்படுகின்றனர். சில ஆசார்யர்கள் ஜீவனத்திற்கு (உலக நியதிக்கு) நிமித்தமான மஹத், அஹங்காரம் பஞ்ச பூதங்கள் (தன்மாத்ரம்) இந்த ஏழுகளே ஸப்த ஸூர்யர்கள் என்பர். (பஞ்ச தன்மாத்ரம்-ப்ருத்வி, அப்பு, தேஜஸ், வாயு, ஆகாசம்) மற்றும் சில ஆசார்யர்கள் ஞானேந்திரியம் ஐந்து மனஸ், புத்தி ஆகிய இவைகள் ஏழிலும் சஞ்சரிக்கும் ப்ராணனே ஏழு ஸூர்யர்கள் என்பர், ஆனால் அவரவர்களால் உபாசிக்கப்பட்டவைகளை இவ்விதம் கூறுகிறார்கள். ஆனால் இவர்கள் முக்யமல்ல. பின் யாவர்? இந்த ஏழு ஸூர்யர்களையும் ஸாக்ஷாத்தாகப் பார்த்த வத்ஸருடைய புத்ரரான பஞ்சகர்ணர் என்ற ரிஷியும், ப்லக்ஷ மஹரிஷியின் புத்ரரான ஸப்தகர்ணன் என்ற மஹரிஷியும் இந்த ஸப்த ஸூர்யர்களை ப்ரத்யக்ஷமாக பார்த்ததாக கூறுகின்றனர். மேலும் கச்யபர் ஸூர்யரை நேரில் பார்த்ததில்லையென்றும், ஆனால் குருவினால் உபதேசிக்கப்பட்ட "யத்தேசில்பம்" என்ற மந்திரத்தின் மூலமாக அறிந்துள்ளோம். ஏனெனில் கச்யபர் இருக்கும் மஹாமேரு மலைக்கு செல்ல முடியாதல்லவா!

ஆகவே வேத வாக்யத்தை கொண்டுதான் கச்யப ஸூரியரை அறிந்து கொள்ளமுடியும்.

अपश्यमहमेतत्सूर्यमण्डलम्...एकं चाजहतम् ।

கர்கபுத்ரரான ப்ராணத்ராதர் என்னும் மஹ ரிஷி, முன்கூறப்பட்ட பஞ்சகர்ணரையும், ஸப்த கர்ணரையும் பார்த்து, மஹாமேருவில் ப்ரகாசிப்ப வரும், முக்யமானவரும் மேருவை விட்டு நீங்காத வருமான கச்யப ஸூர்யரை நான் பார்த் துள்ளேன்! நீங்களும் மஹாமேருவுக்குச் செல்லுங் கள். கச்யப ஸூர்யரை பார்க்கலாம் என்று கூறி மஹாமேரு பர்வதத்தை அடைவதற்கு வழியையும் கூறுகிறுர் (உபதேசிக்கிருர்).

भ्राजपटर पतङ्गा निहने । ...तस्मादिह तप्त्रतपाः ।

இந்த ஸப்த ஸூர்யர்களுக்குள் ஒருவரான ஆரோகர் என்னும் ஸூர்யனுடைய ஸஞ்சார மார்க்கம் பிரஸித்தமானது, நம்மால் காணப்படும் இந்த 'ஆரோக' எனும் ஸூர்யன், ''ப்ராஜர், படரர், பதங்கர்''. இம்மூவருடைய கதி (ஸஞ் சாரம்) மேரு மார்க்கத்தினுடைய அதோதேசத்தில் (கீழ் பிரதேசத்தில்) இருந்து கொண்டு கீழ் (பாயும்) கிரணங்களால், அந்த ப்ரதேசத்தில் வஸிக்கும் ப்ராணிகளுக்கு ப்ரகாசம் அளிக்கிருர்

கள். (அவர்களை ப்ரகாசப்படுத்துகிறார்கள்) கீழ் நோக்கிப்பாயும் கிரணங்கள் உடையவர்களான தால் இவர்கள் தப்த்ரிதபர்கள் தாபத்தை அளிக்கும் கிரணமுடையவர்கள். மற்ற மூவர்களான ஸ்வர்ணரர், ஜ்யோதிஷ்மான், விபாஸர் மேரு மலைக்கு மேல் நோக்கிப் பாயும் கிரணங்களையுடையவர்கள். ஆகவே அவர்களுடைய கிரணங்கள் இவ்விடத்தில் தாபத்தை உண்டுபண்ணுதவை. ஆகவே அவர்கள் 'அதப்த்ரிதபர்கள்' தாபத்தை யளிக்காத குணமுடையவர்கள். முதல் மூவர்களுடைய கிரணங்கள் கீழ் நோக்கிப் பாய்வதாலும், அடுத்த மூவர்களுடைய கிரணங்கள் மேல் நோக்கி பாய்வதாலும் நடு ப்ரதேசம் தாபமற்றதாக இருக்குமாதலால் அது வழியாக மேரு பர்வத்தை அடைந்துவிடலாம்.

तेषामेषा भवति ।

ஸப்த ஸூர்யர்களுடன் ஸம்பந்தப்பட்ட மேரு பர்வத மார்க்கம் பற்றிய ரிக் கூறப்படுகிறது.

सप्तसूर्या दिवमनुप्रविष्टाः....ऊर्जं दुहाना अनपस्फुरन्त इति ।

ஆரோகாதி ஸப்த ஸூர்யர்கள் க்ரமமாக அந்தரிக்ஷத்தை வ்யாபித்துள்ளார்கள். யதோக்த

தக்ஷிணையுடன் நன்கு அனுஷ்டிக்கப்பட்ட ஆருண கேதுக அக்நி பகவான் (அக்நி தாதாத்ம்யத்தை அடைந்த யஜமானன்) ஸப்த ஸூர்யர்களை அனுசரித்து அவர்களுக்கிடையேயுள்ள சீத மார்க்கமாக மஹா மேருவை அடைகிறார். இத்தகைய ஆகாச மார்க்கமாகச் செல்லும் இவருக்கு, ஸந்தாபத்தைக் கொடுக்காமலும், க்ஷீரம் முதலிய போக்ய வஸ்துக்களை வைத்துக் கொண்டும் ஹே யஜமானரே (கர்மானுஷ்டானம் புரிந்தவரே) வரவேணும் வரவேணும் என்றும் இவைகளை உபயோகித்து இளைப்பார வேண்டும்மென்றுப் ப்ரிய வாக்யங்களைக் கூறி வரவேற்கின்றனர். இந்த விஷயத்தை அதர்வண வேதம் மிக்க அழகாகப் பேசுகின்றது.

एह्येहीति तमाहुतयः सुवर्चसः सूर्यरश्मिभिः यजमानं वहन्ति ।

प्रियंवाचमा भवदन्त्यः अर्चयन्ते इति ॥

இவரால் முறைப்படி செய்யப்பட்ட ஆஹுதி தேவதைகள் ப்ரகாசமாக அழகு பொருந்தியவையாக ஸூர்ய ரச்மித்வாராக இந்த யஜமானனை போக்யவஸ்துக்களைக் கொடுத்து வரவேணும்! வரவேணும்! என்று ப்ரியவசனத்துடன் அர்ச்சிக்கின்றன. இந்த ஸூர்ய விஷயத்தில் பக்ஷாந்தரம் கூறப்படுகிறது.

सप्तर्त्विजस्सूर्या इत्याचार्याः ॥

யக்ஞத்தில் ரித்விக் வேலையைச் செய்கிறார்கள் - ஏழு ரித்விக்குகள் தான் ஸப்த ஸௌர்யர்கள் என்று சில ஆசார்யர்கள் அபிப்ராயப்படுகிறார்கள். அது பற்றி கூறும் ரிக்கு

तेषामेषा भवति । सप्त दिशो नानासूर्याः ।

......तेभिस्सोमाभीरक्षण इति ।

எட்டு திசைகளில் கிழக்கு திக்கு ப்ரஸித்தமான ஸௌர்யனுடையது. இது யாவரும் அறிவர். மற்ற ஏழு திக்குகளுக்கும் ஏழு ஸௌர்யர்களும் அதிபர்கள். இந்த எழுவரும் அந்தந்த திக்குகளில் அந்தந்த ருதுக்களின் ஸ்வபாவத்தைத் தோற்றுவிக்கின்றனர். இந்த ஏழு ஸௌர்யர்கள் தான் இங்கு கர்மானுஷ்டானங்களில் ஏழு ரித்விக்குகளாக வந்து நடத்துகின்றனர். இவர்கள் கர்மானுஷ்டான மகிமையால் தேவர்களாக ஏழு ஸௌர்யர்களாக ப்ரகாசிக்கின்றனர். ஏழு ஹோதாக்கள் - ஹோதா, ப்ரசாஸ்தா, ப்ராஹ்மணச்சம்ஸி, போதா, நேஷ்டா, அச்சாவாகர், ஆக்னீத்ரன். கருத்து—இந்த ஏழு ஸௌர்யர்களின் அனுக்ரஹத்தால் யக்ஞத்தில் ஹோத்ருகண

ப்ராப்தி ஏற்படுகிறது. நல்லமுறையில் யக்ஞத்தை நடத்திவைத்த ஸுக்ருதத்தால் இவர்கள் ஸப்த ஸூர்ய தாதாத்ம்யத்தை அடைகிறார்கள். யக்ஞாதிபனான ஹே ஸோமனே, இந்த ஆதித்யர்களோடு கூட இருந்துகொண்டு எங்களை ரக்ஷிக்க வேண்டும். இந்த மந்த்ரத்தால் ஒரு இஷ்டகோபதானம் செய்யவேண்டும். இங்கு ஒரு சந்தேகமும் ஸமாதானமும். ஸூர்யர்கள் ரித்விக் ரூபர்கள் என்று கூறி இது விஷயத்தில் ரிக் சொல்லப் பட்டுள்ளது. ஆனால் திக்குகள் நானா ஸூர்யர்களை உடையது எனும் ப்ரதிபாதனம் பொருந்த வில்லையே எனில், இந்த விஷயம் இதர சாகையில் உள்ளதால் அதையும் தெரிவிப்பது உசிதம் எனும் நோக்கிக் கூறப்பட்டுள்ளது.

तदप्याम्नाय: । दिग्भ्राज ऋतून् करोति ।

அதுவும் சொல்லப்பட வேண்டுமல்லவா! மேலும் இந்த விஷயத்தில் யுக்தியும் உள்ளது. அவ்வந்த திக்குகளில் அவ்வந்த ஸூர்யன் தான் ருது தர்மங்களை ப்ரவர்த்திக்க முடியும். ஆகையால் நானா ஸூர்யர்கள் கூறப்பட்டுள்ளது, ஏழு ஸூர்யர்கள் மட்டும் அல்ல பின்

एतयैवावृतासहस्रसूर्यताया इति वैशंपायन: ।

இதே முறைப்படி எங்கெல்லாம் ருது தர்மங்கள் உள்ளவோ அங்கங்கே ஸெளர்யர்களும் சஞ்சரிக்கின்றனர். ஆயிரக்கணக்கான ஸெளர்யர்களும் உண்டு என வைசம்பாயனர் எனும் மஹரிஷி கூறுகிறார். இதை விளக்கும் ரிக் அடியில்

तस्यैषाभवति...अनुनजातमष्ट रोदसी इति ।

ஹே இந்திர! தங்கள் ஆதீனத்தில் நூற்றுக் கணக்கான பல தேவலோகங்கள் உள்ளன. அதே போன்று நூற்றுக்கணக்கான பல பூலோகங்களும் உள்ளன. அந்தந்த த்யாவாப்ருதிவீ மத்ய ப்ரதேசமான ஆகாச ப்ரதேசத்தில் அவ்வளவு ஸெளர்யர்கள் இருக்கின்றனர். மேலும்

नानालिङ्गत्वादृतूनां नानासूर्यत्वम् ।

ஆங்காங்கு பிங்ந பிங்நமான ருது தர்மங்கள் உள்ளன. ஆகவே அதற்கும் வெவ்வேறு ஸெளர்யர்கள் தேவையல்லவா.

குறிப்பு : இங்கு சூரபத்மாஸுரன் ஆயிரம் ப்ரஹ்மாண்டங்களை அடக்கியாண்ட விஷயம் ஸ்காந்தத்தில் கூறப்பட்டுள்ளது. எண்ணுவதற்குரியது பல Solar system குறிப்பிடப்படுகிறதோ. இது உசிதமே. இப்படி பல ஸெளர்யர்கள் இருக்கும்

போது அஷ்ட ஸூர்யர்கள் என எப்படி முதலில் கூறப்பட்டது எனில், அதற்கு பதில் பாதி உண்மை தான்.

आष्टौ तु व्यवसिता इति । सूर्यमण्डलान्यष्टात ऊर्ध्वम् ।

बाढं

(பாதியை ஒப்புக்கொள்ளுதல்)

ஆனால் எட்டு ஸூர்யர்கள், பஞ்சகர்ணர், ஸப்த கர்ணர் இவ்விருவர்களால் ஏழு ஸூர்யர்கள் பார்க்கப்பட்டு நிச்சிதமானவர்கள். எட்டாவது கச்யப ஸூர்யன் ப்ராணத்ராதரால் பார்க்கப் பட்டவர். ஆகவே எட்டு பேர் நிச்சிதமானவர் கள். மற்ற ஆயிரக்கணக்கான ஸூர்யர்கள் யுக்தியினாலும், வேதவாக்யத்தினாலும், இதி ஹாஸாதிகளாலும், அறியப்படுபவர்கள் என்பது எட்டு ஸூர்யர்கள் என சொல்லப்பட்டது சரியே.

तेषामेषा भवति ।

பல ஸூர்யமண்டலங்களை ப்ரதிபாதனம் செய் யும் இந்த ரிக் கூறப்படுகிறது.

चित्रं देवानामुदगादनीकम्....जगतस्तस्थुषश्चेति ॥

பஹு மண்டல ரூபாத்மான இந்த ஸூர்ய மண்டலமாகிற தேவஸைங்யம் அந்த தாராத்மா மான ஆவரணம் செய்கின்ற (யாவற்றையும் மறைக்கும்) வ்ருத்ராஸுரனை நிவாரணம் செய்து கொண்டு கிழக்கில் உதிக்கிறார்.

वारयति इति - वृत्रः யாவற்றையும் மறைப்பதால் இருள் வ்ருத்ரன் எனப்படுகிறது.

இந்த ஸூர்ய மண்டல தேவதை மித்ர தேவதை, வருண தேவதை, அக்னி தேவதை கண்ணுக்கு கண்ணானவர், அதாவது கண்களுக்கு பிரகாசமளித்து அனுக்ரஹம் செய்பவர், இருள் போக்கி கண்களுக்கு உதவிபுரிகிறார். தேவலோகம், பூலோகம், அந்தரிக்ஷம் எங்கும் வியாபித்த ஸூர்யபகவான் ஜங்கமன் – அசைபவன், (நடமாடுபவன்), ஸ்தாவரம் - ஸ்திரமானவை, யாவற்றுக்குமே ஆத்மா ஆவார். இந்த மந்த்ரத்தாலும் ஓர் இஷ்டகை உபதானம் செய்ய வேண்டும்.

அனுவாகம் 8

श्वेदमग्ने....विधेमेति ।

श्वेदमग्निर्विशते—श्व मासा ऋतवः श्रिताः ।

இந்த மந்திரத்தால் ஒரு இஷ்டகை கிழக்கே உபதானம் செய்ய வேண்டும். தத்வம் தெரிந்த

கொள்வதற்காக இந்த ரிக்கில் ப்ரச்னங்கள் (கேள்விகள்) கேட்கப்படுகின்றன. இந்த மேகம் எதில் வளர்கிறது (உறைகிறது, கெட்டியாகிறது) இதன் காரணம் யாது? ஸம்வத்ஸரம் அஹம், ராத்ரி (அஹோ ராத்ரம்) மாஸம், ருது இவைகள் அடங்கிய ஸம்வத்ஸரம் எல்லாம் எவ்விடத்தில் வஸிக்கின்றன? எப்படி தோன்றுகின்றன. இரண்டாவது இஷ்டகை மந்த்ரம்.

अर्द्धमासा मुहूर्ताः ।....यदीतो यान्ति संप्रति ।

முன் போல் இந்த ரிக்கிலும் கேள்விகள் அர்த்த மாஸம், முகூர்த்தம், நிமிஷம், த்ருடி (நொடி) இவைகள் எங்குள்ளன? எப்படி தோன்றின? பூமியில் காணப்படும் ஜலம் கோடைகாலத்தில் சோஷித்து விடுகிறது. (வற்றி விடுகிறது) இந்த ஸமயத்தில் இந்த ஜலம் எதை அடைந்துள்ளது?

மூன்ருவது இஷ்டகை மந்த்ரம்.

काला अप्सु निविशन्ते ...विद्युत्सूर्ये समाहिता ।

முன் கூறிய கேள்விகளுக்கு இந்த ரிக்கிஞல் உத்தரம் கூறப்படுகிறது. ஸம்வத்ஸராதி காலங்கள் ஜலத்தில் அடங்குகிறது. ஜலம் ஸூர்ய ரச்மியில் வஸிக்கிறது. (ஸூர்ய ரச்மியை அடைந்துள்ளது) மேகம் ஸூர்ய (ரச்மிகளிட

மிருந்து) னிடமிருந்து ஜலத்தைப் பெருகின்றது முன்பு கேட்கப்படாத விஷயத்திலும், இவ்விதம் கேள்வி எழக்கூடும் எனும் அபிப்ராயத்தில் உத்தரம் (பதில்) மட்டும் இவ்விடம் கூறப்படுகிறது.

மின்னல் ஸூர்ய ரச்மியிலிருந்தே தோன்றுகிறது. ஸூர்ய கிரணந்தான் மின்னலாக பரிணமிக்கிறது. காலங்கள் எவ்விதம் ஜலத்தில் அடங்கி உள்ளன, ஜலத்திலிருந்து எவ்விதம் தோன்றியுள்ளன ? இவ்விடம் ருசிகரமான சாஸ்த்ரீய ப்ரக்ரியை பாஷ்யகாரரான வித்யாரண்ய ஸ்வாமிகளால் ப்ரதர்சனம் செய்யப்படுகிறது. ஸ்ருஷ்டி ஆரம்பத்தில் பரமேஸ்வரன் முதலில் ஜலத்தைத்தான் ஸ்ருஷ்டித்தார். अप एव ससर्जादौ ।

அந்த ஜலத்தில், ஜலம் கெட்டியாக கூடிய சக்தி விசேஷத்தை சேர்த்தார். கெட்டியாக முட்டை போன்ற ப்ரஹ்மாண்டம் ஏற்பட்டது. அது வெகு நாள் கழித்து வெடித்தது. அது ஒரு ஸம்வத்ஸர காலம். அதன் அவயவங்கள் தான் அஹோராத்திரிகள்.

अनवर्णे इमे भूमी । इयं चासौ च रोदसी ।

இந்த பூமியும் அந்த தேவலோகமும் மிகவும் நல்ல ரூபமுள்ளவை, ஏனெனில் இவைகளின்

பல தேவர்கள் நிரம்பியுள்ளனர் அல்லவா? இனி விஷ்ணு தேவதாகமான ஐந்து இஷ்டகா மந்த்ரங்கள்.

किँस्विदत्रान्तरा भूतम् । ....इति वत्सस्य वेदना ।

இந்த த்யாவாப்ருதிவிகளுக்குள் இருந்து கொண்டு யார் இவைகளை தரித்து வருகிறார்? இவைகள் விஷ்ணுவினால் தரிக்கப்படுகிறது (தாங்கி பாதுகாக்கப்படுகிறது) என்று வத்ஸ மஹரிஷி கூறுகிறார்.

इरावती धेनुमती हि भूतम् । ....दाधर्थ पृथिवी मभितो मयूखैः ।

மனுஷ்யர்களின் நன்மைக்காக உணவு பொருள் உள்ளவைகளாகவும் புல் பூண்டுகள், ஓஷதிகள் அன்னம், பசுக்கள் முதலியவைகளை அளிக்கவல்ல இந்த தேவலோக, பூலோகங்களை (த்யாவாப்ருதிவியை) ஹே விஷ்ணோ, தாங்கள் ஊர்த்வ (மேல் நோக்கிய) கிரணங்களால் தேவ லோகத்தையும் அத: (கீழ் நோக்கிய) கிரணங் களால் பூலோகத்தையும் தரித்துள்ளீர்கள்.

किंतद्विष्णोर्बलमाहुः....रेजतो रोदसी उभे ।

பிரகாசிக்கின்ற இந்த த்யாவாப்ருதிவீகள் எந்த விஷ்ணு ஒருவராகவே தாரணம் செய்து விடுகிறாரோ, அவருக்கு இந்த சக்தி எங்கிருந்து கிடைத்துள்ளது. அவருடைய ப்ரகாசமான கிரணங்கள் எங்குள்ளவை? அவருக்கு ஸஹாயம் யார்?

वाताद्विष्णोर्बलमाहुः । .... यद्विष्णोरेकमुत्तमम् ।

விஷ்ணுவானவர், வாதரூபரான ஸூத்ராத்மாவை உண்டுபண்ணி (ஸ்ருஷ்டித்து) அந்த ஸூத்ராத்மாவான வாயுவின் பலத்தால் ஜகத்தை தாரணம் செய்கிறார். அழிவற்ற அக்ஷர ப்ரஹ்மமான, பரமஸ்தானத்திலிருந்து பேரொளியை பெறுகிறார். வ்யாபகரான விஷ்ணுவினுடைய ஒரு பாதந்தான் ஜகத் முழுவதும், மற்ற மூன்று பாதம் வ்யவஹாரத்திற்கு அப்பாற்பட்டது. அந்த உத்தமமான ஸ்தானம் விஷ்ணுவின் பரஸ்தானம். அதிலிருந்து (அந்த பரமாத்ம வஸ்துவிலிருந்து) தீப்தியை (ப்ரகாசத்தை) பெற்றுள்ளார்.

अग्नयो वायवश्चैव । एतदस्य परायणम् ।

ஸாவித்ராக்நி, நாசிகேதாக்நி, உபாநுவாக்யாக்நி, வைச்வஸ்ருஜாக்நி, ஆருணகேதுகாக்நி, இந்த அக்னிகளும், வாயுவும், ஆதித்யர்களும் ஸஹாயமாயுள்ளவர்கள்.

நான்கு ம்ருத்யுமதீஷ்டகைகள் கூறப்படுகின்றன.

...ச்சாமி त्वा परं मृत्युम् । ....एतत्पृच्छामि संप्रति ।

ஒரு முனிவர் அறிஞரான மற்ரொரு முனிவரிடம் நான்கு விதமான ம்ருத்யுவைப்பற்றி தெரிந்து கொள்ள விரும்புகிறார்.

1. பரம் ம்ருத்யு 2. மத்யம ம்ருத்யு 3. அவம ம்ருத்யு 4. சதுர்த்த ம்ருத்யு, மேலும் புண்ய பாபங்களுக்குறிய லோகம் இவைகளைப் பற்றி தங்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்ள வேணும்.

...असुमाहुः परं मृत्युम् । ....चन्द्रमाश्चतुरुच्यते ।

1. மங்கள முள்ளவரே! அதோ உதயமாகி ப்ரகாசித்து கொண்டு இருக்கிற ஆதித்யர்தான் பரம்ருத்யு. ஆதித்யனுடைய சலனத்தில் (சஞ்சாரத்தினால்) தான் காலகணக்கு உள்ளது. ஆகவே அவரவர்களுடைய காலம் முடிந்ததும் (ஆயுஸ்) மரணமானது ஏற்பட்டே தீரும். இதை தவிர்க்க முடியாது. ஒரு பிராணிக்கு இவ்வளவு முச்சுகள் கொண்டது ஆயுஸ் என்று கணக்கு உள்ளது.

2. வாயு மத்யம ம்ருத்யு-வாயு சஞ்சாரம் உரிய நாடிகளில் இல்லாமல் வேறு நாடிகளில் ஏற்பட்

டால் மரணத்திற்கு ஹேதுவாகும். ஆனால் ப்ராணாயாமத்தினால் அதை சரி செய்ய கூடுமானதால் இந்த மரணத்தை தவிர்க்க வாய்ப்பு உண்டு. ஆகையினால் இது வாயு மத்யம ம்ருத்யு ஆவார்.

3. அக்னி அவம ம்ருத்யு.

ஜாடராக்னியின் வைசம்யத்தால் மரணம் நிகழலாம். இதுவும் வைத்திய சிகிச்சையினால் தவிர்க்க முடியும்.

4. சந்திரன் சதுர்த்த ம்ருத்யு — சந்திரன் ஒஷதிகளுக்கு (அன்னாதிகளுக்கு) அதிபதியாவார். சந்திரனின் அனுக்ரஹம் ஏற்படாவிட்டால் அன்னம் அறிதாகிவிடும். அன்னம் இல்லாத தால் மரணம் ஏற்படலாம்.

अनाभोगाः परं मृत्युम्...यत्र पुण्यकृतोजनाः ।

புண்ணிய பாபலோகங்கள் பற்றிய விவரணம்:—ச்ருதி, ஸ்ம்ருதிகளை மீறி பாபத்தையே செய்த புருஷர்கள் பாபிகளாவார். இவர்கள் சுகதேசத்தையும் அனுபவிக்க வாய்ப்பில்லை. க்ருமிகீடாதி ஜன்மாக்களை அடைந்து பரம்ருத்யுவை அடைகிறார்கள். மிகக் குறைந்த ஆயுர் பரிமாணத்தை அடைந்து உடனே உடனே (உடனுக்குடன்) மரணம், ஜனனம் இவைகளையே அனுபவிப்பார்கள். நல்ல புண்ணியங்களை

அனுஷ்டித்தவர்கள் ச்ருதி, ஸ்ம்ருதிகளை மீருமல் சுகபோகத்தை அனுபவித்து ஸ்வர்காதி புண்ணிய லோகத்தை அடைகிருர்கள். அந்த ஸ்வர்க லோகமானது முன்பு புண்ணியங்களை அனுஷ்டித்தவர்களால் நிரம்பியுள்ளது.

ततो मध्यमायन्ति । चतुर्मन्ति चसंप्रति ।

புண்ணியத்தை மட்டும் செய்தவர்கள், பாபத்தை மட்டும் செய்தவர்களாய் இல்லாமல் புண்யம், பாபம் இவைகள் இரண்டும் உள்ளவர்கள், இந்த மனித ஜன்மாவில் மத்யம, அதம, சதுர்த்தரூப ம்ருத்யுவை அடைந்து பரிகாரங்களை கொண்டு தவிர்த்து கொள்ளலாம். ஆனுல் பரம்ம்ருத்யுவை விலக்கி கொள்ள முடியாது.

நான்கு நிரையவதீ இஷ்டகைகள் கூறப்படுகின்றன.

पृच्छामि त्वा पापकृत:....यदि वेत्थाऽसतो गृहान् ।

ஹே ப்ரஹ்மன், இது விஷயத்தை பற்றி தெரிந்து கொள்வதற்கு தங்களிடம் கேட்டுக் கொள்கிறேன். பாபிகளை யமன் எந்த இடத்தில் வருத்துகிருன். தாங்கள் இதை அறிந்திருந்தால் தயவு செய்து எங்களுக்கு அதை போதிக்க வேண்டும் (உபதேசிக்க வேண்டும்)

कश्यपादुदितास्सूर्याः । ....तत्रन्यस्यन्ते वासवैः ।

ஸாவதானமாய் கேளும். மஹாமேருவிலுள்ள கச்யப ஸௌர்யரும் அவரிடமிருந்து உண்டான ஆரோகாதி ஸப்த ஸௌர்யர்களும், மேலும் ஆயிர கணக்கான ஸௌர்யர்களும் த்யாவாப்ருதிவி களுக்கு நடுவில் உள்ள ப்ரதேசத்தில் இருக்கும் ரௌரவாதி நரகங்களில், பாபி ஜனங்களை வாட்டி வருத்தி கொன்று விடுகின்றனர். அவர்களை (பாபானு ஸாரமாக) மறுபடியும் வாட்டுவதற்காக ஸௌர்யன்ரச்மி ரூபமான தேவர்கள் மறுபடியும் உயிர்ப்பித்து நரகங்களில் தள்ளுகின்றனர்.

तेऽशरीराः प्रपद्यन्ते । ....तत्र तेऽयोनिजा जनाः ।

அந்த பாபி ஜனங்கள் பாபத்திற்கு தக்கவாறு கையற்றவர்களாகவும், காலற்றவர்களாகவும், (நொண்டி, முடம்) குருடர்கள், இம்மாதிரியான அங்கஹீனர்களாகவும் பலவித விகாரமுள்ளவர் களாகவும் பிறக்கின்றனர். சில பாபஜனங்கள் புழுக்கத்தினால் ஏற்படும் பிராணிகளாகவும், ஈ எறும்பு க்ருமிகீடாதிகளாகவும், இம்மாதிரி பல நீச பிறவிகளை எடுக்கிறார்கள்.

मृत्वा पुनर्मृत्युमापद्यन्ते....ततः पूयन्ते वासवैः ।

அந்த நரக ஸ்தானங்களில், உயிர்பிக்கப் பெற்று உண்டாகி நரக வேதனைகளை அனுபவித்து - மறுபடியும் அவ்விடம் மரித்து மீண்டும் இவ்வுலகத்தில் பாபத்தினுல் பிடுங்கித் தின்பவர்களாக பல பல ப்ராணிகளாகப் பிறந்து நமது தலையிலும் (பேன்) வஸ்த்ரங்களிலும், படுக்கையிலும் (மூட்டை பூச்சி) உண்டாகும் பிராணிகளாகவும் நம்மாலேயே கொல்லப்படுபவைகளாகவும், நம்மிடம் வந்து நம்மால் அடிப்பட்டு மரிப்பவைகளாகவும் ஆகின்றன.

जायस्व म्रियस्वेत्येतत्—तृतीयं स्थानम् ।

பிறந்து; உடன் மரித்து-மறுபடியும் பிறந்து மடிந்து அல்லலுறுபவர். சிலர் மரமாகவும், கொடியாகவும், செடியாகவும், புல்பூண்டாகவும் அவரவர் கர்மானுஸாரமாக் பிறப்பெடுப்பர்.

ப்ராஹ்மண வாக்யம்

अपेतं मृत्युं जयति । ... सिद्धागमनः ।

எந்த புருஷன் (மஹானுபாவன்) कश्यपादुदिता सूर्याः என்பது இதுவரை கூறப்பட்ட கச்யப ஸூர்ய மஹிமையை அறிந்துள்ளாரோ, சயனகர்மாவை அனுஷ்டித்துள்ளாரோ அவர் க்ருமிகீடாதி பாவத்தை அடைந்து பெரும் மரணத்தை ஜயித்து விடுவார் (அடையமாட்டார்) மேலும் இவரைப்

பற்றி பல தேவர்கள் கச்யப ஸூர்யர் இடம் சென்று பஹுகாலம், சிலகாலம் "இவர் நல்ல அனுஷ்டாதா" என்று அடிக்கடி கூறுவதைக் கேட்பவராக திகழ்வர். பரலோகத்தில் கச்ய பருக்கு அதிதிபோல் பூஜிக்கப்படுபவர். மேலும் இவர் கச்யபருருடைய ஸமீபத்திற்கு அடிக்கடி போய்வரும் பாக்யத்தை பெற்று மகிழ்வார். தன் இஷ்டப்படி நினைத்த ஸமயத்திலெல்லாம் போய் வரும் சாமர்த்யம் பெற்று விளங்குவர். இந்த விஷயத்தில் ப்ராஹ்மண வாக்யம்

तस्यैषा भवति ।

भायस्मिन्त्सप्त वासवाः....इन्द्रस्य घर्मो अतिथिरिति ।

எந்த கச்யபாத்மக ஸூர்யனை ஜகந் நிவாஸத்திற்கு காரணமானவர்களும் ஸ்ருஷ்ட்யாதியில் தோன்றிய காரணத்தால், முதலில் முளைத்த அங்குரம் போன்றவர்களான ஸப்த ஸூர்யர்கள், ஆச்ரயித்துள்ளார்களோ, அத்தகைய பரமைச்வர்யம் பொருந்திய கச்யப ஸூர்ய பகவானுக்கு "தீர்க்கச்ருத்தமர்" எனும் தேஜஸ்வியான மஹரிஷி அதிதியாக விளங்கி வருகிறார். இந்த மந்திரத்தினால் ஒரு இஷ்டகோபதானம் செய்ய வேண்டும். இது விஷயத்தில் ப்ராஹ்மண வாக்யம்

कश्यप: पश्यको भवति । ...सौक्ष्म्यात् ।

இந்த கச்யப ஸூர்யர் "கச்யப" எனும் பதத்தை ஆத்யந்தாக்ஷரங்களை மாற்றி பொருள் கொள்ளும் பொழுது பச்யக: என்று ஆகிறதல்லவா? ஆகவே "யாவற்றையும் ஸூக்ஷ்மமாக நன்கு பார்க்கின்றவர்" என்பதால் பச்யகர் என்று பொருள் ஏற்படுகிறது. அதாவது நடந்தவை, நடப்பவை, நடக்கப் போகிறவை என்ற முக்காலம் பொருளையும் பார்க்கும் சக்தி உள்ளவர் என்பது. இவரே கச்யபராக ஆகிறார். இதுவரை கச்யப ப்ரகரணம் ப்ரதிபாதகம் செய்யப்பட்டது. இனி அக்னி ப்ரகரணம் ஆரம்பிக்கப்படுகிறது.

अथाग्नेरष्टपुरुषस्य....भूयिष्ठान्ते नम उक्ति विधेमेति ।

(8 விதமான மூர்த்திகளை உடைய ஸூரியனின் அம்சம் வாய்ந்த அக்னி புருஷர்கள் என்பர். அவர்களைப் பற்றி மஹிமைகளை விளக்கும் ரிக் கூறப்படுகிறது.)

ஹே அக்னி பகவானே, நாங்கள் (நல்ல) தனத்தைப் பெற்று வாழ்வதற்குரிய நல்ல மார்க்கத்தினால் அழைத்துச் செல்லுங்கள். நாங்கள் நல்ல மார்க்கத்தில் செல்லும்படி அனுக்ரஹம் புரிய வேண்டும் என்பது கருத்து. ஏனெனில்,

தாங்கள் (நல்லவைகளான) எல்லா மார்க்கங்களை யும் அறிந்தவர்கள். எங்களிடமிருந்து போக்கடிக்க முடியாத பாபங்களைப் போக்குங்கள். பாபகார்யம் செய்யாதவாறு செய்து அனுக்ரஹம் செய்ய வேண்டும் என்பது கருத்து. (பக்தி யுடன்) அநேக (பல) நமஸ்கார வசனங்களால் நமஸ்காரங்களைச் செய்கின்றோம். இந்த மந்த்ரத்தினாலும் ஓர் இஷ்டகையை உபதானம் செய்ய வேண்டும்

அனுவாகம்—9

अग्निश्च...निगदव्याख्याता: ।।

அக்னி, ஜாதவேதஸ் முதலிய எட்டு இஷ்டகைகளின் உபதானம் கூறப்படுகிறது.

अग्निश्च जातवेदाश्च । ....एतेऽष्टौ वसवः क्षिता इति ।

அக்நி:, ஜாதவேத:, ஸஹோஜா:, அஜிராப்ரபு: வைச்வாநர:, நர்யாப:, பங்க்திராதா:, விஸர்பீ ஒவ்வொரு நாம மந்த்ரத்தாலும், ஒவ்வோர் இஷ்டகை உபதானம் செய்ய வேண்டும். ஒவ்வொரு அக்னி மூர்த்திகளும் ப்ராணிகள் ஸுகமாக வஸிப்பதற்கு காரண பூதர்கள். (அதனால் வஸுக்கள் எனப்படுவர்) இவர்கள் ஸ்வயம் ஸுகமாக வஸிப்பவர்கள். (அதனால் தான் ப்ராணி இனங்

களுக்கு ஸுகத்தை கொடுத்து வருகின்றனர்.) இதனை ப்ராஹ்மணம்

यथर्त्वेवाग्नेरर्चिर्वर्णविशेषाः । नीलार्चिश्च पीतकार्चि-श्चेति ।

ருது ப்ரகரணத்தில் ஒவ்வொரு ருது தேவதைக்கும் பின்னமான வர்ணங்கள் கூறப் பட்டுள்ளன. அந்தந்த ருது ஸம்பந்தப்பட்ட, அந்தந்த அக்னிகளும் அந்தந்த ருது தேவதை யின் வர்ணத்தை உடையவராவார்கள். வஸந்த ருது சிவந்த நிறமென்றும், க்ரீஷ்ம ருது வெளுப்பு, வர்ஷ ருது பல நிறமுள்ளதென்றும், சரத் ருது தங்க நிறமுள்ளதென்றும், ஹேமந்த, சிசிர ருதுக்கள் அதிக சிவப்புள்ளன என்றும் வர்ண பேதமான ப்ரகாசத்தை உடையவர்களாக காணப் படுபவர்.

பதினெட்டு இஷ்டகைகள் கூறப்படுகின்றன.

अथ वायोरेकादशपुरुषस्यैकादशस्त्रीकस्य । ....वैद्युत इत्येकादश ।

प्रभ्राजमाना: முதலிய பதினொரு இஷ்டகைகள் கூறப்படுகின்றன. பிறகு பதினொரு புருஷமூர்த்தி கள், பதினொரு ஸ்த்ரீ மூர்த்திகள், ரூபமாக உள்ள

வாயு தேவதாகமான 22 இஷ்டகைகள் விதிக்கப் படுகின்றன.

१. प्रभ्राजमाना: २. व्यवदाता: ३. वासुकि-वैद्युता: ४. रजता: ५. परुषा: ६. श्यामा: ७. कपिला: ८. अतिलोहिता: ९. ऊर्ध्वा: १० अवपतन्ता: ११. वैद्युत:

இவர்கள் வாயு ஸம்பந்தமான புருஷகணங்கள்.

ஸ்திரீகள் :

प्रभ्राजमान्य:, व्यवदात्य:, वासुकिवैद्युत्य:, रजता:, परुषा:, श्यामा:, कपिला:, अतिलोहित्य:, ऊर्ध्वा:, अवपतन्त्य:, वैद्युत्य:

அந்தந்த நாம மந்த்ரங்களைச் சொல்லி இஷ்டகோபதானமும் செய்ய வேண்டும். இந்த வாயு கணங்களின் ஸ்வரூபத்தை அறிந்தவனுக்கு பலன் கூறப்படுகிறது.

नैनं वैद्युतो हिनस्ति । य एवं वेद ।

இவர்களை அறிந்தவனுக்கு வைத்யுதமான அக்னியால் இடியால் மரணம் நேரிடாது. இடியி னால் ஏற்படும் மரணம் மிகவும் கொடுமையானது என்பதை அடுத்த வாக்யங்கள் கூறுகின்றன.

स होवाच व्यासः पाराशर्यः । ....य एवं वेद ।

பராசர மஹரிஷியின் புத்ரர் வ்யாஸர் 'இந்த வித்யுத்' வதம் இடியால் ஏற்படும் மரணந்தான் ம்ருத்யு சப்தத்திற்கு முக்யமான பொருள். இது மிகவும் கொடியது என்பது தாத்பர்யம் (இடியால் மரணமடைந்தவர்கள் மஹா பாபிகள்) இதுவரை கூறப்பட்டவைகளை அறிந்தவனை விரும்பப் படாத இந்த வித்யுத்வதம் அணுகாது என்று கூறி முடிக்கப்படுகிறது.

இனி கந்தர்வ கணங்கள் இஷ்டகைகள் உபாசிக்கப்படுகின்றன.

अथ गन्धर्वगणाः । ....एकादश गन्धर्वगणाः ।

ஸ்வான், அப்ராட், அங்காரி, பம்பாரி, ஹஸ்தன் ஸுஹஸ்தன், க்ருசானு, விச்வாவஸு, மூர்த்தன்வான், ஸூர்ய வர்ச்சஸ், க்ருதி என்ற பதினொரு கந்தர்வ கணங்கள், இவர்களுடைய "ப்ரசம்ஸை" கூறப்படுகிறது.

देवाश्च महादेवाः । रश्मयश्च देवा गरगिरः ।

ஸ்வயம் ப்ரகாசிப்பவர்கள், தேவர்களுள் ஒமலானவர்கள், தீப்தி பொருந்தியவர்கள், மற்

றவர்களை பிரகாசிக்க செய்பவர்கள்; விஷத்தையும் சாப்பிட்டு ஜீரணிக்கச் செய்யும் சக்தி வாய்ந்தவர்கள், இவர்களை அறிந்தவர்களுக்கு பலன் கூறப்படுகிறது.

नैनं गरो हिनस्ति । य एवं वेद ।

இவர்களை விஷபயம் அணுகாது. விஷம் ஹிம்ஸிக்காது.

"गौरीमिमाय" என்ற மந்த்ரத்தால் ஒரு இஷ்டி கோபதானம் செய்ய வேண்டும். அந்த மந்த்ரம்,

गौरी मिमाय सलिलानि तक्षती । ...सहस्राक्षरा परमे व्योमन्निति ।

இந்த மந்த்ரம் ஸரஸ்வதி தேவியின் ஸ்வரூபத்தை தெரிவிக்கிறது. சுக்ல வர்ணம் பொருந்தியவள், சப்தப்ரஹ்ம ஸ்வரூபிணீ, எல்லாப் பொருளையும் தன்னுள்ளடங்கிய சப்தங்களால் அந்தந்தப் பெயர்ச் சொற்களால் ஆக்ரமித்துள்ளவள். உதக ஜன்யமான (ஜலத்திலுல் உண்டான) பதார்த்தங்களையும் வ்யாபித்து பின்ன பின்னமான பெயர்களை உடையதுகளாகச் செய்கிறார். ஒரு பதம், இரண்டு பதம், நான்கு பதம்,

எட்டு பதம், ஒன்பது பதம் இம்மாதிரி ஆயிரக் கணக்கான அக்ஷரங்களோடு கூடிய சந்தோ பதங்களாக பிரகாசிக்கிருள். காயத்ரீ, உஷ்ணிக் அனுஷ்டுப், ப்ருஹதி, பங்க்தி, பதபங்க்தி, அக்ஷரபங்க்தி முதலிய சந்தஸுகளோடு விளங்கு பவள். சந்தஸ்-யாப்பு, வ்ருத்தம் Meter.

இந்த சப்தஸ்வரூபிணியான ஸரஸ்வதி தேவீ ஜகத்காரண பூதனுன பரமாத்மா ஸ்வரூபத்தில் விளங்குகிருள்.

वाचो विशे॒षणम् ।

இவ்வளவும் வாக்தேவதையின் விசேஷணங் கள் (சிறப்புகள்) இந்த இஷ்டகைக்கு ஸாரஸ்வ தேஷ்டகை என்று பெயர். பிறகு

अथनिगदव्याख्याताः

என்னும் மந்த்ரங்களால் இஷ்டகோபதானம் செய்யப்படுகிறது. உச்சரிக்கப்படும் பொழுதே விசேஷார்த்தத்தை போதிக்கக் கூடிய மந்த்ரங் கள்.

तानन्ुक्ष्मिष्याम॒: । व॒राह॒वस्स्वत॒पस॒: । ...ये॒ चेमे शिमि-

विद्विष॒: ।

வராஹவ: முதலிய ஆறு கணங்கள்

வராஹவ: ஸ்வதபஸ:, வித்யுன்மஹஸ:, தூபய:, ச்வாபய:, க்ருஹமேதா: ஒவ்வொரு கணத்திலும் பல மூர்த்தி பேதங்கள் உள்ளன. அதனால்தான் பஹு வசனப்ரயோகம் செய்யப்படுகின்றது.

1. वराहव: சிரேஷ்டமான மழையை அழைக்கும் வாயு புருஷர்கள்.

2. स्वतपस: ஸ்வயமாகவே உஷ்ணமானவைகள். தன்னுடைய உஷ்ணத்திற்காக அக்நியையோ ஸூர்யனையோ அபேக்ஷியாதவர்கள்.

3. विद्युन्महस: மின்னலுக்கொப்பான காந்தியை உடையவர்கள்.

4. धूपय: குங்கிலியம், அகரு, தசாங்கம் முதலிய பொருள்களை அபேக்ஷியாமல், அத்தகைய ஸுகந்தத்தை அளிக்க வல்ல தேஹத்தை உடையவர்கள்.

5. श्वापय: வெகுசீக்கரமாக வ்யாபிக்கும் தன்மையர்கள்.

6. गृहमेधा: க்ருஹங்களில் அர்ச்சிக்கத்தக்கவர்கள் (கொண்டாடத் தக்கவர்கள்). இந்த 6 கணத்தவர்களும் ஒரே ப்ரதேசத்தில் உள்ளவர்கள். ஏழாவதான शिमिविद्विष: எனும் கணத்தவர் வேறு ப்ரதேசத்தில் உள்ளவர்.

7. विपिविद्विषः க்ருஷி கர்மாவுக்கு அனுகூல மானவர்கள், க்ருஷி கர்மாவுக்கு பிரதிகூலமான வர்கள். இவ்விதம் கூறப்பட்ட வாயு மஹிமை களை ஸங்கிரஹித்து (தாத்பர்யமாக) கூறப்படு கிறது. மேல் மந்த்ரத்தால்

पर्जन्यास्सप्त पृथिवीमभिवर्षन्ति....तेषामेषा भवति ।

ஏழுவிதமான வாயுக்களால் ப்ரவர்த்திக்கப் பட்டு அழைத்து வரப்பட்ட ஸப்தவித மேகங் களைக் கொண்டு தங்களுடைய ஸாமர்த்யத்தினுல் அதோமுக வ்ருஷ்டியால் ப்ருதிவியையும், ஊர்த்வமுக வ்ருஷ்டியால் மேல் உலகத்தையும் செழிக்க செய்கின்றனர். இவ்விதம் விபஜனம் (பிரித்து) செய்து, மழையை கொடுக்கும் சக்தி அதிசயமானது. இதை விளக்கும் ரிக்

समानमेतदुदकम्....दिवं जिन्वन्त्यग्नय इति ।

பூமியில் பொழிந்த ஜலமும், ஆகாசத்தை நோக்கிப் பொழிந்த ஜலமும் ஒரே தன்மையை உடையதே. பர்ஜங்கள் வாயுவினுல் ஏவப்பட்ட மேகங்கள் சில நாட்கள் பூமியை நோக்கி மழை பொழிந்தும், சில நாட்களில் ஊர்த்வ முகமாக மழை பொழிந்தும் செழிக்கச் செய்கின்றன. மேல் நோக்கி எவ்விதம் மழையைப் பொழிய முடியும்? இங்கு த்ருஷ்டாந்த முகமாக பதில்

கூறப்படுகிறது. அக்நிஜ்வாலை எவ்விதம் ஊர்த்வ முகமாகச் செல்கிறதோ அதே போன்று (சக்தி விசேஷத்தால்) மழையும் ஊர்த்வமுகமாகப் பொழிகிறது. இந்த மந்த்ரத்தினுல் ஓர் இஷ்டகோபதானம் செய்ய வேண்டும். இந்த இஷ்டகைக்கு "வ்ருஷ்டிமதீ" என்று பெயர். 'சம்யு' நாமக மூன்று இஷ்டகோபதான மந்த்ரங்கள்.

यदक्षरं भूतकृतम्....जमदग्निमकुर्वत ।

எந்த அக்ஷர ஸ்வரூபமான (அழிவற்ற) பரப்ப்ரஹ்ம ஸ்வரூபம் தன்னுடைய இச்சையினுல் பூதபௌதிக ரூபமான ப்ரபஞ்சத்தை தோற்றுவித்து விளங்குகிறதோ, அந்த ஸ்வரூபத்தை போதிக்கும் அநாதியான மந்த்ர ஸமூஹத்தை ஆகாசத்தில் ப்ரஸரித்துள்ள மந்த்ர ஸமூஹத்தை தபஸ் சக்தியால் கண்டறிந்து, உபதேசித்து மனுஷ்யர்களுக்கு உபகாரம் செய்வதற்காக ஜமதக்நி முதலிய ரிஷி ஸங்கத்தை உண்டு பண்ணி அனுக்ரஹம் புரிந்துள்ளார் (பரமாத்மா). இந்த மஹரிஷிகள் தான் ஸத்ஸம்ப்ரதாயத்தைக் காப்பாற்றுகிறுர்கள்.

जमदग्निराप्यायते....शिवा नः प्रदिशो दिशः ।

ஜமதக்நி மஹரிஷி காயத்ரீ, உஷ்ணிக் முதலிய சந்தஸ்ஸுகளோடு கூடிய மந்த்ரங்களால்

ப்ராணிகளை அபிவ்ருத்தி செய்கிறார். அந்த ப்ராணிகள் அதிகாரிகளான யஜமானர்கள், வீர்யம் பொருந்திய மந்த்ரங்களைக் கொண்டு ஸோம யாகாதிகளை அனுஷ்டித்து ஸோமபானம் செய்து திருப்தியடைகிறார்கள். கிழக்கு முதலிய ப்ரதான திசைகள், அக்நி முதலிய அவாந்தர திசைகள் (மூலை திக்குகள்) மக்களுடைய ஸுகத்திற்கு ஹேதுவான செழிப்புடன் இருப்பதால் மக்கள் ஸுகமாகவும் சாந்தமாகவும் உள்ளனர்.

तच्छंयोरावृणीमहे....शं चतुष्पदे ।

அனுபவிக்கப்படும் ரோகங்களை போக்குவதற்கு காரணமும், வரக்கூடிய (நேரக்கூடிய) ரோகங்களை வராமல் தடுப்பதற்கு காரணமுமான அத்தகைய மஹிமையுள்ள ஆருணகேதுகம் என்கிற கர்மாவை ப்ரார்த்திக்கிறோம். அதாவது ஆருணகேதுக சயன அனுஷ்டானத்தை விரும்புகிறோம். மேலும் மேற்கொண்டு யக்ஞானுஷ்டானத்தை பிரார்த்திக்கிறோம். இந்த யஜமானனின் பல ப்ராப்தியையும் பிரார்த்திக்கிறோம். எங்களுக்கு தைவ ஸம்பந்தமான க்ஷேமம் ஏற்பட வேண்டும். என்னுடைய புத்ராதிகளுக்கும் க்ஷேமம் உண்டாக வேண்டும். இதற்குப் பிறகு ஸர்வாரிஷ்ட நிவாரணமும் கிடைக்க வேண்டும். எங்களுடைய மனுஷ்யர்களுக்கும், பசுக்களுக்கும் ஸுகம் உண்டாக வேண்டும்.

இனி ப்ராஹ்மண வாக்யம்

सोमपा असोमपा इति निगदव्याख्याताः ।

அந்தந்த மந்தரங்களால் கூறப்பட்ட மஹிமைகளை உடைய ஸோமபானம் செய்த தேவர்களும், ஸோமபானம் செய்யாத தேவர்களும் இதுவரை கூறப்பட்டார்கள்.

அனுவாகம்—10

सहस्रवृदियं........पवित्राङ्गिरसः ।

संयानीः என்ற பெயருள்ள எட்டு இஷ்டாகா மந்த்ரங்கள்

सहस्रवृदियं भूमिः.........विश्वस्य जगतस्पती ।

ஜனங்களுக்கு மிகவும் உபகாரம் செய்வதால் இந்த பூமி ஆயிரக் கணக்கான ஜனங்களால் விரும்பப்படுகிறது. இதுபோல் மேன்மை பொருந்திய ''வ்யோம'' எனும் ஸ்வர்கம்தான் ஆயிரக்கணக்கான தேவர்களால் விரும்பப்படு கிறது. இந்த ''த்யாவாப்ருதிவிகள்'' மக்களின் ரோகங்களை நிவ்ருத்தி செய்து உபகாரம் செய் பவர்களும், பொய்மையற்றவர்களுமான அச்வினி தேவர்கள் போன்று நன்மை செய்பவர்கள்.

ஆகையால் எல்லா ஜகத்தையும் பரிபாலிப்பவர்கள் இவர்கள், அச்விநீ தேவர்கள் எனப் புகழப்படுகிறார்கள்.

जाया भूमिः पतिर्व्योम.......सरमा इति स्त्रीपुमम् ।

இந்த மந்திரத்தில், த்யாவாப்ருதிவிகள் மிதுனரூபமாக (தம்பதிரூபமாக) புகழப்படுகிறார்கள். இந்த பூமி ஜாயா ரூபமானவள். தேவலோகம் - பதிரூபமானது. இந்த தம்பதிகள் சேர்ந்து வாழ்ந்தனர். இவர்களுக்கு ப்ருஹஸ்பதியும், அக்னியும் புதல்வர்கள். "ஸரமா" என்னும் வேதி (அக்னிஹோத்ர ஸ்தானம்) புதல்வி (இரண்டு புத்ரர்கள், ஒரு புத்ரீ)

शुक्रं वामन्यद्यजतं वामन्यत्..........भद्रा वां पूषणाविह

रातिरस्तु ।

இதில் த்யாவாப்ருதிவிகள், அஹோராத்ரரூபமாக ஸ்துதிக்கப்படுகிறார்கள். ஹே த்யாவாப்ருதிவி தேவதைகளே, உங்களுள் ஸ்வர்க்க தேவதை - சுக்லவர்ணமான பகல் ஸ்வரூபம். ப்ருதிவி-க்ருஷ்ண வர்ணமான ராத்ரி ஸ்வரூபம். இவ்விதம் நீங்கள் அஹோராத்ர ஸ்வரூபமாக இருக்கிறீர்கள். ஆதித்ய பகவான் ஸ்வர்க்கத்திற்கு உபகாரம் செய்வது போல் எல்லோருக்கும்

உபகாரம் செய்கிறீர்கள். நீங்கள் அன்னத்தை உடையவர். அன்ன ஸம்ருத்தி—தங்கள் அதீனம் என்பது தாத்பர்யம். அன்னத்தை அளிப்பதால் எல்லாருடைய புத்தியையும் காப்பாற்றுகிறீர்கள். பசி நீங்கினால் தானே புத்தி செயல் புரியும். ஆகவே நீங்கள் போஷகர்கள். (புஷ்டி அளித்து பரிபாலிப்பவர்கள்) இந்த ஆருணகேதுக கர்மானுஷ்டானத்தில் உங்களுக்கு மங்களம் அதாவது பிறர்க்கு (எங்களுக்கு) எதையும் செய்யும் ஸாமர்த்யம் நிறம்ப ஏற்படட்டும்.

वासात्यो चित्रौ जगतो निधानौ.........शुभस्पती आगतँ सूर्यया सह ।

த்யாவாப்ருதிவீ தேவதைகள் பரஸ்பரம் ஸ்நேகிதர்களாக ஸ்துதிக்கப்படுகிறார்கள். நீங்கள் பரஸ்பரம் ஸ்நேகிதர்களாக ஸஞ்சரிக்கிறீர்கள். நீங்கள் தேவர்களுக்கும், மனுஷ்யர்களுக்கும் (எல்லா ப்ராணிகளுக்கும்) நிவாஸ ஸ்தானத்தை கொடுக்கிறீர்கள். நிவாஸ ஸ்தானமாக விளங்குகிறீர்கள். ராஸபத்தை (கழுதை) அச்வமாக உடைய நன்மையளிக்கும் அச்விநீ தேவர்கள் போல் விளங்குகிறீர்கள். இவ்வளவு விசேஷம் பொருந்திய நீங்கள், உஷாதேவியுடன் என்னுடைய யக்ஞத்திற்கு வந்து அனுக்ரஹம் புரிய வேண்டும்.

அச்வினீ தேவர்கள் செய்யும் உபகாரம் கூறப் படுகிறது.

तुग्रोह भुज्युमश्विनोदमेघे ।

........अन्तरिक्षप्रुद्भिरपोदकाभिः ।

ஹே அச்வினீ தேவர்களே, நீருண்ட மேகத்தில், இருக்கும் உலகத்தை ரக்ஷிக்கும், ஜல ஸமூகத்தை தாண்ட வேண்டுமானால் மிகவும் த்ருடமான ஓடங்களைக் கொண்டு தான் முடியும். மேலும் ஜல ஸமூஹமானது மேற்கொண்டு ஜலம் முடியாத நிலையில் ஜலம் நிறைந்துள்ளது. அந்தரிக்ஷத்தில் ஸஞ்சரிக்கக் கூடியது, இத்தகைய ஜல ஸமூஹத்தை திரட்டி கொண்டுவரும் விஷயத்தில் (துளிக்கூட சிந்தாமல் வஹித்து வரவேண்டும்) ஆச்சரியமான த்ருஷ்டாந்தம் காட்டப்படுகிறது. மிகவும் மூர்க்கனும் மிகுந்த லோபியுமான மனிதன் உயிர்போகும் தருணத்தில் கூட செல்லிக் காசையும் ஈயமாட்டானே. மேலும் மேலும் சேர்த்துக் கொண்டு வருவானே. அம் மாதிரி ஜ்லை ஸமூஹத்தை சேகரித்து வர வேண்டும்.

तिस्रःक्षपस्त्रिरहातिव्रजद्भिः ।

.........त्रिभोरथैश्शत पद्भिः षडश्वैः ।

பொய்மையற்ற அச்விநீ தேவர்களே, மூன்று இரவும் மூன்று பகலும் விடாமல் இங்குமங்கும் பக்ஷிகள் போல் ஸஞ்சரிக்கும் மேகங்களைக் கொண்டு உலகத்தை ரக்ஷிக்கும் அபரிமிதமான ஜலத்தை சுமந்து கொண்டு வரவேண்டும், ஸமுத்ரத்தைத் தாண்டிய பாலைவன ப்ரதேசத்தில், மழை பொழிவதற்காக ரதம் பாரத்தை சுமந்து வருவது போல், நிரம்ப ஜலத்தை தரித்து வருபவைகளும் அந்தந்த ப்ரதேசத்திற்குத் தக்கவாறு. உத்தம, மத்யம, அதம எனும் முறையில் உள்ளவைகளும், ஆயிரக் கணக்காக இடைவிடாமல் தாரையாக பொழிபவைகளும், வரும் பொழுதும், செல்லும் பொழுதும், முறையே மூன்று விதமான வ்யாப்தியையுடையவைகளும் (ப்ரவுதலை உடையவைகள்) இவ்விதமான மேகங்களால் குறிப்பிட்ட பிரதேசங்களில் ஜல ஸம்ருத்தியைச் செய்யவேண்டும். இதுவும் அச்விநீ தேவர்களிடம் ப்ரார்த்திக்கப்படுகிறது.

सवितारं वितन्वन्तम् । ....सवितारेपसोऽभवत् ।

ஏ்வர் எனும் உதகத்தை தரிக்கும், மேகம் வ்ருஷ்டியை உண்டுபண்ணுவதற்காக, தன்னுடைய ரச்மி

களை விஸ்தாரமாக பரப்புகின்ற ஸூர்ய பகவானை, தனக்கு அனுக்ரஹம் செய்வதற்காக ஆச்ரயிக்கிறது. அத்தகைய ஸூர்ய பகவானே, குற்ற மற்ற எல்லோருக்கும் ஹிதமான ஸத்வ்ருஷ்டியை உண்டுபண்ண வேண்டும். அதிவ்ருஷ்டி அனுவ்ருஷ்டி முதலியவை மழையில் உள்ள பாபங்கள், குற்றங்கள் இல்லாத நல்ல மழையை அருள வேண்டும் என்பது தாத்பர்யம்.

त्य॑ सुतृप्तं विदित्वैव । ....आयसूयान्त्सोमतृप्सुषु ।

மக்களுக்கு த்ருப்தியளிக்கும் ஜலம் நிரம்பியதும் இனிமையான இடியோடு கூடியதுமான மேகங்கள். (பாகவதத்தில் க்ருஷ்ணவதார ஸமயத்தில் இடியோசை வர்ணிக்கப்படுவதைப் பார்த்து மிகவும் ரசிக்கவேண்டும். அதுபற்றி ச்லோகம்

मन्द मन्द जल धराजगर्जुरनु सागरम् ।

மேகங்கள் ஸமுத்திரத்தின் அலையோசையை அனுசரித்து மெதுவாக இனிமையாக கர்ஜிக்கின்றவாம்).

இவ்விதம் பலவிதமான இடியோசைகளோடு கூடிய மேகங்கள் சில சமயம் இத்தகைய மேகங்களில் சில மழைபொழிவதில் (அலக்ஷ்ய பாவத்

துடன்) நோக்கமில்லாமல் வக்ரபுத்தியினுல் செல்ல முற்படுகின்றன.

இந்த நிலையை அறிந்த மேகங்களை வசப் படுத்தி வைத்துள்ளவரும் கிரணங்களையுடைய வருமான ஆதித்ய பகவான், ஸோம யாகம் புரிவதில் சிரத்தையுள்ள யஜமானர்களுக்காக அந்த மேகங்களைப் பின் தொடர்ந்து மழை பொழிவதற்கு ப்ரேரணை செய்கிருர். எட்டு இஷ்டகைகள் பூர்த்தி सवंद्गामइति இரண்டு இஷ்டகோபதானம் சொல்லப்படுகிறது.

सहस्र्यासस्तमोद्योऽस्योत:......रक्षसान्विलाश्रये ।

கிரண ஸமூஹங்களையுடையவரும், குதிரைகளால் பாதுகாக்கப்பட்டவரும் (ரதவஹநம் செய்து - உபகாரம் செய்வதால் குதிரைகள் ரக்ஷகர்கள் என சொல்லப்படுகிறது) இருளைப் போக்குபவருமான ஸ்ரீ ஆதித்ய பகவான், ஜலம் இல்லாமல் ''ஹூம்பாரவம்'' செய்யும் (கத்துகிர) கோக்களை நல்ல ஜலாசயங்களில் ஜலம் பருகச் செய்து உபகாரம் செய்கிருர். அதனுல் ஸந்தோஷமடைந்த ஜனங்களால் மிகவும் ஸ்தோத்திரிக்கப் பட்டு, எல்லா தேவர்களிலும் சிறந்தவராய் விளங்குகிருர். திவ்ய ஜனங்களாலும், தைவ ஸம்பத்தையுடைய ரிக்ஷஸர்களாலும் ஸ்தோத்ரிக்கப்படுகிருர்.

अन्वेति परिवृत्याऽस्तः । ......अहरहर्गर्भन्दधाथे ।

ஆதித்ய பகவானுல், ஏவப்பட்ட மேகம் (மழை பொழியாமல் சென்ற மேகம்) மறுபடியும் இங்கு வந்து மழை பொழிகிறது. ஹே அச்விநீ தேவர் களே, நீங்கள் தான் முன் மந்த்ரங்களில் கூறப் பட்டபடி, த்யாவாப்ருதிவிகளுக்கு மழை பொழி வதற்குரிய உபகாரங்களைச் செய்து, மழை ஜலம் மூலமாக எல்லா ப்ராணிகளுடைய ப்ரதிதினம் உற்பத்திக்கு காரணமாயுள்ளீர்கள்.

இரண்டு இஷ்டகோபதானம் பூர்த்தி பெற்றது. இனி ப்ராஹ்மண வாக்யங்கள் முன் கூறப்பட்டவைகளின் பெருமைகளை விளக்கும்.

तयोरेतौ वत्सौ......दम्पती एव भवतः ।

த்யாவாப்ருதிவிகள் பல ப்ரகாரமாக புகழப் படுவதைக் காண்போம். கோ ரூபமான த்யாவா ப்ருதிவிகளுக்கு பகல் இரவு இரண்டும் வத்ஸ ஸ்தாநீயங்கள் (கன்று போல) அதிலும் ப்ருதி விக்கு பகல் வத்ஸம் - த்யுலோகத்திற்கு ராத்ரி வத்ஸம் இவ்விரு வத்ஸங்களும் ஒன்றுக் கொன்று பிரியாத தம்பதி போன்றுள்ளனர்.

तयोरेतौ वत्सौ......दम्पती एव भवतः ।

கோ ஸ்தாநியமான (பசு போன்ற) அஹஸ் ராத்ரி எனும் தம்பதிகளுக்கு அக்னியும், ஆதித்ய னும் வத்ஸ ஸ்தானீயர்கள் (கன்று போல) ராத்ரி ரூபமான கோவுக்கு ஸ்வேதவர்ணமான ஆதித் யன் வத்ஸம், அஹஸ்ஸுக்கு அருணவர்ணம் உள்ள அக்நிவத்ஸர்.

तयोरेतौ वत्सौ......दम्पती एव भवतः ।

அக்நி ஆதித்ய ரூபமான கோக்களுக்கு வ்ருத்ரः வைத்யுத: என இரண்டு வத்ஸங்கள். அக்நிக்கு வ்ருத்ரர் வத்ஸம், ஆதித்யருக்கு வைத் யுதர் வத்ஸர். வ்ருத்ரः அக்நிக்கு ஆவாரகமான தூமம் (புகை) வைத்யுத: ஆதபம் (வெய்யில்)

तयोरेतौ वत्सौ । ......तौ तावेव प्रतिपद्येते ।

வ்ருத்ர, வைத்யுத கோக்களுக்கு ஊஷ்மா, நீஹாரம் இரண்டு வத்ஸங்கள். வ்ருத்ரருக்கு ஊஷ்மா உஷ்ண ஸ்வபாவம் வத்ஸம்; வைத்யு தருக்கு நீஹாரம் - பனி.

இவர்கள் ஸ்வகாரண பூதர்களான, வ்ருத்ர - வைத்யுதர்களோடு மறைதலை அடைகின்றனர். இவர்கள் (ஊஷ்மா நீஹாரம்) வத்ஸங்களை உண் டாக்குவதில்லை. இவ்விதம் (நேரடியாகவும்) ஸாக்ஷாத்தாகவும், பரம்பரையாகவும் இந்த

த்யாவாப்ருத்விகள் கொண்டாடப்படுகின்றனர். இனி ராத்ரி தேவதையையும், ராத்ரியின் வத்ஸ பூதரான ஆதித்யனும் ப்ரசம்ஸிக்கப்படுகிறார்கள்.

सेयँ रात्री गर्भिणी पुत्रेण संवसति ।

......एवमेतस्या उल्वणम् ।

ஆதித்யனுக்கு மாத்ரு ஸ்வரூபமாக சொல்லப் பட்ட ராத்ரி தேவதை கர்ப்ப பூதமாயுள்ள, ஆதித் யனை தரித்தவளாக, ஆதித்யனுடன் வஸிக்கிறாள். அதனால்தான் ராத்ரியில் ஸூர்யனைக் காண முடியவில்லை. ஆதித்யனுடைய ரச்மிகள் தான் கர்ப்பபூதமான ஆதித்யனுக்கு 'கர்பவேஷ்டன', (பனிக்குடம்) உப்பமாக (கர்பத்தை மறைக்கின்ற தோல் பையாக) உள்ளன.

இவ்விதம் ப்ரஸம்ஸிக்கப்பட்ட ராத்ரி ஆதித் யன் இவர்களை அறிந்தவர்களுக்குரிய பலனும், பெருமையும் சொல்லப்படுகிறது.

प्रजयिष्णुः प्रजया च पशुभिश्च भवति ।

......आदित्यः पुण्यस्य वत्सः ।

ராத்ரி மாஹாத்மியத்தை அறிந்தவன், ஸத் ப்ரஜைகளேயும், பசுக்களேயும் அடைந்து ஸுகமாக இருப்பான். மேலும் ஆதித்யனுடைய மஹிமையை அறிந்ததால் உதிக்கின்ற ஸூரியனேயும் அஸ்த மன ஸூரியனேயும் அடைவான் உதய ஸ்தானத் தையும், அஸ்தமன ஸ்தானத்தையும் தன்னிஷ் டப்படி செல்வதற்கு ஸாமர்த்யம் வாய்ந்தவனுக ஆகிருன். மேலும் ஆதித்யன் போன்று புண்ணிய தேவதையின் புத்ரனுக ப்ரகாசிப்பான்.

अथ पवित्राङ्गिरसः

இதுவரை ஸம்யாநீ முதலிய இஷ்ட கோப தான மந்த்ரங்கள் உபதேசிக்கப்பட்டன. அடுத்து அடுத்த அனுவாகத்தில் பவித்ரர்களான 'அங்கிரஸ்' என்ற நாமதேயமுடைய இஷ்டகா மந்த்ரங்கள் உபதேசிக்கப்படுகின்றன.

அனுவாகம்—11

पवित्रवन्तः......विसृज ।

முதலிய நான்கு இஷ்டகோபதானம் மந்த்ரங்கள்.

पवित्रवन्तः परिवाजमासते ।

...धीरा इच्छेकुर्धरुणेष्वा रभम् ॥

ஸோமயாகத்தில், ஸோமரஸத்தை வடிக் கட்டுவதற்குறிய தசாபவித்ரங்களையுடையவர் களாகிய ரித்விக்குகள், அன்ன ஸம்ருத்திக்காக ஸோமயாகம் புரிகின்றார்கள். இந்த ஸோம யாகாதிகளை பரிபாலிக்கும் புராதனமான (பழமை யான) ப்ரஹ்மதேவர் இந்த கர்மாவை ரக்ஷிக் கிறார். வருண பகவான் ஸமுத்ரம் போன்று எல்லையற்று விளங்கும் அந்தரிக்ஷ ப்ரதேசத்தை கர்மாவின் விளைபயனான மழையைப் பொழிய வைப்பதற்காக (வருண பகவான்) மேகங்களால் சூழவைத்துள்ளார். புத்திமான்கள் தான் அக்னியை தரிக்கும் யாக க்ருஹங்களில், கர்மாக் களை அனுஷ்டிப்பதற்கு ஸமர்த்தர்கள்.

पवित्रं ते विततं ब्रह्मणस्पतं ।

......शृतास इद्वहन्तस्तत्समाशत ।

அன்னத்தையும், மந்த்ரத்தையும் பரிபாலனம் செய்கின்ற ஹே ஸோம தேவதையே! ஸோமயா காநுஷ்டானத்திற்காக ஸோமரஸத்தை வடிக் கட்டும் இந்த தசாபவித்ரம் (வடிக்கட்டும் வஸ்த்ரம்) விஸ்தரிக்கப்பட்டுள்ளது. தசாபவித்

ரத்தினுல் வடிகட்டுதல் செய்யப்பட்டதால் யாகத்தில் அங்கமாகும் ஸாமர்த்யத்தை ஸோமரஸம் பெற்றுள்ளது. எவ்விதமெனில் கபாலாதிகளால் பக்வம் செய்யப்படாத புரோடாசாதிகள் எவ்விதம் யாகத்திற்கு அர்ஹமில்லையோ, அவ்விதமே தசாபவித்திரத்தினுல் வடிக்கப்படாத ஸோமரஸாதிகள் யாகார்ஹமல்ல. நல்லவிதமாய் பக்வமான புரோடாசாதிகள் யாகங்களில் அர்ஹதையுள்ளவைகளாகின்றன.

ब्रह्मा देवानाम् ।

தேவர்களுள் ப்ரஹ்மா சிரேஷ்டமானவர், கவிகளுக்குள் மார்க்கதர்சியானவர் சிரேஷ்டர் (வியாஸர், வால்மீகிபோன்ற). ப்ராஹ்மணர்களுக்குள் மந்த்ர த்ரஷ்டாவான ரிஷி சிரேஷ்டர் (வஸிஷ்டர்). மிருங்களுக்குள் காட்டு எறுமை பலத்தினுல் உயர்ந்தது, பறவைகளுள் ச்யேனம் (கழுகு) கருடன் சிரேஷ்டம், வனங்களை வெட்டி விழுத்துவதில் கோடாலி பலம் பொருந்தியது, பரிசுத்த வஸ்துக்களில் ஸோமம் சிரேஷ்டமானது.

भसतस्सद्ये ततक्षुः । ......नक्षत्रैश्शंकृतोऽवसन् ।

மரீசி முதலிய ஸப்தரிஷிகளும், முக்யமான, அத்ரி அகஸ்த்யர், இவர்கள் அவ்யக்தமாக

உள்ள ஜகத்காரண வஸ்துவிலிருந்து வ்யக்த்மான (தெரியும்படியான) ஜகத்தை ஸ்ருஷ்டித்துள்ளனர். இவர்கள் பூர்வ கல்பத்தில், விசேஷமான தபஸ்ஸைச் செய்து ஜகத்தை ஸ்ருஷ்டிக்கும் அதிகாரி புருஷர்களாக இந்த கல்பத்தில் அவதரித்து, அவ்யக்தமான ஜகத்காரண வஸ்துவிலிருந்து வ்யக்தமான ஜகத்தை தோற்றுவித்தனர். எவர் இந்த ஆருணகேதுக சயனத்தை அனுஷ்டிக்கின்றார்களோ அவர்கள் அடுத்த ஜன்மாவில் அத்ரி, அகஸ்த்ய மஹரிஷிகளுக்கு ஸமானமாக விளங்குவார்கள். மேலும் இவர்கள் நக்ஷத்ரமாக பிரகாசித்துக் கொண்டு ஜகத்திற்கு க்ஷேமத்தைக் கொடுப்பவர்களாகத் திகழ்வார்கள். இந்த கர்மானுஷ்டாதாக்கள் தேவலோகத்தில் நக்ஷத்ரரூபத்தைப் பெற்று விளங்குவர் என்று தாத்பர்யம்.

ஒரு ப்ராஹ்மண வாக்யம் சொல்லப்படுகிறது.

अथ सवितुश्श्यावाश्वस्यावर्तिकामस्य ।

இதற்கு முன்பு பவித்ராங்கிரஸ் ஸம்பந்தமான நான்கு இஷ்டகைகள் கூறப்பட்டன. இனி வைராக்யத்தைப் பெறுவதில், ஆர்வமுள்ள ச்யாவாச்வ மஹரிஷி ஸம்பந்தமான இஷ்டகா மந்திரங்கள் கூறப்படுகின்றன. இங்கு ஒரு அபூர்வ விஷயம் கூறப்படுகிறது. ச்யவாச்வர் இப்படி அபிப்ராயப்படுகிறார். தன ஸம்ருத்தி, வைராக்யம், ச்ரேயஸ் ப்ராப்திக்கு ப்ரதிபந்தகம் அவர்த்தி

தாரித்ரியம் தான், சிரேயஸ் ப்ராப்திக்கு ஸாதன மான வைராக்யத்தை உண்டு பண்ணும்–ஆகவே இந்த மஹரிஷி தாரித்யத்தை ஏழ்மையை விரும்பு கிறார். இங்கு கீதாவசனமும் ஆசார்யாள் பாஷ்ய மும் ரஸிக்கத்தக்கது.

शुचीनां श्रीमतां गेहे योगभ्रष्टोऽभिजायते ।

கர்மயோகத்தை அனுஷ்டித்து வரும் ஒருவன் யோக ஸித்தியைப் பெருமல் பாதியிலேயே கால் கதியை அடைந்துவிட்டால், அவன் என்னுவான் என்று அர்ஜுனன் கேட்டதற்கு பகவான் மேற்படி கூறி பரிசுத்தமானவர்களும், ஸ்ரீமான்களுமான உத்தம குலத்தில் பிறந்து க்ரமமாக மேன்மை பெறுவான் என்று

अथवा योगिनामेव कुले भवति धीमताम् ।

கூறுகிறார். இந்த இடத்தில் பகவத்பாதாள் பாஷ்யம் ச்யாவாச்வருடைய அபிப்ராயத்தை ப்ரகாசப்படுத்துகிறது. ஆசார்யாள் பாஷ்யத்தில் உத்தம யோகிகளுடைய அதிலும் தரித்ரர்களான உத்தமகுலத்தில் பிறந்து ச்ரேயஸ்ஸை அடை கிருன். இந்த ஜன்மம் மிகவும் உயர்ந்தது. ஸுலபமாகப் பெறமுடியாதது என்று போற்றி உபதேசிக்கிறார்.

ச்யாவாச்வரின் இஷ்டகா மந்த்ரங்கள் :

अमी य ऋक्षा निहितास उच्चा......विचाकशच्चन्द्रमा नक्षत्रमेति ।

இதிலிருந்து ஏழு இஷ்டகா மந்த்ரங்கள் சொல்லப்படுகின்றன. நம்மால் காணப்படும் நக்ஷத்ர விசேஷங்கள் ஆகாசத்தில் மிகுந்த உச்ச ஸ்தானத்தில் ப்ரஜாபதியினுல் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. இவைகள் ராத்ரியில் ஸ்பஷ்டமாகக் காணப்படுகின்றன. பகலில் காணப்படுவதில்லை. காரணம்? இந்த நக்ஷத்திர ஜ்யோதிஸ்ஸை ஸூர்ய தேஜஸ் மறைத்து விடுகிறது. எவ்வித இடையூறுமின்றி ஸூர்ய தேஜஸ்ஸின் வ்யாபாரம் (ப்ரவர்த்தி) அமைந்துள்ளது. ஆகையினுல் நக்ஷத்ரப்ரகாசம் மறைந்து விடுகிறது. சந்த்ர பகவாஞேவெனில் நன்கு ப்ரகாசிக்கும் நக்ஷத்திர ஜ்யோதிஸ்ஸோடு சேர்ந்து விடுகிருர். அதாவது நக்ஷத்ர ஜ்யோதிஸ்கள் மறைப்பதில்லை. ஆகவே ராத்ரியில் நக்ஷத்ர ஜ்யோதிஸ் நன்கு பிரகாசிக்கின்றது.

तत्सवितुर्वरेण्यम्......धियोयोनः प्रचोदयात् ।

எந்த ஸவிதாவானவர் ஸூர்ய பகவான், நம்முடைய புத்தி வ்ருத்திகளை, நல்ல விஷயங்களில் ப்ரவர்த்திக்கச் செய்து அனுக்ரஹம் புரி

கிருரே, அத்தகைய ஸவிதாவினுடைய விரும்பத் தக்கதும், சிரேஷ்டமுமான, ப்ரஸித்தமான தேஜஸ்ஸை த்யானம் செய்வோமாக.

तत्सवितुर्वृणीमहे । ......तुरं भगस्य धीमहि ।

யக்ஞம் அனுஷ்டிக்கின்ற, செய்கின்ற நாம், போகஸாதனமானதும், அதாவது போகஸாதன பதார்த்தங்களை அருளி உப்சரிப்பதும், மிகவும் போற்றத்தக்கதும், ஸர்வ ஜகத்தையும் தரிப்பதும், உடனடியாக ஸௌபாக்யாதி பலன்களை அனுக்ரஹிப்பதுமான், ஸௌபாக்யத்தோடு கூடிய அந்த ஸவிதாவினுடைய தேஜஸ்ஸை த்யானம் செய்வோமாக (தியானிப்போமாக).

अपागूहत सविता तृभीन् । ...अस्थ्यस्थ्ना संभविष्यामः ।

ஸூர்ய பகவான், நக்ஷத்ர ப்ரகாசத்தை மறைத்து இருண்டதாகச் செய்யும் தன்னுடைய கிரணங்களை, ராத்ரி காலத்தில் அந்தரிக்ஷ ப்ர தேசத்திலிருந்து மறைத்து வைத்துள்ளார். அதாவது ஆகாசத்தில் ப்ரகாசிக்காமல் செய்து விடுகிருர். அதனுல்தான் ராத்ரியில் நக்ஷத்திரங்கள் ப்ரகாசமாகக் காணப்படுகின்றன. மறைப்பது பற்றி த்ருஷ்டாந்தம் காண்பிக்கப்படுகிறது. தேஹத்திலுள்ள அஸ்தி (எலும்பு) ரத்தத்தினுல்

மறைக்கப்பட்டுள்ளது போன்று. இதன் கருத்து ஸ்வபாவத்தில் வெண்மையான அஸ்தி ரக்தாதிகளால் மறைக்கப்பட்டு வெண்மையை இழந்து காணப்படுவது போல் நக்ஷத்ர ப்ரகாசத்தை ஒளியிழக்கச் செய்யும், ஸூர்ய கிரணத்தின் ப்ரகாசத்தை ஸூர்ய பகவான் ஒளியிழக்கச் செய்துவிடுகிருர்.

नाम नामैव नाम मे । ...यज्ञेयुक्षि यष्टाहे च ।

பூர்வ மந்த்ரங்களில் இஷ்டகை ஸூர்யருபமாகவும் நக்ஷத்திராதி ரூபமாகவும் ஸ்தோத்திரம் செய்யப்பட்டது. இந்த மந்த்ரத்தில் இஷ்டகை பரமாத்ம ஸ்வரூபமாக வர்ணிக்கப்படுகிறது. பரமாத்மாவின் ஸர்வாத்மயம் கூறப்படுகிறது. அதுவும் ப்ரஹ்மஸாக்ஷாத்காரம் பெற்ற அனுபூதிமாளுக, ஒரு மஹரிஷி முகமாக வர்ணிக்கப்படுகிறது. உலகத்தில் பின்ன பின்னமாக காணப்படும் அவ்வளவு வஸ்துக்களும் பெயரிளுல் மட்டும் தான் பின்னமாயுள்ளது. வாஸ்தவத்தில் யாவுமே காரண ஸ்வரூபமாயுள்ள ஒன்றேதான். கார்யங்கள் பெயரிளுல் மட்டும் அதாவது வாக்கிளுல் மட்டும் வெவ்வேருக கூறப்படுகிறது. அதாவது விகாரம் முழுவதும் வாக்கிளுல், சப்தத்திளுல், பெயரிளுல் மட்டும் பின்ன பின்னமாக வழங்கப்படுகிறது.

वाचारम्भणं विकारः नामधेयं मृत्तिकेत्येवसत्यम्
छान्दोग्योपनिषत्

எவ்விதம் குடம், மடக்கு, வாணுய் சட்டி என்று வெவ்வேறு பெயர்களால் கூறப்பட்டாலும், யாவும் காரணப் பொருளான ம்ருத்திகையை தவிர்த்து (மண்ணை) வேருக இல்லையோ அதாவது பெயரும், உருவமும் வெறும் விகார மாத்ரமோ, அதாவது உடலுக்குடல் விகாரப்பட்டு வெவ்வேறு பெயர்களைப் பெறுகிறது. ஆக்வே இவைகள் நித்யமல்ல. காரணப் பெயர்களான மருத்தே (மண் தான்) நித்யம். இதேபோல் பரமாத்ம ஸ்வரூபத்தில் தோற்றம் யாவும் விகாரமே. உண்மையில் காரணப் பொருளான பரமாத்ம ஸ்வரூபமே. ஆத்மா பரோக்ஷத்தைப் பெற்ற அனுபூதிமான் ஸ்வானுபாவத்தை (தன்னுடைய அனுபவத்தை) விளக்குகிருர். உலகில் அலியாகவும், புமாணுகவும், ஸ்திரீகளாகவும் மரம் போன்ற ஸ்தாவரங்களும் மனிதர், மிருகம் போன்ற ஜங்கம ப்ராணங்களும் நான்தான். அதாவது ப்ரஹ்ம ஸ்வரூபந்தான். நான் தான் பூர்வ ஜன்மத்தில் யாக கர்த்தா - யாகம் செய்தவன். இப்பொழுது யாகம் செய்பவன், அடுத்த ஜன்மத்தில் யாகம் செய்யப் போகிறவன். இவ்விதம் ''ஸார்வாத்யானுபவம்'' ப்ரகாசப்படுத்தப்படுகிறது. அத்தகைய ''அஹம் ப்ரஹ்மாஸ்மி'' நான். இந்த இஷ்டகை அந்த ப்ரஹ்ம ஸ்வரூபமானது.

यथा भूतान्ययक्षत । ......अनूबन्ध्योऽस्म्यहं विभुः ।

நான் தான் (பரமாத்மா) யாகம் செய்யும் தீக்ஷிதர்கள் சரீரத்தில் ஜீவரூபேண ப்ரவேசித்து யாகாநுஷ்டானம் செய்கிறேன். என்னுல் ஸ்ருஷ்டிக்கப்பட்ட பஞ்ச பூதங்களே பசுக்களாகவும் நால்கால் ப்ராணிகளாகவும், இரண்டு கால் ப்ராணிகளாகவும் மற்றவைகளாகவும் ஆனது. நான் தான் ப்ரஹ்ம சைதன்ய ஸ்வரூபத்தினுல் எங்கும் வியாபித்து அந்தந்த சரீராபிமானியாக இருந்து வருகிறேன். பரமாத்ம ஸ்வரூபத்தைத் தவிர்த்து வேறென்றும் உண்மையில் நிரூபிக்க முடியாது என்பது தாத்பர்யம்

स्त्रियस्सतोः । ......यस्ता विजानात्सवितुः पितासत् ।

ஸத்ஸ்வரூபமான ப்ரஹ்மத்தை அறிந்தவரின் பெருமை கூறப்படுகிறது. உருவத்தில் ஸ்த்ரீகளாயிருந்தாலும் எந்த ஸ்திரீகள், பூர்ணஸ்வரூபமான ஸத்ஸ்வரூபத்தை பரமாத்ம ஸ்வரூபத்தை அறிந்தவர்களோ அவர்கள் புருஷர்களேயாவர். இதேபோன்று உருவத்தால் புருஷர்களாயிருந்தும் ஸத்ஸ்வரூபத்தை அறியவில்லையோ அவர்கள் அதமாதமான ஸ்திரீகளே. இதே போன்று புறப் பொருட்களை நன்கு பார்க்கும் சக்தி பெற்ற கண்கள் உடையவராயினும் ஸத்ஸ்வரூபத்தை அறிய

வில்லையோ ஏன்? அறிவதற்கு முயற்சிக்க வில்லையோ அவர்கள் குருடர்களே. எவர் உலக ரீதியில் பிறவிக் குருடர்களாயினும் ஸத்ஸ்வரூபத்தை அறிந்தவரோ அவர் நன்கு கண் படைத்தவரே. எந்த ஒரு புத்ரன் தன் பிதாவினால் அடையப்படாத அந்த ஸ்வரூபத்தை அறிந்தவனோ அவன் தன்னைப் பெற்ற பிதவுக்கே பிதாவாக ஆகிவிடுகிறான். அதாவது புத்திரன் தன் பிதாவுக்கே ஸத்ஸ்வரூபத்தை உபதேசிக்கும் குருரூபமான பிதாவாக ஆகிவிடுகிறான்.

अन्धो मणिमविन्दत् । ......तमजिह्वा असश्चत ।

இது முதல் ஐந்து இஷ்டகைகள் விச்வதேவ ஸம்பந்திகள். "वैश्वदेव्य" உலக ரீதியில் கண்களால் பார்த்து, கைகளால் எடுத்து, மணி ஹாரத்தைக் கழுத்தில் அணிந்து, மிகவும் நன்றாக உள்ளது என்று நாவினால் புகழ்வது வழக்கம். ஆனால் சித்ஸ்வரூபமான பரமாத்மாவுக்கு பார்ப்பதற்கு கண் தேவையில்லை, எடுப்பதற்கு கைகளும் தேவையில்லை, அணிவதற்கு கழுத்தும் தேவையில்லை. புகழ்வதற்கு நாவும் தேவையில்லை. அதாவது ஸர்வ சக்திமான் என்பது தாத்பர்யம். ச்வேதாச்வதர உபநிஷத் மிகவும் ஸ்பஷ்டமாக இதை போதிக்கிறது.

अपाणिपादोजवनो गृहीतापश्यत्यचक्षुः सशृणोत्यकर्णः ॥ என்று.

பரமாத்மாவுக்கு கால்கள் கிடையாது. ஆனால் வேகமாக நடந்து செல்வார். கைகள் கிடையாது ஆனாலும் யாவற்றையும் எளிதாக பிடித்து விடுவார். கண்கள் கிடையாது. ஆயினும் துல்யமாய் பார்க்கும் சக்தியுள்ளவர். காதுகள் கிடையாது, ஆயினும் எல்லா சப்தத்தையும் கேட்கும் ஆற்றல் உள்ளவர். பரமாத்ம ஸ்வரூபம் அவ்வளவு வல்லமையுடையது என்பது தாத்பர்யம். இங்கு பாஷ்யத்தில் ஜீவேச்வரஸ்வரூப விசாரம் செய்யப்படுகிறது.

कार्योपाधिरयं जीवः कारणोपाधिरीश्वरः परचैतन्य-स्वरूप

சிறந்த ஞான ஸ்வரூபியுமான பரமாத்மா, அவித்யய மாயா கர்மாக்கள் தேஹேந்திரியாதிகளை உபாதியாகக் கொண்டபொழுது உபாதி-பேதஸாதனம், பின்ன பின்னமாகப் பிரித்துக் காண்பதற்குரிய ஸாதனம் (Separators) பரமாத்மா ஜீவனாகிறான். அந்த பரமாத்மாவே காரணமான மாயையை உபாதியாகக் கொள்ளும் பொழுது ஈச்வரனாகிறான் இந்த ஜீவன். ஜீவாபிமான ரூபமான அக்ஞானத்தினால் தன் வாஸ்தவ ஸ்வரூபத்தை அறிவதில்லை. அதனால் அந்தந்த பதார்த்தத்தை அறிந்து கொள்ள கண், காது முதலிய உபகரணங்கள் தேவை. காரணோபாதிகளான ஈச்வரனுக்கு மாயை வசப்பட்டுள்ளது, ஆகவே அவனுக்கு அக்ஞானம் கிடையாது.

ஆகையினால் அந்தந்த வஸ்துக்களை அறிவதற்கு கண் முதலிய உபகரணம் தேவையில்லை.

குறிப்பு:—ஜீவன் மாயைக்கு – மாயாகார்யத்திற்கு வசப்பட்டவன்; ஈச்வரனுக்கு மாயை வசப்பட்டுள்ளது என்று தாத்பர்யம். உபாதியான தேஹேந்திரியாதி அபிமானம்-அக்ஞானம் நீங்கியவுடன், ஜீவபாவம் நீங்கி, ஸ்வஸ்வரூபத்தை பெற்றுவிடுகிறான். குறிப்பு - வசீக்ருத மாயன் (மாயையை வசப்படுத்தியவர்) ஈச்வரன், மாயா வசீக்ருதன் ஜீவன்.

ऊर्ध्वमूलमवाक्छाखम्......मृत्युर्मा मारयाविति: ।

ஸம்ஸார வ்ருக்ஷஸ்வரூபம் வர்ணிக்கப்படுகிறது. பொதுவாக வ்ருக்ஷங்களின் மூலம் அடியில் இருக்கும், கிளைகள் மேல் நோக்கி இருக்கும். இந்த ஸம்ஸாரவ்ருக்ஷம் விலக்ஷணமானது. இதன் மூலம் மேலேயுள்ளது கிளைகள் கீழ் நோக்கியுள்ளன. அதாவது ஊர்த்வமான, உத்க்ருஷ்டமான ப்ரஹ்ம ஸ்வரூபந்தான் இந்த ஸம்ஸார வ்ருக்ஷத்திற்கு மூலபூதம் காரணம். நிக்ருஷ்டமான கீழ்மையான (மட்டமான) ப்ரஹ்மாதி ஸ்தம்ப பர்யந்தமுள்ள தேஹங்கள் தான் கிளைகள். பொதுவாக மரங்கள் அரிவாள், கோடரி முதலியதுகளால் வெட்டி வீழ்த்தப்படுகின்றன. அதனால் தான் மரங்களுக்கு வ்ருக்ஷங்கள் என்று பெயர்.

वृक्ष्यन्त इति वृक्षाः ओव्रश्चु उदने

எனும் தாதுவிலிருந்து இந்த வ்ருக்ஷ சப்தம் நிஷ்பன்னமானது-ஆக்கப்பட்டது. அதுபோன்று இந்த ஸம்ஸார வ்ருக்ஷமும் 'தத்வஞானம்' எனும் கத்தியினுல் வீழ்த்தப்படுகிறது. அதனுல் இதுவும் வ்ருக்ஷந்தான்.

குறிப்பு : ப்ரஹ்மாதி - ஸ்தம்ப பர்யந்தம் ப்ரஹ்மதேவர் சரீரம் முதல் ஸ்தம்பம் என்று கூறப்படும் ''இடையன்'' எனும் ப்ராணி தேஹம் வரை 84 லக்ஷம் ஜீவராசிகள் என்று கூறுவர் ஆன்ருேர். ''ஸ்தம்பம்'' இது ஒரு சிறிய ஜந்து பெறும்பாலும் 'புல்' சிறு செடிகள் நிரம்பிய இடங்களில் கையில் கோலுடன் சஞ்சாராம் செய்யும் மாடு மேய்த்து காப்பாற்றும் இடையர் போல. இந்த ஜந்துவும் கையில் கோல் போன்ற நீண்ட உருப்போடு அழகாக நடந்து செல்லும். அதனுல் தான் இதற்கு இடையன் பூச்சி என்று சொல்லுவார்கள்.

இவ்விதம் இந்த ஸம்ஸார வ்ருக்ஷத்தின் தன்மையை நன்கு தத்வ ரீதியில் அறிந்தவர் "என்னை ம்ருத்யு கொன்று விடுவானே'' என்று பாமரர்கள் போல் அஞ்சமாட்டான். எனெனில் சரீரத்திற்குத்தான் நாசம், ஆத்ம ஸ்வரூபமான எனக்கேது நாசம் என்று நிர்ப்பயமாய் ஸஞ்சரிப்பான். அதாவது உத்தம ஞானியின் நிலை கூறப்பட்டுள்ளது.

हसितं रुदितं गीतम् । ......अङ्गानि स्नेव विद्धि तत् ।

ஆத்ம வஸ்துவை அறிவதற்கு வேதாந்த விசாரம் அதற்கு ஸாதனமான ஸாதனசதுஷ்டய ஸம்பத் முதலியவை அவசியமாகிறது. இது எதற்கு? சரீரந்தான் ஆத்மா அதை அறிவது மிகவும் ஸுலபம் எனும் சங்கை இங்கு நிவர்த்திக் கப்படுகிறது. எப்படி? ஆத்மா நித்யமானது அழிவற்றது என்றும் ஒரே தன்மை உடையது அதாவது விகாரமற்றது. விகாரமுள்ளன யாவும் அழியுந்தன்மையுடையன. இந்த சரீரம் ஒரு சமயம் சிரிக்கிறது, ஒரு சமயம் அழுகை, மற்றொரு சமயம் பாட்டு, ஒரு சமயம் வீணை, ம்ருதங்கம் இவைகளைக் கொண்டு விநோதப்படு கிறது. ஒரு சமயம் ம்ருதமாகிறது. ஒரு சமயம் ஜீவனோடு இருக்கிறது. இவைகள் நரம்புகள் நிறைந்து கை கால்கள் போன்று சரீரத்தின் அவயவங்களே என்று விவேகமுள்ள நீ, அறிவா யாக.

अतृष्यं स्तृष्यं ध्यायत् । ......अचेता पश्च चेतनः ।

அநாத்மாவான தேஹாதிகள் ஜடம், அறி வற்றவை. மேல் கூறப்பட்ட தர்மங்கள் சரீரத்தி னுடையது என்று கூறப்பட்டது. உலக வழக்கு இவ்விதம் உள்ளதே? அதெப்படி யெனில் இந்த

வ்யவஹாரம் அத்யாஸத்தினுல் ஏற்பட்டுள்ளது. அத்யாஸம் என்பது உண்மையில் ஒரு பொருள் இல்லாத இடத்தில் அந்த பொருளை அறியாமை யினுல் ஏதோ ஒரு சிறு ஸாத்ருச்யத்தைக் கொண்டு (உபமானம்) ஆரோபணம் செய்து அவதிப்படுவது. பழுதையில் (கயரில்) பாம்பை ஆரோபணம் செய்து நடுங்குவது போல அனுத் மாவான தேஹத்தில் ஆத்மாவையும் அதாவது சைதன்ய தர்மத்தையும், அதுபோல் ஆத்ம ஸ்வரூபத்தில் அனுத்மாவான தேஹாதிகளின் ஜட தர்மத்தையும் ஆரோபணம் செய்துள்ளதால் நான் சிரிக்கிறேன், நான் அழுகிறேன், நான் துக்கிக்கிறேன், நான் ஸுகப்படுகிறேன், என்பது போன்ற வ்யவஹாரம் நடந்து வருகிறது. வாஸ்த வத்தில் ஸுகம், துக்கம், சிரிப்பு, ரோதனம், த்யானம் (எண்ணுதல்) முதலியவை ஜடமான அந்தஹ்கரண தர்மங்கள் ஆத்மாவுக்கு இத்த கைய தர்மங்கள் கிடையாது. அந்தஹ்கரணத் தோடு ஸம்பந்தப்பட்டுள்ளதால், ஒன்றுக்கொன்று பிசிறி ஒட்டிக் கொண்டுள்ளதால் அவனுடைய தர்மங்களை தன்னுடையது என்று ஆத்மா. எண்ணிக் கொண்டு விடுகிறது. பாலோடு கலந்த ஜலமும், நானும் பால்தான் என்று காட்டிக்கொள் வது போல அந்தஹ்கரணம் நான்தான் ஆத்மா என்று பறைசாற்றிக்கொள்கிறது. ஆத்மா தேஹாதிகளிடமிருந்து நாம் தனித்துள்ளோம் எனும் பாவத்தையே மறந்து விடுகிறது. ஸந்தோஷத்தை அடையாமலேயே நான் ஸந்

தோஷமுள்ளவன் என்றும், எண்ணுமலேயே (த்யா னிக்காமலேயே) நான் எண்ணுகிறேன். இம்மாதி ரியே ஆத்மாவுக்கு இல்லாத கர்த்ருத்வ (செய் தல்), போக்த்ருவத்தை (அனுபவித்தல்) யானை தன் தலையில் தானே மண்ணை வாரிப் போட்டுக் கொள்வது போல், நெடுங்கால வாஸனு பலத் தால் (செம்பில் களிம்பு போன்ற வாஸனைத் தடிப் பால்) ஆத்மா அல்லலுற்றது போல் அழுமூஞ்சி யாகி விடுகிறது. இவ்வளவுக்கும் காரணம் நிருருதிபோல் ப்ரதிகூலம் செய்கின்ற மாயையின் புத்ரனுன அஹங்காரம்தான். 'அஹங்காரம் மாயா கார்யம் என்பது தாத்பர்யம், உண்மையில் அசே தனமான இந்த அஹங்காரம் தேஹமே இல்லாத (சரீர வாஸனை அற்ற) தேஹ கந்தமே கிடையாத அதாவது தேஹகந்தங்கூட (சரீர வாஸனை) ஒட்டாத தன்மையை உடைய சேதனனுன ஆத்ம ஸம்பந்தத்தால் சேதனன் போன்று துள்ளுகிறது. நிர்குணமான ஆத்மஸ்வரூபமும் அந்த அசட்டு அந்தஹ்கரண ஸம்பந்தத்தால் அழுது வழிகிறது.

स तं मणिमविन्दत् । ......सोऽजिह्वो असश्चत ।

இந்த அந்தஹ்கரண மயமாகவே ஆன ஜீவாத் மாதான் முன் மந்திரத்தில் சொன்னது போல் கண்ணுல், மணியை ஆபரணம் முதலிய பதார்த் தங்களை பார்த்து கைகளால் எடுத்து கழுத்தில் அணிந்து கொண்டும், வாயில் போட்டுக் கொண்

டும் மகிழ்ந்து ஆபரணத்தை மணியை புகழ்ந்தும், ஹல்வாவை சாப்பிட்டுக் கொண்டும் இப்படியாக உள்ளான். இனி ப்ராஹ்மண பாகம் கூறப்படுகிறது.

नैतमृषिं विदित्वा नगरं प्रविशेत् ।

.........तद्‌सम्भवस्य व्रतम् ।

ஆத்ம தத்வ ப்ரதர்சகஸ்தான இந்த மந்த்ர ஸமூஹத்தையும் மந்த்ர ப்ரதிபாதிதமான (மந்த்ரத்தால் சொல்லப்படுகின்ற) பரமார்த்த தத்வத்தையும் அறிந்துள்ளவர் ஜன நெருக்கமுள்ள நகரத்தில் ப்ரவேசிக்கக்கூடாது. அப்படி ப்ரவேசிக்கவேண்டில் ரகஸ்யமாக சந்தடியின்றி போய் வரவேண்டும். மற்றொரு தாத்பயர்மும் பாஷ்யத்தில் கூறப்படுகிறது. முன் சொல்லப்பட்ட பரமார்த்த தத்வத்தை அறிந்தவன் தேஹாபிமானியாக அதாவது தேஹத்தில் ஆத்மபுத்தியை தவிர்க்கவேண்டும். ஒரு சமயம் தேஹாத்ம புத்தி மேலிட்டால் தனிமையில் சாஸ்த்ரார்த்த விசாரம் செய்து இவைகள் 'மித்யை' என்று நிச்சயித்து தேஹாபிமானத்தை விட்டு ப்ராரப்தத்தை அனுபவிப்பதற்காக மட்டும், லோக வ்யவஹாரத்தில் ஈடுபட வேண்டும். இந்த உத்தம வ்ரதத்தை

'ஸம்பவர்' எனும் மஹரிஷி கடைப்பிடித்து மேன்மை அடைந்துள்ளார்.

आतमग्ने रथन्तिष्ठ । ....वातध्राजिगति विभो ।

இது முதல் மூன்று இஷ்டகைகள் கூறப்படுகின்றன. ஹே ஆருணகேதுக அக்நி பகவானே, தாங்கள் பலம் பொருந்திய ஒரே அச்வத்தை (குதிரையை)யுடையதும், ஒரே சக்ரத்தையுடையதும், ஒரு நிமிஷத்தில், ஒரு யோஜன (8 மையல்) செல்லக் கூடியதும், ஒரே ஏர்க்காலை உடையதும், வாயுவேகம் பொருந்தியதுமான ரதத்தில் ஆரோஹணித்து இந்த அக்நி சயனம் அனுஷ்டிக்கும் யக்ஞவாடத்திற்கு வந்து அனுக்ரஹம் செய்யவேண்டும். இத்தகைய விசித்ரமான ரதத்தில் ஆரோஹணித்து ஸஞ்சரிக்கக் கூடிய ஸாமர்த்யம் வாய்ந்தவர்களல்லவா தாங்கள்!

न रिष्यति न व्यथते । ....रथेयुक्त्वाधितिष्ठति ।

மேற் கூறப்பட்ட ரதம் உடையாதது (நாசத்தை அடையாது) ஆடாது அசையாது. இதனுடைய அக்ஷம் (அச்சு) கல், மரம் - முதலியவைகளால் தடைபடாது. அக்ஷ குடத்தின் த்வாரம், வண்டிக்கட்டு (நேமி) என்றும் கொள்ளலாம். அவ்வப்பொழுது வெண்மை சிகப்பு

முதலிய வர்ணத்தோடு கூடிய பலம் பொருந்திய குதிரைகளை மாற்றி மாற்றி பூட்டி ரதத்தில் ஆரோஹணித்து வருவதால், தங்குதடையில்லாமல் ஸஞ்சரிப்பவர் என்பது தாத்பர்யம்.

एकया च दशभिश्च स्वभूते ।

.......नियुद्भिर्वायविहता विमुञ्च ।

ஹே வாயு பகவானே, தாங்கள் தங்கள் உசிதப்படி ஒரு குதிரை பத்து குதிரைகள், இரண்டு குதிரைகள் 20 குதிரைகள், மூன்று குதிரைகள் முப்பது குதிரைகள் - எல்லாம் பெண் குதிரைகள் இவ்விதமாக தங்கள் ரதத்தில் பூட்டிக் கொண்டு எங்கள் இடத்திற்கு (யாகசாலைக்கு) வந்து சேர்ந்து குதிரைகளின் பூட்டை அவிழ்த்து விட்டு எங்களை அனுக்ரஹிக்க வேணும்.

அனுவாகம்—12

प्रतनुष्व.........उपस्तरणमसि

முதலிய நான்கு இஷ்டகா மந்திரங்கள்

प्रतनुष्व प्रतनुष्व । ....गर्भमाधेहि यः पुमान् ।

ஹே இந்த்ரர், தங்கள் நிஜஸ்வரூபத்தை எங்களுக்கு ப்ரகாசப்படுத்தி அனுக்ரஹிக்க வேண்டும். இந்த யக்ஞ சாலையில், ஸந்நிஹித ராக இருக்கவேண்டும். தாங்கள் இவ்விடம் வந்துள்ளதை அழகான சப்தத்தால் எங்களுக்கு தெரிவிக்க வேண்டும். ஹிரண்யவர்ண முள்ள தீர்த்தங்களை, ஆதித்யரச்மியில் நிரப்பி வ்ருஷ்டியின் முகமாகச் செய்து அனுக்ரஹம் புரியவேண்டும். தாங்கள் உத்தம புருஷர்கள். கர்ப்பம் போன்று ஜல ஸம்ருத்தியை கொடுக்க வேண்டும்.

इतस्सिक्तꣳसूर्यगतम् । ....य एको रुद्र उच्यते ।

கர்மாக்களில் அக்நியில் எங்களால் ஹோமம் செய்யப்பட்ட ஆஜ்யாதி த்ரவ்யங்களை, ஆதித்ய னிடம் சேர்ப்பித்து அவைகளை ஜலமாக மாற்றி ஜலத்தால் ஆகாசத்தில் சந்திரனையும், பூமியில் ஒஷதிகளையும் அபிவ்ருத்தி செய்ய வேண்டும். மேலும் நல்ல ஸுவ்ருஷ்டியைப் பெற்றுத்தரும், ஆருணகேதுகாக்நி பகவான் உண்டுபண்ண வேண்டும். ஆருணகேதுக சயநாநுஷ்டானம் செய்யும் பாக்யத்தை அருளவேண்டும் என்பது தாத்பர்யம். இது அக்நிஸாக்ஷாத் ருத்ர ஸ்வரூபம், ஆகவே இந்த சயனம் மிக்க மேன்மையானது.

असङ्ख्या तास्सहस्राणि........एवमेतन्निबोधत ।

இந்த ருத்ரபகவான், ஆயிரக்கணக்கான மூர்த்திகளை உடையவர், சாஸ்திர மூலமாகத் தான் அவர்களை அறிய இயலும், அந்த திவ்ய மூர்த்திகளை நம் கண்களால் காண இயலாது. யஜமானர்களே! இவ்வளவு பெருமை வாய்ந்த அந்த பகவானை அறிந்துகொள்ளுங்கள்.

आमन्द्रैरिन्द्र हरिभिः । ....दधन्वेव ता इहि ।

மகிழ்ச்சியை அளிப்பவைகளும், மயில் தோகை போன்ற வர்ணமுடையவைகளுமான, குதிரைகள் பூட்டிய ரதத்தில் அமர்ந்து இவ்விடத்திற்கு வரவேண்டும். கடிவாளமேந்திய ஸாரதியோ, மற்றவரோ வருகைக்கு தாமதமேற்படுத்தி, பிரதிகூலம் செய்யவேண்டாம். எங்களுக்கு பாக்யங்களை தரித்துக்கொண்டு, எங்களுடைய இந்த பிரதேசத்திற்கு வந்து சேர வேண்டும்.

मा मन्द्रै-रिन्द्रहरिभिः । ....निधन्वेव तां (२) इमि ।

இந்த மந்த்ரத்தால் யஜமானன் இஷ்டகோபதானம் செய்யவேண்டும். முன் கூறப்பட்ட குதிரைகள் பூட்டிய ரதத்தில் நானும், தங்களோடுகூட தங்கள் லோகத்தை பாக்யம் பொருந்தியவனாக அடைவேனாக. ஒருவித இடையூறும் ஏற்பட வேண்டாம்.

இரண்டு இஷ்டகைகள்

अणुभिश्च महद्भिश्च । ....इन्द्रायाहि सहस्रयुक् ।

ஹே ஆயிரக்கணக்கான கண்களையுடைய இந்திர பகவானே! தாங்கள் க்ஷணம், முகூர்த்தம் முதலிய சூக்ஷ்ம காலங்களோடும் ஸம்வத்ஸரம், யுகம், முதலிய மஹத்தான காலங்களோடும் மிக வும் ப்ரகாசம் பொருந்திய கலாபிமானி தேவதை களுடன், அதுவும் ஒன்றுக்கொன்று சேராமல் தனித்தனியே நிகழ்கின்ற கால ஸ்வரூபமான குதிரைகளுடன் இவ்விடத்திற்கு (யக்ஞபூமிக்கு) வந்து அனுக்ரஹம் செய்யவேண்டும்.

अग्निर्विभ्राष्टिवसनः । ....नित्यास्तेऽनुचरास्तव ।

ஹே இந்திரா, விசேஷமாக ப்ரகாசிக்கின்ற அக்னி பகவானும், வெண்மலர்களை (மெதுவாக வாரி இறைக்கும்) தூளி படலங்களை எழுப்பும் வாயு பாகவானும், வஸந்தம் முதலிய ருதுக் களுடன் நிகழ்கின்ற ஸம்வத்ஸர தேவதையும் தங்களுக்கு நியதமாக அனுசரர்கள் (பின் தொடர் பவர்கள்)

सुब्रह्मण्यों ....कौशिकब्राह्मण गौतमब्रुवाण ।

ஸுப்ரமண்யோமிதி என்னும் மந்திரத்தால் ஒரு இஷ்டகையை உபதானம் செய்யவேண்டும். மங்களகரமான வேதத்திற்கு ஹிதமான ஹே இந்திரா! மிகவும் ஆதரவை காண்பிப்பதற்காக மூன்று முறை அழைக்கப்படுகிறார்.

ஹே இந்திரா, இரண்டு குதிரைகளுடன் (சுக்லபக்ஷம், க்ருஷ்ணபக்ஷம்) இதனுடைய அபிமான தேவதைகள் - இந்திரனுக்கு இரண்டு குதிரைகளாம். அத்தகைய தாங்கள் யக்ஞ சாலைக்கு வரவேண்டும்.

கண்வருடைய பிள்ளையான மேதாதிதியை மேஷரூபமாக (செம்மறியாட்டுரூபத்தில்) தூக்கிச் சென்றார். வ்ருஷணச்வர் என்ற மஹரிஷியின் புத்திரியான மேனகையை விரும்பியவர். வெள்ளைமான் ஸ்வரூபத்துடன் ஸோமரஸத்தை பருகியவர். கௌதம பத்னியான அஹல்யை விரும்பியவர். கௌசிக மஹரிஷி தவம் புரியும் பொழுது கிழப்ராஹ்மண வேஷத்தில் வந்து ஆதித்யம் பெற்றவர். கௌதம மஹரிஷியை ஸமாதானபடுத்துவதற்கு அவரை ஸ்தோத்திரத்தவர். இத்தகைய ஹே இந்திரா, இவ்விடம் வரவேண்டும்.

अरुणाश्वा इहागताः..........अग्निश्च जातवेदाश्चेत्येते ।

முதலில் நான்கு இஷ்டகைகள்.

சிகப்புக் குதிரைகளை உடையவரும் உலகம் இருப்பதற்கு ஹேதுவானவரும், பூமியில் இருப்பவரும், திசைகளையே வஸ்தரமாக உடையவருமான அக்னி, ஜாதவேதஸ் முதலிய முன் மந்த்ரங்களில் கூறப்பட்ட எட்டு அக்னிகள் இந்த யக்ஞசாலைக்கு வந்துள்ளார்கள்.

ताम्राश्वास्ताम्ररथाः । ....हृतो रुद्राः पराङ्गताः ।

उक्तःँस्थानं प्रमाणञ्च पुर इत ।

தாம்ரவர்ணமான குதிரைகளையும், தாம்ர வர்ணமான ரதங்களையும் உடையவர்களும், தாங்களும் சிறிதும் வெண்மை கலப்பற்ற தாம்ரவர்ணமானவர்களும், கதா பாணிகளும், கடித்து பக்ஷணம் செய்ய சாதன பூதமான தந்தங்களையுடையவர்களுமான ஹே ருத்ரர்களே, சாஸ்தரங்களில் தங்களுடைய ஸ்தானமும் அவைகளின் ப்ரமாணமும் கூறப்பட்டுள்ளவைகளாக (அறிகிறோம்) தாங்கள் இந்த ப்ருதிவைக் காட்டிலும் மேலான தேவலோகத்தை அடைந்துள்ளவர்கள். அத்தகைய நீங்கள் உங்களுடைய ஸ்தானத்திற்கு செல்வீர்களாக.

बृहस्पतिश्च सविता च । ....अप्सुषा इति तद्वयोः ।

ஹே ப்ருஹஸ்பதி பகவானே, மழையை உண்டாக்கும் ஸவித்ரு பகவானே, நீங்கள் இருவரும் நாநாவித ரூபங்களோடு கூடிய குதிரைகள் பூட்டப்பட்ட ரதத்தினால் மேகங்கள் ஸஞ்சரிக்கும் வ்ருஷ்டி ஜலத்தின் மார்க்கமான ஆகாசமார்க்கமாக (இந்த கர்மாவுக்கு) இந்த யக்ய பூமிக்கு வந்தருள வேண்டும்.

उक्षो वेषो वासांसि च । ......वासात्या इत्यश्विनो: ।

காலாவயங்களான, வஸந்தம் முதலிய ருதுக்களின் வேஷம் வஸ்த்ரங்கள், ருதுக்களின் ஸ்வரூபம் முதலியவை முன் அனுவாகங்களான

साकंजानं..........ऋतुर्ऋतुनानुद्यमान: ।

முதலிய மந்த்ரங்களால் கூறப்பட்டுள்ளன. அதுபோல் वासात्या எனும் மந்த்ரத்தால் அச்வினி தேவர்களின் ஸ்வரூபாதிகள் வர்ணிக்கப்பட்டுள்ளன.

कोऽन्तरिक्षे शब्दङ्करोतीति । ....तस्यैषा भवति ।

நான்காவது இஷ்டகா மந்த்ரத்தை ப்ரதிபாதனம் செய்வதற்காக அது பற்றிய மீமாம்ஸையை பூஜ்யமான விசாரத்தைப் பற்றி சொல்லப்படுகிறது. வஸிஷ்ட கோத்ரத்தில்

உதித்தவரும் ரோஹிணுச்வர் என்ற முனிவருடைய புத்ரருமான ரௌஹிணி முனிவர் ஆகாசத்தில் எழுப்பிய (ஏற்பட்ட) சப்தவிசேஷத்தைக் கேட்டு "அந்தரிக்ஷத்தில் யார் இந்த சப்தத்தைச் செய்கிறுர்'' என்று ஆலோசித்தார் உயரே ஆகாசத்தில் பார்த்தால் ஒருவரையும் காணேும். ஆனுல் பேரிவாத்யத்தின் சப்தத்தை காட்டிலும் அதிகமாக த்வனிக்கிறது என்று ஆச்சரியப்பட்டு விசாரணம் செய்கிறுர். இதை நிர்ணயம் செய்யக் கூடிய ஒரு ரிக் இவ்விடம் கூறப்படுகிறது.

वाश्रेव विद्युन्मिमाति ।

ஆக்ராணத்தினுல், அன்பைப் பொழிந்து சப்திக்கும் இளம் கன்றையுடைய கோமாதா போல் மேகத்தில் ஏற்படும் ஸௌர்ய தேஜோருபமான மின்னல் சப்தத்தை உண்டுபண்ணுகிறது. கோமாதாவின் வாத்ஸல்யபாவ சப்தம் கன்றை மகிழ்விப்பது போல் மேக சப்தம் ஜனங்களுக்கு ஸந்தோஷத்தை அளிக்கின்றது என்பது தாத்பர்யம்.

"मन्दंमन्दंजलधरा जगर्जुरनुसागरम्" ।

ஸ்ரீமத் பாகவதம் தசம ஸ்கந்தம் க்ருஷ்ணுவதார காலத்தில் அழகான ரம்யமான மேக

கர்ஜனை பற்றிய வர்ணனம், ஸமுத்ர அலை சப்தத்தை அநுசரித்து மேக சப்தம் அமைவது ஸந்தோஷத்தை அளிக்கிறது.

நான்கு ப்ரஹ்ம ஸதநங்கள் எனும் நான்கு இஷ்டகைகள்.

ब्रह्मण उदरणमसि । ....ब्रह्मण उपस्तरणमसि ।

ब्रह्मण उदरणमसि ।

ஹே இஷ்டகையே, நீ ஹிரண்யகர்ப்பருக்கு, எல்லோரையும் காட்டிலும் உயர்ந்த பெருமையை அளிக்கும் பேராசையின்மையை உண்டுபண்ணு கிறாய்.

ब्रह्मण उदीरणमसि ।

ஹே இஷ்டகையே, ஹிரண்யகர்ப்ப ப்ரம்மா விற்கு பேராசையின்மைக்கு காரணமாய் இருக் கிறாய். பேராசையின்மை என்பது பாக்கி குணங் களைவிட மேலானது.

ब्रह्मण आस्तरणमसि ।

ஹே இஷ்டகையே, நீ இந்த ஹிரண்யகர்ப் பருக்கு ஆஸனமாய் இருக்கிறாய்.

ब्रह्मण उपस्तरणमसि ।

ஹே இஷ்டகையே, நீ இந்த ஹிரண்யகர்ப் பருக்கு மேல் விதானமாக இருக்கிறாய். அச்மான கிரிபோல் இருக்கிறாய்.

அனுவாகம்—13

अष्टयोनी......पुरुषः ।

திக் ஸம்பந்தமான எட்டு இஷ்டகைகள் பற்றிய உபதேசம்

अष्टयोनीमष्टपुत्राम् । ......न चमामृत्युरघाहरत् ।

மூலப்ரக்ருதி, மஹத்தத்வம், அஹங்கார தத்வம் மற்றும் ப்ருத்வீ, அப்பு, தேஜஸ், வாயு, ஆகாசத்தன்மாத்திரைகள் ஆகிய எட்டு காரணங்களை உடையதும், மித்ரன், வருணன், தாதா, அர்யமா, அம்ச:, பக:, இந்திரன், விவஸ் வான், எனும் எட்டு புத்ரர்களை உடையவளும், இந்திரன், அக்நி, யமன், நிருருதி, வருண்ன் வாயு, ஸோமன், ஈசானன் எனும் எட்டு திக் பாலகர்களாக உடையவளுமான, இந்த ப்ருதிவீ தேவதையை மந்த்ரத்தை கண்டுபிடித்தவனான

நான் அறிந்துள்ளேன். ஆதலால் எனக்கு ம்ருத்யு பயம் கிடையாது. முக்தியை அடையப் போகிறேன். மேலும் ஞானப்ரபாவத்தினுல் அபம்ருத்யுவும் எனக்கு துக்கத்தை அளிக்க மாட்டான்.

குறிப்பு:—தன்மாத்ரைகள் என்ருல் அபஞ்சீக்ருத (தனித்தனியான ஆகாசாதி பூதங்கள் என்பது பொருள்.

अष्टयोन्यष्टपुत्रम्......न चामृत्युरघाहरत् ।

முன் மந்த்ரத்தில் கூறப்பட்டவைகளே இம் மந்த்ரத்திலும் கூறப்படுகிறது. ப்ருதிவீ தேவதையை அறிந்தது போல் முன் கூறப்பட்ட விசேஷணங்களோடு கூடிய அந்தரிக்ஷ தேவதையை அறிந்துள்ளேன். அதனுல் எனக்கு ம்ருத்யு பயம் கிடையாது. முக்தியைப் பெறப் போகிறேன். அபம்ருத்யு எனக்கு துக்கத்தை தராது.

अष्टयोनीमष्टपुत्राम्......न चामृत्युरघाहरत् ।

முன் மந்த்ரங்களின் அர்த்தமே இங்கும். இத்தகைய விசேஷங்களையுடைய "த்யுலோக தேவதை" (தேவலோகத்தை) அறிந்துள்ளவன். ஆகவே ம்ருத்யு பயம் எனக்கில்லை. மோக்ஷத்தை

அடையப் போகிறேன். அபம்ருத்யு கஷ்டமளிக்க மாட்டார்.

இரண்டும் மந்த்ரங்களின் ஆரம்பம் கூறப் படுகிறது.

सुत्रामाणं महीमूषु ।

ஆரம்பம் என்பது வேறு பாகத்தில் கூறப் பட்ட மந்த்ரங்களின் அடியை (ஆரம்பத்தைக் கூறி) அம்மந்த்ரங்களை பூராவும் இந்த இடத்தில் சேர்த்துக் கொண்டு அனுஷ்டானம் செய்ய வேண் டும் என்பதை தெரிவித்தல்.

सुत्रामाणं पृथिवीं द्यामनेहसꣳसुशर्माण मदितिꣳसुप्रणी- तिम् ।

ப்ருதிவிலோகம் முதலியவைகளை பாதுகாப் பவர், நித்யமானவர், க்ஷேமத்தை அருளும் தன்மையுடையவர், யக்ஞாதி நல்விஷயங்களில் சிரத்தையை உண்டுபண்ணி நடத்திச் செல்பவர், குற்றமற்றவர். இந்த மண்ணால் செய்யப்பட்ட தைவீக ஓடமாக (தெப்பம்) ஓடம் சத்ருக்களிட மிருந்து பாதுகாத்து ரக்ஷிக்கக்கூடியது, சிதரா தது, தோஷமற்றது. மங்களத்தின் பொருட்டு இதில் ஆரோஹணம் செய்வோம், இதில் இருந் துக் கொண்டு யக்ஞாதிகளை அனுஷ்டித்து மேன்மை அடைவோமாக.

महीमूषु मातरं सुव्रतानां मृतस्य पत्नीमवसे हुवेम ।

பூமிதேவி தாய்போன்றவள், நியமத்தோடு கூடியவர்களின் யக்ஞாதிகளை பாதுகாப்பவள், அநேக க்ஷத்ரியர்களால் ஆராதிக்கப்பட்டவள், சாச்வதமானவள், மிகவும் சிரேஷ்டமானவள், விஸ்தீர்ணமானவள், க்ஷேமத்மதை அளிப்பவள், நல்விஷயங்களில் ப்ரவர்த்திக்கும்படியான நல்ல புத்தியைக் கொடுத்து ரக்ஷிப்பவள், இத்தகைய அதிதிதேவி அனுக்கிரஹம் புரியவேண்டும்.

अदितिर्द्यौरदितिरन्तरिक्षम् ।

......अदितिर्जातमदितिर्जनित्वम् ।

அதிதி தேவதையின் பெருமை கூறப்படுகிறது. உலகத்தில் யாவுமே, அதிதி தேவதை ஸ்வரூபமே. எப்படி? ப்ருதிவியும் அந்தரிக்ஷமும், த்யுலோகமும் அதிதிதான், பிதாவும் அதிதியே, புத்ரரும் அதிதியே, விச்வேதேவர்களும் அதிதியே, (ப்ராஹ்மண, க்ஷத்ரிய, வைச்ய, சூத்ரர்கள் எனும்) நான்கு வர்ணத்தவர்களும் நிஷாதர்களுமாகிய பஞ்ச ஜனங்களும் அதிதியே, உண்டானவாகிய யாவும் அதிதியே, உண்டாதல் என்னும் க்ரியையும் அதிதியே,

अष्टौ पुत्रासो अदितेः । ......परा मार्ताण्डमास्यत् ।

அதிதி தேவதைக்கு ஔரஸ புத்ரர்கள் எட்டு, அவர்களில் எட்டாவது புத்ரரான மார்த்தாண்டனை விட்டு விட்டு, மற்ற ஏழு புத்ரர்களுடன் தேவலோகத்திற்குச் சென்றுள்ளாள் அதிதி தேவி.

सप्तभिः पुत्रैरदितिः । ......परा मार्ताण्डमाभरदिति ।

அதிதிதேவி ஏழுபுத்ரர்களுடன் தேவலோகம் சென்றதற்கும் எட்டாவதான மார்த்தாண்டனை பரித்யாகம் செய்ததற்கும் காரணம் கூறப்படு கிறது. ஏழு புத்ரர்களை அடைவதற்கு முயற்சி எடுத்துக் கொண்டாள். ஏழு புத்ரர்கள் உண் டானதும் இவர்களைக் கொண்டு ப்ரஜாவ்ருத்தி ஏற்படும் என்பதை நிச்சயித்துக் கொண்டு இவர் களுடன் தேவலோகம் சென்றாள். எட்டாவதாக அண்டம் (முட்டை) உண்டாகியது, ஒரு வருஷம் கழித்து அண்டத்தைப் பிளந்து கொண்டு மார்த் தாண்டன் உண்டானார். அண்டத்தை நாசம் செய்து உண்டானதால் மார்த்தாண்டர் என்று பெயர்.

मृते-अण्डे जात इति - मार्ताण्डः

என்று பெயர் ஏற்பட்டது. ஆகவே பிறக்கும் போதே மற்றதை நாசம் செய்து உண்டானதால்

இவர் "ம்ருத்யுவுக்குத் தான்'' உபகாரம் செய்பவர். ப்ரஜா அபிவிருத்திக்கு உதவமாட்டார் என்பதால் அதிதி மார்த்தாண்டரை பரித்யாகம் செய்துள்ளாள்.

ப்ராஹ்மண வாக்யங்கள்

तान्नुक्रमिष्यामः......हिरण्यगर्भो हꣳसश्शुचिषत् ।

அதிதியின் எட்டு புத்ரர்கள் கூறப்படுகிறார். மித்ரர், வருணர், தாதா, அர்யமா, அம்ச:; பகர், இந்த்ரர், விவஸ்வான் (மார்த்தாண்டர்) இந்த எட்டு நாமாக்களால் தனித்தனியே எட்டு இஷ்டகைகளை உபதானம் செய்ய வேண்டும்.

இனி நான்கு மந்த்ரங்களால் ஆரம்பம் உபதேசிக்கப்படுகிறது.

हिरण्यगर्भस्समवर्तताग्रे भूतस्य जातः पतिरेक आसीत् ।

स दाधार पृथिवीं द्यामुतेमां कस्मै देवाय हविषा विधेम ।

இந்த மந்த்ரத்தால் ஹிரண்மய புருஷோபதானம் செய்ய வேண்டும் (தங்கத்தாலான புருஷாகார ப்ரதிமை). ஸ்ருஷ்டியின் தொடக்கத்தில் ஹிரண்யகர்ப ப்ரம்மா உண்டானார். அவர்தான்

பஞ்ச பூதங்களுக்கும் நாயகனாக இருந்தார். அவர் தான் இந்த பூமியையும், ஆகாசத்தையும் தாங்கிஞர். அப்படிப்பட்ட ப்ரம்மதேவனை ஹவிஸ்ஸிஞல் த்ருப்தி செய்கிறோம்.

हꣳसश्शुचिष द्वसुरन्तरिक्षसद्धोता वेदिषदतिथिर्दुरोण-

सत् । नृषद्वरसदृतसद्व्योमसदब्जा गोजा ऋतजा अद्रिजा

ऋतं बृहत् ।

இந்த மந்திரத்தால் தாமரை இலை உபதானம் செய்ய வேண்டும்.

எப்பொழுதும் சென்று கொண்டே இருக்கிற ஸூரிய பகவான் சுத்தமான ஆதித்ய மண்டலத்தில் இருக்கிறார். ஸூத்ராத்மாவாக இருந்து கொண்டு உலகத்திற்கே வாஸஸ்தானமாக இருப்பதால் ஆதித்யன் வஸு எனப்படுகிறார். வாயுவினுடைய ரூபத்தில் அந்தரிக்ஷத்தில் சஞ்சரிப்பதால் அந்தரிக்ஷத்தில் இருப்பவராக இருக்கிறார். ஹோமத்தை நடத்தித்தருபவரான ஆஹவனீயாக்னி ரூபத்தில் இருக்கிறார். ஹோதா என்ற வடிவில் ஸோமயாகம் போன்ற யாகங்களில் அங்கமான வேதி என்ற இடத்தில் அமர்ந்து இருக்கிறார். அதிதியாக இருந்துக் கொண்டு,

போஜனம் அளிப்பவர் வீட்டில் தங்குபவரார்க் இருக்கிறார். மனிதர்களிடத்தில் கர்மானுஷ் டானம் செய்யும் ஜீவாத்மாவாக இருக்கிறார். காசி முதலிய சிறந்த க்ஷேத்திரங்களில் பூஜிக்க தக்கவராக இருக்கிறார். வைதிக கர்மாவில் பயன் வடிவில் இருக்கிறார். ஆகாசத்தில் நக்ஷத்திரம் போன்ற வடிவில் இருக்கிறார். நதி, ஸமுத்ரம் இவைகளில் உண்டான சங்கு, முதலை போன்ற வடிவில் இருக்கிறார். பசுக்களிடமிருந்து பாலாக பருகுகிறார். உண்மையினால் ஏற்படும் கீர்த்தி வடிவில் இருக்கிறார். மலைகளில் முளைக்கும் மரங்கள் போன்ற வடிவில் இருக்கிறார். ஸ்தாவர ஜங்கமமான இந்த உலகம் ருதம் என்று சொல்லப் படுகிறது. மேலும் எங்கும் வியாபித்த நித்ய வஸ்துவான பரப்ரஹ்ம வடிவில் இருக்கிறார். அக்ஞானிகளுடைய பார்வையில் உலகமாக தென்படுவது எல்லாம் ஞானிகளுடைய பார்வை யில் பிரம்மமேதான். மூன்று பக்ஷிகளுடைய ஸ்தானமாகவோ, ப்ரம்மா, விஷ்ணு, மஹேச்வர வடிவிலேயே அல்லது விச்வன், தைஜஸன், ப்ராஞ்யன், அல்லது விராட் புருஷன், ஹிரண்ய கர்பன், ஈச்வரன் என்று சொல்லப்படும் மேற் கூறியவர்கள் பரமாத்ம ஸ்வரூபத்திலிருந்து உண்டானவர்கள். அந்த பரமாத்மாவின் மஹி மையை சொல்லுவதால் இந்த மந்த்ரமும் த்ருஸு பர்ணம் எனப்படுகிறது.

ब्रह्मजज्ञानं प्रथमं पुरस्ताद्विसीमतस्सुरुचो वेन आवः ।

सुबुध्नियो उपमा अस्य विष्ठास्सतश्च योनि-मसतश्च

विवः ।

இந்த மந்த்ரத்தால் ருக்மோபதானம் செய்ய வேண்டும். ருக்மம்-தங்கம். பரமாத்மாவானவர் ச்ருஷ்டியின் ஆரம்பத்தில் உலக வடிவமாக உண்டாகி, கிழக்கு திசையில் அழகிய ஸூர்யனாக ஆகி, நன்கு பிரகாசித்துக் கொண்டு, நான்கு திசைகளையும் பிரித்து வியாபித்துக் கொண்டார். அந்த அழகான ஸூர்யன் பஞ்ச பூதங்களை பிரித்து வைத்தார். அவ்வாரே இருக்கின்ற மலை, நதி, சமுத்ரம் முதலியவைகளுக்கும், இல்லாதவை களுக்கும் காரணமான (பொய்யான) எல்லா உலக இயல்புகளையும் நிர்மாணம் செய்தார்.

तदित्पदं न विचिकेत विद्वान् । यन्मृतः पुनरप्येति

जीवान् ।

त्रिवृद्यद्भुवनस्य रथवृत् । जीवो गर्भो न मृतः स

जीवात् ॥

இந்த மந்த்ரத்தால் கூர்மோபதானம் (ஆமையை வைத்தல்) செய்யவேண்டும். கர்மானுஷ்டானம் என்ற ஸ்தானத்தில் உள்ள மனிதன் இறந்ததிற்கு பிறகு தேவர்களை அடைகிறான். நரகத்தை அடைவதில்லை. கர்மானுஷ்டானம் தான் முக்ய ஸ்தானமாகும். அதை வித்வான் கூட நன்கு பிரித்து தெரிந்து கொள்வதில்லை. ஏனெனில் உலகில் இருக்கக் கூடிய ஜீவனானவன் ஸத்வ, ரஜஸ், தமோ குணங்களால் சூழப்பட்டவனாக இருந்து கொண்டு ரத சக்ரம் சுற்றுவது போல் திரும்ப, திரும்ப உலகில் பிறந்து, இறந்து சுற்றிக் கொண்டே இருக்கிறான். ஆகையால் தான் உலகத்தின் கண்ணோட்டத்தில் மனிதன் இறந்ததாக கணப்பட்டாலும் உண்மையில் அந்த ஜீவன் இறப்பதில்லை. மறுபடியும் வேறு சரீரத்துடன் இருக்கிறான். சரீரம் மாத்ரம் தான் அழிந்தது. ஆத்மா ஜீவித்துக் கொண்டே இருக்கிறது. ஸத்வகுணம் நேரிடும் போது சாஸ்த்ரார்த்தங்களை புரிந்துக் கொள்கிறான். தமோகுணம் அதிகமாக இருக்கும் போது சாஸ்த்ரார்த்தத்தை மறந்து தவறு செய்கிறான். ஆகையால் தவறு, புருஷனுடைய தோஷமில்லை, தமோகுணத்தினால் ஏற்படுகிறது.

: ப்ராஹ்மண வாக்யம்

गर्भः प्राजापत्यः । अथ पुरुषस्सप्त पुरुषः ।

ப்ரஜாபதி ஸம்பந்தமான கர்ப்பம் பற்றி ஹிரண்யகர்ப்ப மந்த்ரம் ப்ரதிபாதித்துள்ளது, அடுத்த அனுவாகத்தால் நக்ஷத்திரம், மாஸம், அர்த்தமாஸம், ருது, ஸம்வத்ஸரம், அஹோராத்ரம் எனும் ஏழு பரிவாரங்களுடன் கூடிய ஆதித்ய புருஷன் விளக்கப்படுகிறார்.

அனுவாகம்—14

योऽसौ तपन्नुदेति । ......मा मम प्राणानादायोद्गाः ।

இந்த அனுவாகத்திற்கு இஷ்ட கோபதானத்தில் விநியோகம் ச்ரௌத ஸூத்ரங்களில் காணப்படாததால் மந்த்ர சின்னங்களைக் கொண்டு 'ஆயுஷ் காமன்' என்ற மந்த்ரங்களால் ஸூர்ய பகவானை உபஸ்தானம் செய்யவேண்டும் என்பது பெறப்படுகிறது. ஆருணகேதுக சயனம் அனுஷ்டிப்பவர் இந்த அனுவாகம் வந்ததும் எழுந்து சென்று ஸூர்யனை தர்சனம் செய்து கொண்டு இம்மந்த்ரங்களால் ஸூர்யோபஸ்தானம் செய்வது யாக்ஞிக ஸம்ப்ரதாயம், மற்றவர்களும் பிரதி தினமோ, அவ்வப்பொழுதோ இவ்விதம் உபஸ்தானம் செய்வதும் ஸம்ப்ரதாயம். ஸூர்ய நமஸ்கார காலத்திலும் பெரியவர்கள் இவ்விதம் அனுஷ்டிப்பர். ஸாயம்காலத்தில் ஸந்த்யானுஷ்டானம் பூர்த்தியானதும் த்ருவ தர்சனம் செய்து கொண்டு த்ருவோபஸ்தானம்

भूः प्रपद्ये, नमःप्राच्यै

இவைகளை அனுஷ்டிப்பதும், ப்ராதஸ்ஸந்த்யையில்

योऽसौतपन्नुदेति

அனுவாகத்தால் உபஸ்தானம் செய்வதும் பெரியோர்களின் ஸம்ப்ரதாயம். பிரதிதினம் ஸூர்யோதயம் ஆனதும் ஒருவருடைய ஆயுஸ்ஸில் ஒரு நாள் குறைந்துவிடுகிறது. ஆகவே ஸூர்யன் உதிக்கும் பொழுது எல்லா ப்ராணிகளுடைய ஆயுஸ்ஸிலும் ஒரு நாளை எடுத்துக் கொண்டு உதிக்கிறான் என்று சொல்லப்படுகிறது. எனக்கு அவ்விதம் ஆயுள் குறைந்துவிடாமல் அனுக்ரஹம் செய்ய வேண்டும் என இவ்விதம் பிரார்த்திக்கப்படுகிறார். "ஹே ஆதித்ய பகவானே! தாங்கள் உதிக்கும்பொழுது எனது ஆயுள், எனது பிரஜைகளுடைய ஆயுஸ், எனது பசுக்களின் ஆயுஸ், இவைகளை அபகரிக்காமல் அனுக்ரஹம் செய்ய வேண்டும்.

असौयोऽस्तमेति.......मा मम प्राणानादायास्तङ्गाः ।

முன் மந்த்ரத்தினுடையது போலவே இதற்கும் தாத்பர்யம். ஸூர்யன் அஸ்தமிக்கும் பொழுதும் அதுவரை ஆயுளை அபஹரித்துக் கொண்டு தான் அஸ்தமிக்கிறார்.

ஆகவே முன்போல் பிரார்த்தனை.

असौ य आपूर्यति । ....मा मम प्राणैरापूरिष्ठाः ।

உதிக்க ஆரம்பித்த ஸூர்யன் மேன்மேலும் ரச்மிகளால் நிரப்புகிறார். ஒவ்வொரு ரச்மியும் ஆயுஸ்ஸின் சிறிது சிறிதாக க்ஷணம் க்ஷணமாக குறைகிறது. அவ்விதம் குறைவு ஏற்படாமல் இருக்கப் பிரார்த்தனை.

असौ योऽपक्षीयति । ....मा मम प्राणैरपक्षेष्ठाः ।

அஸ்தமிக்கும் ஆதித்யனுடைய ரச்மி சிறிது சிறிதாக குறைவுபடுகிறது, அப்பொழுது ஆயுர்பாகமும் குறைவுபடுகிறது. ஆயுள் குறைவு படாமல் இருக்க ப்ரார்த்தனை முன்போல்.

अमूनि नक्षत्राणि । ....मा मम प्राणैरपप्रसृपत मोत्सृपत ।

இந்த நக்ஷத்திரங்கள் பகலில் குறைந்த ஜ்யோதிஸ்ஸுடனும், ராத்ரியில் அதிகப்ரகாசத்துடனும் ஸஞ்சரிக்கின்றன. இவைகள் பகலில் நாம் காணமுடியாத முறையிலும், இரவில் காணக்கூடிய முறையிலும் (பகலில் அறியு

முடியாத தன்மையிலும், இரவில் அறியக்கூடிய தன்மையிலும், ப்ராணங்களின் ஆயுள் குறைவு படுகிறது) ஹே நக்ஷத்திரங்களே, எங்களுடைய ஆயுஸ் குறையாமல் அனுக்ரஹிக்க வேண்டும்.

इमे मासाश्चार्धमासाश्च । ....इम ऋतवः.........मा मम प्राणैरपप्रसृपत मोत्सृपत ।

மாஸங்கள், அர்த்தமாஸங்கள், இவைகளும் பிராணிகளுடைய ஆயுளை குறைத்துக் கொண்டு நடை பெறுகின்றன. இவ்விதமே ருதுக்களும் நிகழ்கின்றன. ஆகவே நீங்கள் எங்களுடைய ஆயுள் குறையாமல் ரக்ஷிக்க வேண்டும்.

अयँ संवत्सरः । ....मा मम प्राणैरपप्रसृप मोत्सृप ।

ஸம்வத்ஸரமும் இவ்விதம் செய்து கொண்டு தான் நிகழ்கிறது. ஆதலால் முன்போல் ப்ரார்த்தனை.

इदमहः.......इयँ रात्रिः । ....मा मम प्राणैरप प्रसृप मोत्सृप ।

பகலும், இரவும் இவ்விதமே நிகழ்கிறது. ஆகவே முன்போல் ப்ரார்த்தனை. (கர்த்தா ஒருமையில் இருந்தால் க்ரியை ஒருமையிலும் ஏகவசனத்திலும், கர்த்தா பன்மையில் இருந்தால் க்ரியை பஹு வசனத்திலும் கூறப்படுகிறது.)

ओं भूर्भुवस्स्वः ।

ஓம்காரத்தினால் சொல்லப்படுகிற பரமாத்மா தான் லோகத்ரய ரூபமாக பிரகாசிக்கிறார்.

एतद्वो मिथुनं मा नो मिथुनꣳरीढ्वम् ।

ஆதித்யனுடைய பரிஜனங்களான ஹே மாஸ, அர்த்தமாஸ, ருது, ஸம்வத்ஸரம், அஹஸ், ராத்ரி, ரூபர்களான ஸப்த புருஷர்களே, உங்களுக்கு இந்த ஓம்காரத்தினால் சொல்லப்படுகிற பரமாத்ம ஸ்வரூபம் ஆதித்யனோடு ஸஹாவஸ்தானம் (சேர்ந்திருத்தல்) மிதுனபாவம் ஆகிறது. அதாவது ஸுகத்தை கொடுக்கக் கூடியது. இவைகளை த்யானிக்கிற, அறிகிற எங்களுடைய தாம்பத்யத்தை சிரமமின்றி ரக்ஷிக்க வேண்டும். தம்பதிகளான எங்களுக்கு ஹிம்ஸையைச் செய்யாமல், ரக்ஷிக்க வேண்டும். இவ்விதம் மாஸாதி அதி தேவதைகள் ப்ரார்த்திக்கப்படுகிறார்கள்,

அனுவாகம்—15

अथादित्यस्य.........मिथुनꣳरीड्वम् ।

இனி வஸு முதலிய எட்டுவிதமான புருஷர்களோடு கூடிய ப்ரகாசிக்கின்ற ஆதித்ய ஸம்பந்தியான இஷ்டகோபதான (செங்கலை அடுக்குதல்) எட்டு மந்த்ரங்கள் உபதேசம்.

अथादित्यस्याऽष्टपुरुषस्य

என்ற ப்ராஹ்மண வாக்யத்தால் செய்யப்படுகிறது.

वसूनामादित्यानाꣳस्थानेस्वतेजसा भानि ।

வஸந்தாதி ருது ப்ரகரணத்தில்

वसन्तो वसुभिस्सह । शुक्लवासा रुद्रगण: ।

இத்யாதி வாக்யங்களால் சொல்லப்பட்ட வஸுருத்ராதிகளும் இப்பொழுது ஸம்பந்தப்பட்ட ஆதித்யனுடைய அவதார விசேஷங்கள் தான், க்ரமமாக அந்தந்த அவதார விசிஷ்ட ஆதித்ய பகவானை குறிக்கும் மந்த்ரங்களால் இஷ்டகோபதானம் செய்ய வேண்டும்.

அஷ்டவஸு ஸ்வரூபமாகவுள்ள ஆதித்ய ஸ்தானத்தை அடைந்து அவ்விடமிருந்து கொண்டு அவர்களுடைய அனுக்ரஹத்தால் தன்னுடைய தேஜஸ்ஸோடு நான் ப்ரகாசிக்க வேண்டும். அத்தகைய தேஜஸ்ஸோடு விளங்க வேண்டும்.

रुद्राणामादित्यानाँ स्थाने स्वतेजसा भानि ।

ஏகாதசருத்ர ஸ்வரூபியான ஆதித்ய ஸ்தானத்தில் இருந்து கொண்டு - மந்த்ரார்த்தம், முன் மந்த்ரார்த்தம் போலவே.

आदित्यानामादित्यानाँ स्थाने स्वतेजसा भानि ।

த்வாதச ஆதித்ய ஸ்வரூபியான – மற்றவை முன்போல்

सताँ सत्यानाम् । आदित्यानाँ स्थाने स्वतेजसा भानि ।

ஸாதுக்களான (ஸத்துக்களான) மஹரிஷிகள் தன்னுடைய அவதாரத்தினால் ஸர்வலோகத்திற்கும் வேண்டியவர்கள், அதாவது நன்மை செய்பவர்கள். அத்தகைய சில மஹானுபாவர்களும் ஆதித்யனுடைய அவதாரபூதர்கள் தான். அவர்கள் எப்பொழுதும் ஸத்யத்தைப் பேசுபவர்கள். மற்றது முதல் மந்த்ரத்தில் உள்ளதுபோல்,

अभिघ्नन्वतामभिघ्नताम् । ....स्वतेजसाभानि ।

ருது ப்ரகரணத்தில்

अभिघ्नन्तोऽभिघ्नन्त इव என்று

மருத்கணங்கள் கூறப்பட்டுள்ளன. அந்த மருத்கணங்கள் எங்கும் மழை ஜலத்தை அடை விக்கின்றனர். மழையில் நடந்து செல்பவர்களை பெருங்காற்றுகளால் அடிக்கின்றனர், பெறுங் காற்றுடன் கூடியவர்களும் ஆதித்யாவதார பூதர்கள் தான். மற்றவை முதல் மந்த்ரத்தி னுடைதுபோல்.

ऋभूणामादित्यानां स्थाने स्वतेजसा भानि ।

ऋभूणां तन्निबोधत ।

என்று முன்பு கூறப்பட்ட ருபுக்கள் எனும் தேவர் களும் ஆதித்ய அவதாரபுருஷர்களே. முன் போலவே தாத்பர்யம்-முதல் மந்த்ரத்தினுடையது போல்.

विश्वेषान्देवानाम् । ....स्वतेजसाभानि ।

பிரஸித்தமான விச்வே தேவர்களும் ஆதித்யாவதார ஸ்வரூபர்களே. மற்றவை முதல் மந்திரத்தினுடையதுபோல்.

संवत्सरस्य सवितुः । ....स्वतेजसा भानि ।

ருதுப்ரகரணத்தில்

स खलु संवत्सर एतैस्सेनानीभिस्सह ।

எனும் வாக்யத்தால் சொல்லப்பட்ட ஸம்வத்ஸர தேவதையும் ஆதித்யாவதார ஸ்வரூபமே: மற்றவை முதல் மந்திரத்தினுடையது போல்.

ओं भूर्भुवस्स्वः । रश्मयो वो मिथुनं मावो मिथुनᳬरीढ्वम् ।

எல்லா மந்தரங்களிலும் மேற்கூறிய ஓம் காரத்தினால் விளங்கப்படுகிறவரும், மூன்று உலக ஸ்வரூபமாகனுமான ஆதித்யனுடைய ஹே ரச்மிகணங்களே, உங்களுக்கு ஆதித்ய பகவானோடு உபகார்ய உபகாரக ரூப ஸம்பந்தம் தாம்பத்ய உறவுபோல உள்ளது. அத்தகைய உங்களுடைய அனுக்ரஹத்தால் எங்கள் தாம்பத்ய ஸுகவாழ்வு விளங்க வேண்டும். எங்

களுக்கு இடையூறு புரியாமல் பாதுகாக்க வேண்டும். எங்களை ஹிம்ஸிக்காமல் ரக்ஷிக்கவேண்டும்.

அனுவாகம்—16

आरोगस्यस्थाने........मिथुनैरीढ्वम्

ஏழாவது அனுவாகத்தில் आरोगो भ्राजः முதலிய நாமமந்த்ரங்கள் கூறப்பட்டுள்ளன. இந்த அனுவாகத்தில் அந்த தேவதா ஸம்பந்தமான இஷ்டகோபதானத்திற்கு பல விசேஷங்களுக்கான மந்த்ரங்கள் உபதேசிக்கப்படுகின்றன. ஆரோக நாமகரண (ஆரோகர் எனும் பெயரையுடைய) ப்ரதம ஸூர்ய பகவானுடைய ஸ்தானத்தை அடைந்து அவ்விடம் இருந்துக்கொண்டு அநுக்ரஹத்தினுல் அடையப்பட்ட உத்தம தேஜஸ்ஸினுல் நான் ப்ரகாசித்துக் கொண்டிருக்கவேண்டும். பிரகாசித்துக் கொண்டிருப்பேனுகவும், இதே போன்று மற்ற ஸூர்யர்களுடைய இஷ்டகா மந்த்ரத்திற்கும் தாத்பர்யம். ஹே ஜலாத்மக தேவதைகளே, ப்ரணவ ப்ரதிபாத்யராகவும், (ஓம்காரத்திறுல் சொல்லப்பட்டவராகவும்) லோகத்ரய ஸ்வரூபியுமான, ஆதித்ய பகவானுடன் உங்களுக்கு உபகார்ய, உபகாரரூபமான ஸம்பந்தமுள்ளது. ஆகவே அத்தகைய பெருமை வாய்ந்த நீங்கள் எங்களுடைய உபகார்யோபகாரக ரூபமான தாம்பத்ய பாவத்தில் ஒருவித ஹிம்ஸையும் வராமல் ரக்ஷிக்க வேண்டும்.

அனுவாகம்—17

अथ वायोरेकादशपुरुषस्यैकादशस्त्रीकस्य ।

......मिथुनैरीद्वम् ।

முன்பு வாய்வாத்ம ஸ்வரூபங்களான பதினொரு ருத்ரகணங்கள் प्रभ्राजमानाव्यवदाता: என்று உபதேசிக்கப்பட்டுள்ளார்கள். அந்த பதினொரு ருத்ரர்களுக்கும் அவர்களுடைய தேவிகளான பதினொரு ருத்ராணீ தேவிகளுக்கும் பல விசேஷத்திற்காக இஷ்டகா மந்த்ரங்கள் உபதேசிக்கப்படுகின்றன.

ஒவ்வொரு கணத்திலும் பல ருத்ர ஸ்வரூபங்கள். அதே போன்று ஒவ்வொரு ருத்ராணீ கணத்திலும் பல ருத்ராணிகள் 11+11=22 இஷ்டகைகள். முன் அனுவாகத்தினுடையது போலவே இதற்கும் தாத்பர்யம். ப்ரப்ராஜமான நாமக ஹே ருத்ரகணங்களே, உங்களுடைய ப்ரபாவத்தால் உங்களுடைய ஸ்தானத்தில் இருந்து கொண்டு உத்தம ப்ரகாசத்தோடு விளங்குவோமாக. இப்படியே யாவற்றுக்கும் தாத்பர்யம். ப்ரணவத்தின் பொருளாக விளங்குகின்றவரும், லோகத்ரய ஸ்வரூபர்களுமான ருத்ராதி கணங்களோடு ருத்ர விசேஷ மூர்த்திகளான உங்களுக்கு நெருங்கிய ஸம்பந்தம் பிரஸித்தமானது. அத்த

கைய பெருமை வாய்ந்த தங்களுடைய அனு க்ரஹத்தால் எங்களுடைய தாம்பத்யத்தில் எவ்வித ஹிம்ஸையும் வராமல் ரக்ஷித்து அருள வேண்டும்.

அனுவாகம்—18

अथाग्ने......मिथुनैरीढ्वम् ।

அஷ்ட (எட்டு) திக் ஸம்பந்தியான இஷ்டகா மந்த்ரங்கள்.

अग्निश्च जातवेदाश्च । ......विसर्पेवाऽष्टमोऽग्नीनाम् ।

என்று பூர்வம் உபதேசிக்கப்பட்ட அக்நி முதலிய எட்டு மூர்த்தி பேதங்களோடு கூடிய அக்நி புருஷ ஸம்பந்தமான இஷ்டகா மந்த்ரங்கள்.

अग्नेः पूर्वं दिश्यस्य स्थाने स्वतेजसा भानि ।

கிழக்கு திக்கில் அக்நி எனும் நாமத்தோடு விளங்கும் மூர்த்தியினுடைய ஸ்தானத்தில் இருந்து கொண்டு அவருடைய ப்ரஸாதத்தால் அடைந்த தேஜஸ்ஸோடு நான் பிரகாசிக்க வேண்டும்.

जातवेदस उपदिशयस्य स्थाने स्वतेजसा भानि ।

ஆக்நேய திக்கில் (தென்கிழக்கில்) ஜாத வேதா: எனும் நாமதேயத்தோடு விளங்கும் மூர்த்தியினுடைய ஸ்தானத்தில் இருந்து கொண்டு அவருடைய ப்ரஸாதத்தால் அடையப் பட்ட தேஜஸ்ஸோடு நான் பிரகாசிக்கவேண்டும். இதே போன்று மற்ற மந்த்ரங்களின் தாத்பர் யத்தை பார்த்துக் கொள்ளவும்.

सहोजसो दक्षिणदिशयस्य स्थाने स्वतेजसा भानि ।

ஸஹோஜா: எனும் பெயரோடு தெற்கு திக்கில் விளங்கும்.

अजिराप्रभव उपदिशयस्य स्थाने स्वतेजसा भानि ।

அஜிராப்ரபவ: எனும் பெயரோடு நிருருதி திக்கில் (தென்மேற்கில்) விளங்கும்.

वैश्वानरस्यापरदिशयस्य स्थाने स्वतेजसा भानि ।

வைச்வாநரன் எனும் பெயருடன் மேற்கு திக்கில் விளங்கும்.

नर्यापस उपदिशयस्यस्थाने स्वतेजसा भानि ।

நர்யாபஸர் எனும் பெயருடன் வாயு திக்கில் (வடமேற்கில்) விளங்கும்.

पङ्क्तिराधस उदग्दिश्यस्य स्थाने स्वतेजसा भानि ।

பங்க்திராதஸர் எனும் பெயருடன் வடக்கில் விளங்கும்.

विसर्पिण उपदिश्यस्य स्थाने स्वतेजसा भानि ।

விஸர்ப்பிண: எனப் பெயருடன் ஈசான திக்கில் (வடகிழக்கில்) விளங்கும்.

ओं भूर्भुवस्स्वः ।

दिशो वो मिथुनं मा नो मिथुनꣳरोढ्वम् ।

ஹே திக் தேவதைகளே, உங்களுக்கு அக்நி முதலிய எட்டு மூர்த்திகளுடன் சிறப்பான ஸம் பந்தம் உள்ளது.

குறிப்பு : சிறப்பான ஸம்பந்தமாவது, உப காரம் புரிவது, உபகாரத்தைப் பெறுவது. இத்த கைய பெருமை வாய்ந்த உங்களுடைய பிரஸாதத் தால் எங்களுடைய தாம்பத்யபாவம் க்ஷேமமாக இருக்கவேண்டும். இந்த

ओं भूर्भुवस्स्वः ।

எனும் மந்த்ரங்கள் யஜமானர் அபிமந்த்ரணம் செய்ய வேண்டியவை.

அனுவாகம்—19

दक्षिण......श्वसङ्कृतविर्त्येते ।

நான்கு நரகவதீ எனும் இஷ்டகா மந்த்ரங்கள்.

दक्षिणपूर्वस्यान्दिशि विसर्पी नरकः । तस्मान्नः परिपाहि ।

ஹே இஷ்டகா தேவதையே, ஆக்நேய திக்கில் (தென்கிழக்கில்) இருக்கும் 'விஸர்ப்பீ' எனும் பெயருடைய நரகத்திலிருந்து எங்களை ரக்ஷிக்க வேண்டும். நரக வேதனையை அனுபவிக்கும் பொழுது துன்பம் தாங்காமல் இங்கும் அங்கும் புறண்டு அசைந்து கொள்ளும் நிலை உள்ளதால் இதற்கு விஸர்பீ எனும் பெயர்.

दक्षिणापरस्यान्दिश्यविसर्पी नरकः । तस्मान्नः परिपाहि ।

நைருருதி திக்கில் (தென்மேற்கு திசை) 'அவிஸர்ப்பீ' எனும் பெயருடைய நரகம் உள்ளது. ஹே இஷ்டகையே, அதிலிருந்து எங்களை காக்க வேண்டும்.

उत्तरपूर्वस्यान्दिशि विषादी नरकः। तस्मान्नः परिपाहि।

ஹே இஷ்டகையே, தேவதையே, வடகிழக்கில் உள்ள (ஈசானதிக்) விஷாதீ எனும் நரகத்திலிருந்து எங்களை ரக்ஷித்தருளவேண்டும். நரக வேதனையை அனுபவிக்கும் பொழுது நாம் ஏன் பாபத்தைச் செய்து இப்படி துன்பத்தை அனுபவிக்கிறோம் என்று உணர்ந்து வருந்துவர் இங்குள்ளோர். அதனால் விஷாதீ எனும் பெயர். (விஷாதம்—துக்கம், வருத்தம்)

उत्तरापरस्यान्दिश्यविषादी नरकः। तस्मान्नः परिपाहि।

ஹே இஷ்டகா தேவதையே, வடமேற்கு திக்கில் (வாயுதிக்கு) உள்ள அவிஷாதீ எனும் நரகத்திலிருந்து எங்களை ரக்ஷிக்க வேண்டும். 'அவிஷாதீ' வருந்துவதற்கு கூட அதாவது பாபத்தை ஏன் செய்தோம் என்று வருந்துவதற்குக் கூட இடமில்லாமல் வேதனை அளிக்கும் நரகம்.

இரண்டு மந்த்ரங்களின் ஆரம்பம் உபதேசிக்கப்படுகிறது.

आ यस्मिन्त्सप्त वासवा इन्द्रियाणि शतक्रतविस्येते ।

ப்ரதீகம் (ஆரம்பம்) வேறு பாகத்தில் உள்ள மந்திரங்களை நடக்கிற கர்மாவில் அனுஷ்டிப்பதற்காக குறிப்பிடுதல் என்று.

இந்த மந்த்ரத்தின் அர்த்தம்

आरोगो भ्राजः पटरःपतङ्गः ।

என்றும் அனுவாகத்தில் கூறப்பட்டுள்ளது.

அனுவாகம்—20

इन्द्रघोषाव:......एवाहिदेवाः ।

திக்ஸம்பந்திகளான ஆறு இஷ்டகா மந்த்ரங்கள் உபதேசிக்கப்படுகின்றன.

इन्द्रघोषा वो वसुभिः पुरस्तादुपदधताम् ।

ஹே ஜலரூப இஷ்டகைகளே, உங்களை இந்த்ரகோஷர்கள் எனும் தேவதைகள் வஸு தேவதைகளோடு சேர்ந்து கொண்டு கிழக்கு திக்கில் உபதானம் செய்யட்டும்.

मनोजवसो वः पितृभिर्दक्षिणत उपदधताम् ।

ஹே இஷ்டகைகளே, உங்களை தெற்கு திக்கில் பித்ருதேவதைகளோடு கூடிய 'மனோஜ

வஸர்கள்' எனும் நாமதேயத்தோடு கூடிய தேவர்கள் உபதானம் செய்யட்டும்.

प्रचेता वो रुद्रैः पश्चादुपदधताम् ।

ஹே இஷ்டகைகளே, உங்களை ருத்ரர்களோடு கூடிய 'ப்ரசேதா எனும் பெயருள்ள தேவர்கள் உங்களை மேற்கு திக்கில் உபதானம் செய்யட்டும்.

विश्वकर्मा व आदित्यैरुत्तरत उपदधताम् ।

ஹே இஷ்டகைகளே, ஆதித்யர்களோடு கூடிய விச்வகர்மா எனும் பெயருள்ள தேவர்கள் உங்களை வடக்கு திக்கில் உபதானம் செய்யட்டும்.

त्वष्टा वो रूपैरुपरिष्टादुपदधताम् ।

ஹே இஷ்டகைகளே, ரூபதேவதைகளோடு கூடிய த்வஷ்டா எனும் தேவர் உங்களை ஊர்த்வ திக்கில் உபதானம் செய்யட்டும்.

संज्ञानं वः पश्चादिति ।

இஷ்டகைகளே, நல்ல ஞானம் பொருந்திய தேவதாஸ்வரூபம் உங்களை அதோ திக்கில் உபதானம் செய்யட்டும்,

மேலும் திக்ஸம்பந்திகளான ஐந்து இஷ்ட கோபதானம் மந்த்ரங்கள்.

आदित्यस्सर्वोऽग्निः पृथिव्याम् ।

ஹே இஷ்டகைகளே! ஆதித்யாத்மகர்களான ஸர்வ அக்னி தேவர்களும் உங்களை ப்ருதிவியில் உபதானம் செய்யட்டும்.

वायुरन्तरिक्षे ।

வாயுதேவர் அந்தரிக்ஷத்தில் உபதானம் செய்யட்டும்.

सूर्योदिवि ।

ஸூர்ய பகவான் தேவலோகத்தில் (ஆகாசத்தில்) உபதானம் செய்யட்டும்.

चन्द्रमादिक्षु ।

சந்த்ர பகவான் திக்குகளில் உபதானம் செய்யட்டும்.

नक्षत्राणि स्वलोके ।

நக்ஷத்ரங்கள் ஸ்வலோகத்தில் (தங்களுடைய லோகத்தில்) உபதானம் செய்யட்டும்.

மேலும் திக்ஸம்பந்திகளான ஆறு இஷ்டகா மந்த்ரங்கள்.

एवाह्येव ।

எங்கும் செல்லக் கூடிய தன்மையோடு கூடிய ஹே ஆதித்யனே, தாங்கள், தான் அடைய வேண்டிய ஸர்வ காமனு ஸ்வரூபமாயுள்ளவர். இந்த இஷ்டகையை உபதானம் செய்தருள வேண்டும்.

एवाह्यग्ने । एवा हि वायो । एवाहीन्द्र ।

एवा हि पूषन् । एवा हि देवाः ।

முதல் மந்த்ரத்தில் கூறியபடியே இவை களுக்கும் தாத்பர்யம். 'ஹி' சப்தமானது எல்லா காமனைகளையும் அடைவதற்கு இவை ஸாதனம் எனும் பிரஸித்தியை தெரிவிக்கிறது.

அனுவாகம்—21

आपमापा......सन्दृशि ।

ஒன்பது இஷ்டகோபதான மந்த்ரங்கள் கூறப்படு கின்றன.

आपमापामपस्सर्वाः । ......स्वस्ति नो बृहस्पतिर्दधातु ।

முதல் அனுவாகத்தில் இம்மந்த்ரங்களின் அர்த்தம் விளக்கப்பட்டுள்ளது. இவ்விடத்தில் இஷ்டகோபதானம் செய்ய வேண்டியதற்காக மறுபடியும் உபதேசிக்கப்பட்டுள்ளது.

केतवो अरुणासश्च । ......सन्दृशि ।

இந்த ரிஷிகணங்கள் ஜாகரூகர்களாக(உன்னிப் போடு) நூற்றுக் கணக்கான முறையில் சாச்வத மான நூற்றுக்கணக்கான பலன்களுக்கு காரண மாக உள்ள இந்த இஷ்டகையை உபதானம் செய் யட்டும்.

குறிப்பு: இத்தனை தேவர்களும், இந்த அத்வர்யு முகமாக இஷ்டகோபதானம் செய்கிறார் கள் எனும் பாவத்தை யஜமானர் மானஸீகத் யானம் செய்யவேண்டும்.

அனுவாகம் – 22

योपां पुष्पं वेद ।

இதுவரை உபதான மந்த்ரங்கள் அனேகமாக உபதேசிக்கப்பட்டுள்ளன. இதற்குமேல் இஷ்ட கைகளுடைய பெருமையைத் தெரிவிக்கும்

ப்ராஹ்மண பாகம் கூறப்படுகிறது. முதலில் ஜலங்களுடைய ப்ரசம்ஸை கூறப்படுறது. ப்ரசம்ஸை - பெருமை - புகழ் - போற்றுதல் ஒரே பொருளை கொடுக்கும் சொல்.

योऽपां पुष्पं वेद । ......य एवं वेद ।

அம்ருதமயமான சந்த்ரமண்டலம் ஜலங்களின் புஷ்பம் போன்றது. முக்யமானது என்பது தாத்பர்யம். புஷ்பித்த பிறகு பலம் (பழம்) ஸித்தம் அல்லவா? சந்த்ரமண்டலம் ஜலத்தின் புஷ்பஸ்தானீயம் என்பதை அறிந்தவனுக்கு பலம் கூறப்படுகின்றது. இதை அறிந்தவன் ஷம்பக புஷ்பம், மகிழம்பூ முதலிய புஷ்பங்களையும் புத்ர பௌத்ராதிகளையும், கோ முதலிய பசுக்களையும் அடைந்து போக போக்யானுபவத்துடன் நல்ல வாழ்வு பெறுவான்.

योऽपामायतनं वेद । ......आयतनवान् भवति ।

அக்நி பர்யாயம் ஸ்ருஷ்டிப்ரகரணத்தில் 'अग्नेरापः' அக்நியிலிருந்து ஜலம் உண்டானது என்று கூறப்பட்டுள்ளது. ஆதாலால் அக்நி ஜலத்திற்கு ஆயதனம் (இருப்பிடம்) எவர் ஜலத்தினுடைய ஆயதனத்தை அறிகிருரோ அவர் நல்ல இருப்பிடத்தை உடையவராக விளங்குவர். முதலில் கூறும் பலவசனம் 'ப்ரரோசனத்திற்காக'

(ப்ரரோசனம்-ப்ரக்ருத விஷயத்தில் (இப்பொழுது சம்பந்தபட்ட) ஆர்வத்தை உண்டுபண்ணுதல். இரண்டாவது தடவை பல வசனம் உபஸம்ஹாரார்த்தம் (முடிவுரை).

योऽग्नेरायतनं वेद । ......आयतनवान्भवति ।

எவர் அக்நியினுடைய ஆயதனத்தை அறிகிறரோ அவர் ஆயதனத்தை இருப்பிடத்தை அடைந்து மகிழ்வார். ஜலம் அக்நிக்கு ஆயதனம். இதை அறிந்தவர்க்கு முன் போல் பலம். ஜலத்திற்கு - அக்நி ஆயதனம் என்று முதலில் கூறப்பட்ட விஷயம் மஹாஸ்ருஷ்டி க்ரமத்தை அனுசரித்தது. அக்நிக்கு ஜலம் ஆயதனம் என்று இரண்டாவதாக கூறப்பட்டது.

आपो वा इदमासन्त्सलिलमेव ।

எனும் அவாந்தரஸ்ருஷ்டி க்ரமத்தை அனுசரித்து கூறியது. ஆகவே முரண்பாடு இல்லை. இந்த ஜலத்திற்கும் அக்நிக்கும் பரஸ்பரம் ஆயதன பாவம் (இருக்குமிடம்) ரூபமான ப்ரசம்ஸை (பெருமை). இதை அறிந்தவர் நல்ல க்ருஹத்தில் வஸித்துக் கொண்டு ஸுகமாக வாழ்வர் என்பது தாத்பர்யம். இதே தாத்பர்யம் மேல் வரும் பர்யாயங்களுக்கும்.

வாயு பர்யாயம்.

वायुर्वा अपामायतनम् । ......आयतनवान्भवति ।

வாயு அக்நிக்கு ஆயதனம், அக்நிக்கு வாயு ஆயதனம். முதலில் கூறுவது மஹாஸ்ருஷ்டி க்ரமத்தை அனுஸரித்தது. இரண்டாவது கூறியது அவாந்தர ஸ்ருஷ்டி க்ரமத்தை அனுஸரித்தது.

ஸூர்ய பர்யாயம்,

असौ वै तपन्नपामायतनम् । ......आयतनवान्भवति ।

இந்த ஸூர்யன் ஜலத்திற்கு ஆயதனம். ஸூர்யனுல் மழை, மழையினுல் ஜலஸம்ருத்தி, இந்த முறையில் ஸூர்யன் ஜலத்திற்கு ஆதாரம். மற்றவை முன்போல். சந்த்ர பர்யாயம்.

चन्द्रमा वा अपामायतनम् । ......आयतनवान्भवति ।

சந்த்ரன் ஜலத்திற்கு ஆதாரம். பனிரூபத்தை சந்த்ரன் அளிக்கிறுர். மற்றவை முன்போல்.

நக்ஷத்ர பர்யாயம்

नक्षत्राणि वा अपामायतनम् । ......आयतनवान्भवति ।

நக்ஷத்ரங்கள் ஜலத்திற்கு ஆதாரம். புஷ்யம், ஆயில்யம், அவிட்டம், பூரட்டாதி, ரேவதி முதலிய நக்ஷத்திரங்கள் ஜலராசியான கடகராசி, மகரராசி, கும்பராசி, மீனராசிகளைச் சார்ந்தவை. இந்த ஜலராசிகளில் சந்த்ரன் சஞ்சரிக்கும் போது மழை அதிகமாக ஏற்படுகிறதல்லவா. அதனால் நக்ஷத்ரங்கள் ஜலத்திற்கு ஆதாரமாகின்றன. கார்த்திகை மாத கடக சந்திரன் கல்லையும் துளைக்கும் மழையை அளிக்கும் என்பது முன்னோர் வழக்கு.

பர்ஜன்ய பர்யாயம் (மேகம்)

पर्जन्यो वा अपामायतनम् । आयतनवान्भवति ।

மேகத்தினால் மழை - மழையினால் ஜல ஸம்ருத்தி. மற்றது முன்போல்.

ஸம்வத்ஸர பர்யாயம்

संवत्सरो वा अपामायतनम् । य एवं वेद ।

ஸம்வத்ஸரத்தில் தான் வருஷருது உள்ளது. வர்ஷருதுவில் விசேஷ மழை, அதனால் ஜல ஸம்ருத்தி. மற்றவை முன்போல்.

योऽप्सु नावं प्रतिष्ठितां वेद । प्रत्येव तिष्ठति ।

ஜலம்தான் பூராதி ஸகல லோகங்களுக்கும் ஆதாரம் என்று புகழப்படுகிறது. எவர் பூராதி ஸகல லோகங்களும் ஜலத்தில் ப்ரதிஷ்டிதமாக அசையாத ஓடம் போல் உள்ளது என்று அறி கிருனே, அவன் நன்ருகப் பிரதிஷ்டையோடு வேரூன்றி இருப்பான். ஸாமான்யமாக நௌகை கள் (ஓடங்கள்) ஜலத்தில் ஸஞ்சரித்துக் கொண்டே இருக்கும். ஆனுல் அண்டகோச மான ஓடம் சலிக்காமல் இருப்பதாக காணப்படும். ஏனெனில் இந்த அண்டகோசம் என்பது ஜல பாகமும் சேர்ந்ததுதானே. ஆகவே ஜலபாகமும் சேர்ந்துதானே சுழன்று வரும் என்பது தாத் பர்யம். யாவும் ஜலத்தில் ப்ரதிஷ்டிதமானவை (ஸ்திரமானவை) என்பது பற்றி சாகாந்தரத்தில் கூறப்பட்ட ரிக் உபதேசிக்கப்படுகிறது.

ஜலங்களின் ஸாராம்ச ஸத்திலிருந்துதான் ஸகல லோகங்களும் உண்டாகி, அந்த ஸாராம்ச ஸத்திலே ஸ்திரமாயுள்ளன. அந்த ஸாரம் ஸூர்யனிடத்தில் ஸூர்யனுல் சம்பாதிக்கப்பட்டு சேர்த்து வைக்கப்பட்டது. ஸூர்ய ஸம்பந்த முள்ளதால் அது நிர்மலமானது. ஜல ஸாரத்தி னுடைய ஸராம்சமானது ஸோமரூபம்; ஹே ஜலங்களே, அத்தகைய உத்தம ரஸத்தை அவ் வந்த க்ரதுக்களில் ஸ்வீகரிக்கிருேம். அவ்வளவு பெருமை வாய்ந்த ஜலம்தான் இங்கு ஆருண கேதுக சயனத்தில் இஷ்டகைகளாக க்ரஹிக் கிருேம் என்பது தாத்பர்யம். இந்த மந்த்ரத்தினு

லும் ஒரு இஷ்டகையை உபதானம் செய்ய வேண்டும்.

इमे वै लोका अप्सु प्रतिष्ठिताः ।

तेऽमुष्मिन्नादित्ये समाभृताः ।

இந்த ப்ருதிவியாதி லோகங்கள் யாவும் ப்ரஹ்மாண்டம் முழுவதும் ஜலமத்யத்தில் பாலில் ஏடு மிதப்பது போல் ஜலமத்யத்தால் கடின பதார்த்தமாக உள்ளன. யாவுமே ஸூர்ய மண்டலத்தை ஆச்ரயித்துள்ளன. அவைகளுடைய யோக க்ஷேமம் ஸூர்யாதீனம் என்பது தாத்பர்யம். இது பர்யந்தம் இஷ்டகா ரூபமான ஜலத்தின் ப்ரசம்ஸை (பெருமை) கூறப்பட்டுள்ளது. இனி சயனத்தின் ப்ரயோக க்ரமம் கூறப்படுகிறது.

जानुदघ्नीमुत्तरवेदीङ्खात्वा ।

......अग्निं प्रणीयोप समाधाय ।

உபோத்காரத்தில் ப்ரயோக க்ரமமும் கூறப்பட்டுள்ளதையும் பார்த்துக் கொள்ளவும். காடகம் முதல் ப்ரச்நத்தில் ஸாவித்ர சயனம் உபதேசிக்கப்பட்டுள்ளது. அங்கு தேவையான ப்ரதேசத்தில்

ரதசக்கரம் போன்று சயனம் செய்ய வேண்டும். இஷ்டகைகளை உபதானம் செய்து, பிறகு அதன் மேல் அக்நியை கொண்டு வந்து அதில் ஹோமம் செய்யவேண்டும். இந்த ஆருணகேதுக சயனத்தில் ஸாவித்ர சயனத்தில் ரதசக்ராகாரமாக (வர்த்துலமாக) உல்லேகனம் செய்வது போல், உல்லேகனம் செய்து ஜாநுதக்நம் (முழங்கால் அளவு) பள்ளம் தோண்டி அதில் கணுக்கால் அளவு ஜலம் நிரப்பி, புஷ்கரபர்ணங்களாலும் (தாமரை இலைகள்) தாமரை தண்டுகளாலும், தாமரை புஷ்பங்களாலும், வேரோடு தாமரை செடிகளாலும், நிரப்பி, அதன் மேல் நீளமான மரப்பலகைகளால் நிர்மாணிக்கப்பட்ட பீடத்தில் அக்நியை ப்ரணயனம் (கொண்டு வந்து வைத்து) செய்து அக்நியை ஸ்தாபித்து, ஜ்வலிக்க செய்து அக்நியைச் சுற்றிலும் ஜலமயமான இஷ்டகைகளை அதாவது வடிகட்டிய ஜலத்தை சிறு மண் குடுவையால் மொண்டு அந்தந்த மந்த்ரங்களால் உபதானம் செய்யவேண்டும்.

ब्रह्मवादिनो वदन्ति.......अभीष्टका उपदधाति ।

இந்த இடத்தில் (ப்ரகரணத்தில்) ப்ரம்மவாதிகளால் (வேதமறிந்த பெரியோர்களால்) சில ஆக்ஷேப ஸமாதானம் சொல்லப்படுகிறது. ஆக்ஷேபம்-இதர சயனங்களைக் காட்டிலும் இந்த சயனத்தில் உள்ள வைலக்ஷயண்யத்தை (வேறு

பாட்டை) தெரிவிப்பதற்காக செய்யப்படும் ஆக்ஷேப ஸமாதானம். ஒரு மஹான் ஆக்ஷேபிக்கிறார். எல்லா அக்நி சயனங்களிலும் இஷ்டகா சயனம் செய்த பிறகு, அதன் மேல் அக்நி ப்ரணயனம் (கொண்டு வந்து வைத்தல்) செய்யப்பட்டு ஹோமாதி கர்ம அநுஷ்டிக்கப்படுகிறது. அப்படி இருக்க, இங்கு மட்டும் அக்நி ப்ரணயத்திற்கு (அக்நி ப்ரதிஷ்டை) பிறகு இஷ்டகோபதானம் செய்யப்படுகிறதே. இது உசிதமில்லாதது போல் தெரிகிறதே? மற்றொரு மஹான் ஸமாதானம் அளிக்கிறார், இந்த அக்நி சயனம் ஜலத்தோடு கூடியது. அபீஷ்டகைகளை உபதானம் செய்த பிறகு தணல் ரூபமான அக்நியை ப்ரணயனம் செய்தால், சுற்றிலும் பாதுகாப்பு இல்லாததால், ப்ரணயனம் செய்யும் பொழுதே ஜலத்தைப் பார்த்தும் அக்நி இந்த தேவ யஜன ப்ரதேசத்திலிருந்து வெளியில் செல்வதற்கு வாய்ப்பு ஏற்பட்டுவிடுகிறது. மற்ற சயனங்களில் ஜல ஸம்பந்தம் இல்லாததால் ப்ரணீதமான (கொண்டு வரப்பட்ட) அக்நி வெளியே செல்வதற்கு விருப்பமில்லை. ஆகவே இந்த சயனத்தில் அக்நி ப்ரதிஷ்டைக்கு பிறகு ஜலேஷ்டகைகள் உபதானம் செய்யப்படுகின்றன. அடுத்து இந்த சயனம் எந்த கர்மாநுஷ்டானத்தில் அங்கமாக ஆகிறது என்பது பற்றிய விசாரம் செய்யப்படுகிறது.

अग्निहोत्रे दर्शपूर्णमासयोः । पशुबन्धे चातुर्मास्येषु ।

அக்நி ஹோத்ரம், தர்ச பூர்ணமாஸ இஷ்டிகள், பசுபந்தம், சாதுர்மாஸ்யம் இவைகளில் இந்த சயனம் அங்கமாகும் என்று சிலர் அபிப்ராயம் ஆனால் வேறு சில மஹரீயர்கள் ஸோமாதி க்ருதுக்களிலும் அங்கமாகலாம் என்று அபிப்ராயம் கூறுகிறார்கள்.

இந்த சயனத்தினுடைய, அதிக பல விசேஷங்கள், ஏழு ப்ரச்னோத்தரங்களால் (கேள்வி - பதில்களால்) தெரிவிக்கப்படுகின்றன.

अथो आहुः । सर्वेषु यज्ञक्रतुष्विति ।

एतद्धस्म वा आहुश्शाण्डिलाः । ......संवत्सरं प्रत्यक्षेण ।

சாண்டில்யர் எனும் மஹரிஷியின் வம்சத்தவர்கள் சிலர் சேர்ந்து இந்த சயனத்தின் பலத்தை நிச்சயிப்பதற்காக ஒருவருக்கொருவர் கேள்வி பதில்கள் கூறுகிறார்கள். சிலர் கேட்க்கிறார்கள். ஸத்ர ஸம்பந்தியான இந்த அக்நியை எந்த பலத்திற்காக அனுஷ்டிக்கின்றனர். சில அபிஞர்களின் (நன்கு கற்றறிந்தவர்களின்) பதில், ப்ரத்யக்ஷமாகவே ஸம்வத்ராத்மக பலத்தை அடைவதற்கே அனுஷ்டிக்கின்றனர்.

कमग्निनश्चिनुते ......अमुमादित्यं प्रत्यक्षेण ।

ஸாவித்ராக்நி சயனத்திற்கு ஆதித்ய ப்ராப்தி பலம்.

कमग्निश्चिनुते । ......प्राणान्प्रत्यक्षेण ।

நாசிகேதாக்நி சயனத்திற்கு வாயுருப ப்ராப்தி பலம்.

कमग्निश्चिनुते । ......ब्रह्म प्रत्यक्षेण ।

சாதுர்ஹோத்ரிய அக்நி சயனத்திற்கு வேத புருஷ ப்ராப்தி பலம்.

कमग्निश्चिनुते.. ....शरीरं प्रत्यक्षेण ।

வைச்வ ஸ்ருஜாக்நி சயனத்திற்கு ஹிரண்ய கர்ப்ப தேஹ ப்ராப்தி பலன்.

कमग्निश्चिनुते......इमान् लोकान्प्रत्यक्षेण ।

மஹாநான, வைச்வ ஸ்ருஜாக்நி சயனத்திற்கு ஸர்வ லோக ப்ராப்தி பலம்.

कमग्निश्चिनुते......तमिति ।

ஆருண கேதுக சயனத்திற்கு எப்பொழுதும் இந்த லோகத்திலும் பரலோகத்திலும் விடாமல் ப்ரகாசித்துக் கொண்டிருக்கின்ற ஸூர்ய பகவானை அடைகின்றான்.

योऽग्नेर्मिथूया वेद.......य एवं वेद ।

இந்த ஆருண கேதுக அக்நிக்கும் ஜலத்திற்கும் உள்ள மிதுனீபாவ ஸம்பந்தத்தை யார் அறிகின்றாரோ அவர் இடையூறின்றி தாம்பத்யத்தோடு சிறந்து ஸுகமாக வாழ்கின்றான்.

அனுவாகம்—23

आपोवा......य एवं वेद ।

இந்த அனுவாகத்திலும் ஆருண கேதுகாக்நியின் பெருமையும் இதற்கு அங்க பூதமான, ஜலங்களின் பெருமையும் புகழ்ப்படுகிறது. ஜகத் ஸ்ருஷ்டி ப்ரகாரத்தைக் கூறுவான். முறையில் ப்ரசம்ஸை (பெருமை) ஆரம்பிக்கப்படுகிறது. முதலில் காமரூப பதார்தோத்பத்தி சொல்லப்படுகிறது. (காமம் – ஆசை, விருப்பம், ஆஸ்த்தை, அபிலாஷை)

आपो वा इदमासन्त्सलिलमेव......तदेषाऽभ्यनूक्ता ।

இந்த பார்க்கப்படும் பிரபஞ்சம் முழுவதும் ஸ்ருஷ்டிக்கு முன்பு ஒரே ஜலமாகவே இருந்தது. வேறொன்றுமே இல்லை. இந்த ஜலமத்தியில் ஒரு தாமரை இலை, அதில் ஸ்ரீ ஜகதீஸ்வரன் ஜகத்தை மக்களை ஸ்ருஷ்டிக்கும் ப்ரஜாபதியாக அவதரித்து அமர்ந்துள்ளார். அன்னவருக்கு ஸர்வஜகத்தை யும் ஸ்ருஷ்டிக்க வேண்டும் எனும் ஆஸ்த்தை ஏற்பட்டது. ஆகவே ஆசைதான் முதலில் உற் பத்தியானது. பிறகுதான் பேசுதல் வேண்டிய பிரயத்தனம், எடுத்தல் எனும் செயல் என்பவை உண்டானது. அதனால் தான் அவர் ஸந்ததி யான மக்களும் முதலில் ஆசைப்பட்டு ஸங்கல் பித்து தனக்குள் பேசிக் கொண்டு கார்யத்தில் இறங்குகின்றனர். [இந்த விஷயத்தில் ஸ்ரீபகவத் பாதாளின் ஸூக்தி (நல்ல வசனம்) மிகவும் ரஸித்து அனுபவிக்க வேண்டும்.

कर्महेतुः कामस्स्यात् प्रवर्तकत्वात् ।

அதாவது எல்லா கர்மாக்களுக்கும் காரணம் காமந்தான் (ஆசைதான்). அதனால் தூண்ட பட்டுதானே கார்யத்தில் இறங்குகிறான்]. இந்த தாத்பர்யத்தை விளக்கும் சாகாந்தரத்திலுள்ள ரிக் இவ்விடம் தெரிவிக்கப்படுகிறது.

कामस्तदग्रे समवर्तताधि । ......कवयो मनीषेति ।

ஸ்ருஷ்டியாரம்ப காலத்தில் ப்ரஜாபதியினு டைய மனஸில் 'ஸ்ருஷ்டிக்க வேண்டும்' எனும்

அபிலாஷை ஏற்பட்டது. ஆகவே காமம்தான் மனஸினுடைய முதலாவதான ஸ்ருஷ்டி. இந்த காமம் உண்டானதும் பூர்வகல்பத்தில் ஸ்ருஷ்டிக் கப்பட்டவை, கல்பாந்தரத்தில் அவ்யக்தத்தில் லயிருக்கும் பொழுது (பரப்ரஹ்மத்தில் அடங்கும் போது) அதனதனின் கர்ம சேஷத்துடன் லயித் துள்ளதால் (அடங்கி இருப்பதால்) இந்த கல்பத் தில் (அடுத்த கல்பத்தில்) ஸ்ருஷ்டியாரம்பத்தில் ப்ரஜாபதியினுடைய மனஸில் அந்தந்த ப்ராணி களின் ஸ்ருஷ்டிக்குக் காரணமான கர்மாக்கள் உத் புத்தமாகின்றன (புத்தியில் தோன்றுகின்றன). அவைகளைக் கொண்டு ப்ரஜாபதியின் ஸ்ருஷ்டி தொடர்கிறது. இந்த க்ரமம் இந்த கல்பத்தில் மட்டும் அல்ல, எல்லா கல்பங்களிலும் ஸ்ருஷ்டி க்ரமம் இவ்விதமே. மனதை அடக்கியாளும் சக்தியுள்ள அந்தந்த ப்ரஜாபதிகள் ஸ்ருஷ்டி யாரம்ப காலத்தில் அவர்கள் மனஸில் உத்பத்த மான (புத்தியில் தோன்றிய) ப்ராணி கர்மாக் களைக் கொண்டு தான் ஸ்ருஷ்டிக்கிறார்கள். ஆதலால் அவர் ஸங்கல்பித்தபடி ஸ்ருஷ்டி ஏற்பட்டுள்ளது. இந்த ப்ரதம ஸ்ருஷ்டமான காம ஸ்வரூபத்தை அறிந்தவர்க்கு அவர் விரும்பும் எல்லா காமனைகளும் ஸித்திக்கும்.

उपैनं तदुपनमति । ......य एवं वेद ।

மேற்கொண்டு ஸ்ருஷ்டி க்ரமம் சொல்லப்படு கிறது.

सतपोऽतप्यत...

அந்த ப்ரஜாபதி ஸ்ருஷ்டி விஷயமாக ஆலோசனை ரூபமான தபஸ்ஸைச் செய்து இவ்விதம் ஸ்ருஷ்டிக்க வேண்டும் என நிச்சயித்து தனது சரீரத்தை அசைத்துக் கொண்டார். (உதறிக் கொண்டார்.) அப்பொழுது அசைந்த மாம்ஸ ப்ரதேசத்திலிருந்து அருணா:, கேதவ:, வாதரசநா: என்ற ரிஷிகள் உண்டானார்கள். நகங்களிலிருந்து வைகாநஸர்கள் எனும் ரிஷிரிகள் உண்டானார்கள். சரீரத்திலுள்ள ரோம கூபங்களிலிருந்து (மயிர் கால்கள்) வாலகில்யாள் எனும் ரிஷிகள் தோன்றினார்கள். சரீரத்தின் ஸாராம்சமானது. ஜலமத்யத்தில் கூர்ம ஸ்வரூபமாக ஆவிர்பவித்தது. ப்ரஜாபதி ஸத்ய ஸங்கல்பர். அந்த கூர்மரூபியான பகவானோடு ப்ரஜாபதி ஸம்பாஷித்தார். ஸம்வாதம் சொல்லப்படுகிறது.

अन्तरतः कूर्मं भूतँ सर्पन्तम् ।....त्वमिदं पूर्वः कुरुष्वेति ।

ப்ரஜாபதி ஜலத்தில் ஸஞ்சரிக்கும் கூர்மரூபியைப் பார்த்துச் சொல்லுகிறார். ஹே கூர்மமே, நீ என்னுடைய த்வக், மாம்ஸம் இவைகளுடைய ஸாரத்திலிருந்து தோன்றியுள்ளாய். கூர்மம்

இல்லை இல்லை, நான் எங்கும் வ்யாபகமாயுள்ள சைதன்ய ஸ்வருபமாக பூர்வ காலத்திலிருந்தே நித்யமாக உள்ளவன். இந்த கூர்ம சரீரம் மட்டில் உன் சரீர ஸாரத்தால் ஏற்பட்டது. ஆகவே நான் பூர்வமேவ (முன்பே) இந்த ஆமை சரீரம் ஏற்படு வதற்கு முன்பே உள்ளவன். அதனுல் எனக்கு புருஷன் எனும் பெயர். (புரா ஆஸம் இதி புருஷன்)

पुरा आसं इति - पुरुष:

இவ்விதம் கூறிவிட்டு கூர்ம ருபியான பகவான் ஆயிரக்கணக்கான சிரஸ்களுடனும், ஆயிரக்கணக்கான கண்களுடனும் அதேபோல் பாதங்களுடன் தோன்றினுர். (விச்வருபதர்சனம் கொடுத்தார்) ப்ரஜாபதி-ப்ரபோ, தாங்கள் எனக்கு முன்பாகவே உள்ளவர்கள். ஆகையால் தாங் களே இந்த ஜகத்தை ஸ்ருஷ்டிக்க வேண்டும் என்று ப்ரார்த்தித்தார். பரமேச்வரன் பின் வரு மாறு ஸ்ருஷ்டி செய்தார்.

स इत आदायाप: ....सा प्राची दिक् ।

அந்த பமேஸ்வரன் ஆருண கேதுக ருபியாய் இருந்து கொண்டு, அகண்டாகாரமான ஜல ஸமுதாயத்திலிருந்து ஒரு அஞ்ஜலி தீர்த்தத்தை ஏடுத்து

एवाह्येव

எனும் மந்த்ரத்தை உச்சரித்து முன்புரத்தில் உபதானம் செய்தார். ஜலத்தை அஞ்ஜலியினுல் முன்புறம் அள்ளிவிட்டார். (என்ன ஆச்சர்யம்) உடனே ஸூர்யன் உண்டானுர். இதுதான் கிழக்கு திக்கு. இதே முறையில் யாவும் உண்டாயின.

अथारुण: केतुर्दक्षिणत उपादधात् । ......सोर्ध्वा दिक् ।

அக்நி - தெற்கு, வாயு - மேற்கு திக்கு, இந்திரன் வடக்கு திக்கு, பூஷா அதோ திக்கு, தேவர்கள், மனுஷ்யர்கள், பித்ருதேவதைகள், கந்தர்வர்கள், அப்ஸரஸ்ஸுகள், உண்டாயினர். ஊர்த்வ திக்கும் இம்மாதிரி தேவாதி ஸ்ருஷ்டிகள் ஏற்பட்டன. அஸுராதி ஸ்ருஷ்டி கூறப்படுகிறது.

या विप्रुषो विपरापतन् ।

......विप्रुड्भ्यो हि ते समभवन् ।

ஆருணகேதுகர் அஞ்ஜலியினுல் ஜலத்தை உபதானம் செய்யும் சிதறிய ஜல பிந்துக்களிலிருந்து (திவிலைகள்) அஸுரர்கள், ராக்ஷஸர்

கள், பிசாசங்கள், சண்டாளர்கள் உண்டாயின. சிதறிய ஜல பிந்துக்களிலிருந்து உண்டான காரணத்தினால் இவர்கள் இகழப்பட்ட அதமர்களானார்கள் (வீணாயினர்).

तदेषाऽभ्यनूक्ता ।

ஜலத்திலிருந்து உண்டான ஸ்ருஷ்டியை ப்ரதிபாதனம் (விளக்கும்) செய்யும் சாகாந்தரத்தில் உள்ள ரிக்கு கூறப்படுகிறது.

आपो ह यद्बृहतीर्गर्भमायन्......ब्रह्मस्वयंभ्विति ।

ப்ரௌடமான ஜலஸமூஹம் கூர்ம ரூபியாக பகவதாரம் ஏற்படுவதற்காக கர்ப்பத்தை தரித்தன. கூர்ம ரூபியான பரமாத்மா இந்த ஜகத்தை ஸ்ருஷ்டித்துள்ளார். இந்த ப்ரும்ம ஸ்வரூபியான பரமாத்மாதான் இந்த ஜகத்திற்கு காரணம். ஆகவே இந்த ஜகத் முழுவதும் ப்ரஹ்ம ஸ்வரூபமே. விக்ஷேப ஸ்வபாவத்தோடு (நிம்மதில்லாத ஸ்வபாவம்) கூடிய ஜலத்திலிருந்து தோன்றியதால் இந்த ஜகத் ஸ்திரமற்றதாக இருக்கிறது.

तस्मादिदꣳसर्वꣳशिथिलमिवाध्रुवमिवाभवत् ।

சைதன்ய ஸ்வபாவமுள்ள (ஸ்திரமில்லாத) ஜலத்தினால் தோன்றியதால் இந்த ஜகத் சைதன்

யத்தோடு (உறுதியில்லாததாகவும்) கூடியதாயும் உறுகுலையுப் சாச்வதத் தன்மையற்றதாயும் உள்ளது. சைதன்யமற்ற ஜடத்தன்மையுடன் உள்ளது.

प्रजापतिर्वाव तत् । ......तदेवानुप्राविशत् ।

உலக இயல்புபோல் கேவல கார்யமான தடாதிகள் (குளங்கள்) இருப்புள் சைதன்யமானது தான் (உறுதி இல்லாததுதான்) என்று கூறலாம். ஆனால் இந்த ஜகத் ப்ரஜாபதியின் ஸ்ருஷ்டம். ஆகவே ப்ரஜாபதி (ஆருண கேதுகள்) ஜகத்தை நிர்மாணம் செய்து தானே சைதன்ய ரூபேண, (பரப்ரம்ம ஸ்வரூபத்தில்) ஜீவரூபேண ஜகத்தில் அனுப்ரவேசம் செய்து விளங்கச் செய்கிறார். அதாவது எந்த வஸ்துவிலும் சைதன்யாம்சம் (அழியும் தன்மை) உள்ளது. அதனால்தான் வஸ்துக்கள் விளங்குகின்றன.

तदेषाऽभ्यनूक्ता ।

இந்த விபரத்தை ப்ரதிபாதனம் செய்யும் சாகாந்தரத்திலுள்ள ரிக்கு கூறப்படுகிறது.

विधाय लोकान् विधाय भूतानि ।

........आत्मनात्मान मभिसंविवेशेति ।

ஸத்ய ஸ்வருபியான பரப்ரஹ்மத்திலிருந்து தோன்றிய (உண்டான) இந்த ஆருணகேது ப்ரஜாபதியானவர் பூராதி லோகங்களேயும், பூதங்களேயும், ப்ராணி ஜாதங்களேயும், ப்ராகாதி (கிழக்கு முதலிய) திக்குகளேயும், ஸ்ருஷ்டி செய்து அவைகளில் தானும் சைதன்யரூபேண அனுப்ரவேசம் செய்தார். இந்த ரிக்குனுலும் ஒரு இஷ்டகோபதானம் செய்ய வேண்டும். இந்த ஸ்ருஷ்டி க்ரமத்தை அறிந்தவரின் பெருமையும் பலமும் கூறப்படுகிறது.

सर्वमेवेदमाप्त्वा......य एवं वेद ।

எந்த ஒருவர். இந்த ப்ரஜாபதியின் ஸ்ருஷ்டிப் ப்ரகாரத்தை (முறையை) அறிகிருனே, அவன் இந்த ஜகத்தில் ஸகல பலன்களேயும் அடைந்து ஜகத்தை வசீகரித்து எல்லா வஸ்துவாக இருக்கும் தன்மையான பரப்ரஹ்ம ஸ்வரூபத்தை பெருகிறுன்.

ஒவ்வொரு பதார்த்தத்திலும் ஐந்து அம்சங்கள் உள்ளன.

1. अस्ति அஸ்தி இருக்கிறது. 2. भाति பாதி விளங்குகிறது. 3. प्रियम् ப்ரியம் இந்த. வஸ்து

ப்ரியமானது. 4. किञ्चित् இது நீண்டது, சதுரமானது, வட்டமானது, கழுத்துள்ளது, (குடம்) சிறியது, பெரியது இது போன்ற உருவ அமைப்பு. 5. नाम பெயர்-குடம், பானை, சராவம் முதலிய பெயர்கள்.

இந்த ஐந்து அம்சத்தில் முதல் மூன்று அம்சங்கள் அஸ்தி, பாதி, ப்ரியம் ப்ரஹ்மத்தினுடையது. இவ்வுருவம் இன்ன பெயர்—இரண்டும் குடம் முதலிய பொருளைச் சார்ந்தது—ஆகவே முன் மூன்றும் நித்யமானது. பின் இரண்டும் பொருளைச் சார்ந்தது.

அனுவாகம்—24

चतुष्टय्य-एवं वेद ।

முன் இரண்டு அனுவாகங்களால் ஜலங்களின் பெருமை கூறப்பட்டது. இந்த அனுவாகத்தில் அபீஷ்டகைகளின் ஜலாத்மகான இஷ்டகைகளின் அனுஷ்டான விசேஷம் கூறப்படுகிறது. முதலில் அந்த தீர்த்தங்களை க்ரஹிக்கும் முறை சொல்லப் படுகிறது.

चतुष्टय्य आपो गृह्णाति । ......तान्येवावरुन्धे ।

இஷ்டகோபதானம் செய்வதற்கு நான்கு விதமான ஜலங்களை க்ரஹிக்கவேண்டும். நான்கு

என்பது உபலக்ஷணமாக (ஞாபகப்படுத்துவதாக) கூறப்பட்டுள்ளது. ஏனெனில் 6 வித ஜலம் பற்றி லக்ஷ்யமான (சொல்லப்படப் போகிற பாகத்தில்) சொல்லப்படுகிறது. ஜலங்கள் நான்கு நிலையில் உள்ளன. 1. மேகம் 2. வித்யுத் (மின்னலோடு கூடிய மேகம்) 3. ஸ்தனயித்நு - மேக கர்ஜனம் (இடியோடு கூடிய மேகம்) 4. வ்ருஷ்டி - மழை மேகாதி சதுஷ்டயமும் கர்த்தாவுக்கு ஸ்வாதீன மாகிறது. முதலில் நான்கு வித ஜலங்களுள் முதல் விதமான மேக ரூபத்தைப் பற்றி விதிக்கப் படுகிறது.

आतपति वर्ष्या गृह्णाति । ......ब्रह्मवर्चसितरः ।

ஸூர்ய ப்ரகாசம் நன்கு இருக்கும் பொழுது, அதாவது வெய்யல் காயும்போது பெய்யும் மழை ஜலத்தை பாத்திரத்தில் க்ரஹித்து அந்த தீர்த்தத்தை சயன ப்ரதேசத்தில் முன்புறத்தில் உபதானம் செய்யவேண்டும். இந்த தீர்த்தம் ப்ரஹ்ம வர்சஸுக்கு ஹேதுவாகும். ஆகவே அக்நி பகவானுடைய முகத்தில் ப்ரஹ்மவர்ச்சஸ் சேர்ந்து பிரகாசிக்கும். அதனால் தான் (வேதாத்ய யனம், சாஸ்த்ராத்யயனம் இவைகளோடு கூடிய மஹான்களின் முகத்தில் ப்ரஹ்மவர்சஸ் விசேஷ மாக பிரகாசிக்கிறது).

இரண்டாவது விதமான ஜலோபதானம் விதிக்கப்படுகிறது.

कूप्या गृह्णाति । ......तस्माद्दक्षिणोऽर्धस्तेजस्वितरः ।

கிணற்று ஜலத்தை க்ரஹித்து, தென்புறமாக உபதானம் செய்யவேண்டும். இந்த தீர்த்தம் தேஜஸ்ஸை கொடுக்கக் கூடியது. இதனுல் அக்நியின் வலதுபாகம் தேஜஸ்ஸோடு பிரகாசிக்கும். அதனுல் தான் (எல்லோருக்கும் வலது பாகம் விசேஷமான சக்தியுடன் விளங்குகிறது)

மூன்ருவது ஜலவிசேஷம்

स्थावरा गृह्णाति । ......पश्चादेव प्रतितिष्ठति ।

நதிகளில், பெரிய மடுக்களில் தேங்கி நிற்கும் ஜலத்தைக் க்ரஹணம் செய்து வந்து மேற்கு புறத்தில் உபதானம் செய்ய வேண்டும். இந்த தீர்த்தம் ப்ரதிஷ்டையை (ஸ்திரத் தன்மையை) கொடுக்கக் கூடியது. ஆகவே இதன் உபதானத்திஞல் தனக்கும் தன்னைச் சேர்ந்தவர்களுக்கு நல்ல ப்ரதிஷ்டை ஏற்படுகிறது.

நான்காவது ஜலவிசேஷம்.

वहन्तीर्गृह्णाति । ......तस्मादुत्तरोऽर्ध ओजस्वितरः ।

நதிகளில் வேகமாக ப்ரவஹித்து ஓடும் ஜலத்தை க்ரஹித்து வந்து வடக்கு திக்கில் உபதானம் செய்ய வேண்டும்.

இந்த நதி ஜலம் ப்ரவஹிக்கும் போது வேகத்துடனும், பலத்துடனும், செல்கின்றது. அந்த வேகத்தில் ப்ரவாஹம் மத்தியில் வீழ்ந்த மரத்துண்டு முதலிவைகளை இழுத்து செல்கின்றது. (அடித்து செல்கின்றது) நடுவில் கல் முதலியவைகளால் தடைபடும் போது, மேலே எழும்பி குதித்து கொண்டு செல்கின்றது. இப்படி மேட்டிலும், பள்ளத்திலும் ப்ரவஹிக்கும் போது சப்தமிட்டுக் கொண்டு செல்கின்றது. இந்த ஜலங்கள் வடபுறத்தில் பலத்தை உண்டாக்குகிறது. இந்த காரணத்தினால் தான் [லோகத்தில் உள்ளவர்களுடைய சரீரத்தின் உத்தரபாகத்தில் பலம் மிகுந்துக் காணப்படுகிறது. பூஜை, ஹோமம் முதலியவைகளில் வலது கையில் தேஜஸ் முன்புக் கூறப்பட்டது. இடதுக் கையில் பாதப்ரக்ஷாளனம் முதலியவைகளில் பலம் பொருந்திய தன்மைக் கூறப்பட்டுள்ளது.]

5 வது ஜல விசேஷம் பற்றிக் கூறப்படுகிறது.

संभार्यं गृह्णाति । ......अस्यामेव प्रतितिष्ठति ।

வீடுகளில் குடம் முதலியவைகளில் சேமித்து வைக்கக் கூடிய ஜலங்களைக் க்ரஹித்து நான்கு திக்குகளின் நடுவில் (நடுப்ரதேசத்தில்) உபதானம் செய்யவேண்டும். இந்த ஜலங்களுக்கு கட (घट) சம்பந்தம் உள்ளதால், கடம் (घटः). மண்ணால்

ஆனதால் மண் நிறைந்த பூமியில் ப்ரதிஷ்டை அடைகிருன்.

6 வது ஜல விசேஷம் கூறப்படுகிறது.

पल्वल्या गृह्णाति । ......अमुष्यामेव प्रतितिष्ठति ।

எந்த ப்ரதேசத்தில் ஒரு சமயத்திலும் ஜலம் வற்ருதோ எப்பொழுதுமே திரவத்தோடு இருக்குமோ (ஈரமாகவே இருக்குமோ) நித்யமே ஜலம் பொருந்தியதாகவே இருக்கும். இது பல்வலம் என்று கூறப்படும். இதிலிருந்து ஜலத்தை க்ரஹித்து, நடுவில் ஸ்தாபிக்கப்பட்ட இஷ்டகைகளில் மேல் உபதானம் செய்யவேண்டும்.

இதனுல் [தேவலோகத்தில் ப்ரதிஷ்டையை (ஸ்திரத்தன்மையை) அடைந்தவனுக ஆகிருன்].

திக்குகளில் உபதானத்தின் பெருமையை சொல்கிருர்.

दिक्षूपदधाति । ......तदवरुन्धे ।

திக்குக்ளில் ஜலம் நிரம்பியது. ஜலத்தினுல் அன்னம் பெறப்படுகிறது. ஆகவே இந்த உபதானத்தினுல் அன்ன ஸம்ருத்தியை அடைகிருன்.

இவ்விதம் சயனம் செய்யப்பட்ட அக்நிக்கு ஆருணகேதுக சயனம் என்னும் பெயர் பற்றி

நிர்வசனம் பொருள் விளக்கப்படுகிறது) செய்யப் படுகிறது.

तं वा एतमरुणाः केतवः । ......तस्मादारुण केतुकः ।

இந்த அக்நியை அருணர்கள், கேதுக்கள், வாதரசனர்கள் இந்த மூன்று ரிஷிகள் சயனம் செய்ததால் आरुण केतुक चयनम् என்று பெயர். வாத ரசனர்களும் चयनम् செய்துள்ளனர், ஆனாலும் முந் திய இருவர்கள் முக்யமானவர்கள். அதனால் இவர்களுடைய பெயரால் அழைக்கப்படுகிறது. இவ்விஷயத்தைப்பற்றி சாகாந்தரத்திலுள்ள ரிக் (உதாரணமாக கொடுக்கப்படுகிறது) உதாகரிக்கப் படுகிறது.

केतवो अरुणासश्च ।......समाहितासोसहस्रधाय समिति ।

இதன் பொருள் 'ஆபமாபாம்' என்னும் அனு வாகத்தில் விவரணம் கூறப்பட்டுள்ளதைக் கவனிக்க. இந்த சயனத்தை அறிந்தவர்கள் பெருமையும் கூறப்படுகிறது.

शतशश्चैव सहस्रशश्च प्रतितिष्ठति ।.....य उचैतमेवंवेद ।

எவர் அக்நி சயனத்தை அனுஷ்டிக்கிறாரோ இந்த விஷயத்தை நன்கு அறிகிறாரோ அவர்

நூற்றுக்கணக்காகவும், ஆயிரக்கணக்காகவும் ஸ்திரத்தன்மையை அடைவர்.

அனுவாகம்—25

जानुदघ्नीं......एवं वेद ।

ஜலரூப இஷ்டகோபதானம் கூறப்பட்டுள்ளது. புஷ்கரபர்ணுதி உபதானம் விவரிக்கப்படுகிறது. உத்தரவேதியில் பள்ளம் (முழங்காலளவு) எடுத்தது பற்றி முன்பு சொல்லப்பட்டுள்ளது. அதனுடைய மஹிமை கூறப்படுகிறது.

जानुदघ्नीम् उत्तरवेदीं खात्वा......अपाꣳसर्वत्वाय ।

முழங்காலளவு பள்ளம் எடுத்து அதில் கணுக்காலளவு ஜல பூரணம் செய்தது. அந்த பள்ளம் முழுவதும் ஜலம் நிறம்புகிறது. யாவுமே ஜலம் நிரம்பி செழுமையாக இருக்கும்.

पुष्करपर्णꣳ रुक्मं पुरुषमित्युपदधाति......तदवरुन्धे ।

தாமரை இலை மிகவும் பவித்ரமானது. ஆகவே தபோ ரூபமானது. ருக்மம் - (தங்கம்) அக்நியில் உருக்க பட்டாலும் குறைவு பெறுது.

(நாசத்தை அடையாது) சத்யமானது. தங்கமயம் புருஷ உபதானம் இம்மூன்றுகளையும் உபதானம் செய்வதால் சகல விதமான ஸாரமும் அடைய பெற்றதாகிறது. 1) தப்ஸ் 2) நாசமின்மை 3. அம்ருதத்வம், இவைகள் மூன்றும் அடையபெற்ற தாகின்றன.

கூர்மோபதானம் விதிக்கப்படுகிறது.

कूर्ममुपदधाति......स्वर्गस्य लोकस्य समष्टयै ।

கூர்மமானது ஜலத்தினுடைய ஸார பூதம்-ஆகவே அதை உபதானம் செய்வதால் ஜலத்தின் ஸாராம்சத்தை அடைகிருன். மேலும் ஸ்வர்கத்தையும் அடைகிருன்.

இதற்கு பிறகு அபீஷ்டகைளின் உபதானம். முன்பு அபீஷ்டகா உபதானம் ப்ரகாரம் கூறப்பட்டுள்ளது. அதை இப்பொழுது ஞாபகப்படுத்தும் முறையில் சிறிது கூறப்படுகிறது.

आपमापामपस्सर्वाः......वाय्वश्वा रश्मिपतयः ।

இதன் விரிவான பொருள் முதல் அனுவாகத்திலேயே கூறப்பட்டுள்ளது. அடுத்தபடியாக லோகம் ப்ரண என்றும் இஷ்டகையின் உபதான மந்த்ரம் உபதேசிக்கப்படுகிறது.

लोकं पृणछिद्रं पृण......यास्तिस्रः परमजाः ।

ஹே லோகம்ப்ருணர் எனும் இஷ்டகையே, நீரில் முன்பு உபதானம் செய்யப்பட்டுள்ளது. அங்குள்ள இடைவெளிகளை நிரப்பவேண்டும். லோகம் ப்ருணைகள் மூன்று. அவை உத்க்ருஷ்டமானவை, மேன்மையுடன் உண்டானவைகள். இந்த ஆருணகேதுக சயனம் ஐந்து சிதிகளோடு கூடியது.

முதல் சிதி (சயனம்) (அடுக்குதல்)

மந்த்ரேஷ்டகைகள்	118
லோகம் ப்ருணு இஷ்டகைகள்	82
	200

இரண்டாவது சிதியில் (சயனம்)

மந்த்ரேஷ்டகைகள்	70
லோகம் ப்ருணு இஷ்டகைகள்	130
	200

மூன்ருவதில் மந்த்ரேஷ்டகைகள்	82
லோகம் ப்ருணு	118
	200

நான்காவதில் மந்த்ரேஷ்டகைகள்	61
லோகம் ப்ருணு	139
	200

ஐந்தாவதில் மந்த்ரேஷ்டகைகள்	29
லோகம் ப்ருணு	171
	200

மொத்தம் ஆயிரம் இஷ்டகைகள்

மந்த்ரேஷ்டகைகள்	360
லோகம் ப்ருணைகள்	640
	1000

ப்ரதம, மத்யம, உத்தம ஸ்தானங்களில் உப தானம் செய்யப்படுகின்றன. அதாவது ப்ரதம சிதிக்கு பிறகு லோகம் ப்ருணோபதானம் (ப்ருண என்ற இஷ்டகையை வைத்தல்) ப்ரதமம், இரண் டாவது, மூன்ருவது, நான்காவது சிதிகளுக்கு பிறகு உபதானம் செய்யப்படுவது மத்யமம், ஐந்தாவது சிதிக்கு பிறகு உபதானம் செய்யப்படு வது உத்தமம். இவ்விதமாக சித்யரூபாக்நி பூர்ணதயை அடைகிருர்.

इन्द्रघोषा वो वसुभिरेवाह्वेति ।

இத்யாதி மந்த்ரங்கள் முன்பே உபதேசிக்கப் பட்டுள்ளன. அவைகளின் உபதான விதியாக மறுபடி ப்ரதர்சனம் செய்யப்படுகிறது. அந்தந்த மந்த்ரங்களால் உபதானம் செய்ய வேண்டும். இவை முன்பே விவரிக்கப்பட்டுள்ளதை கவனிக்க

வும். சிதிகளுடைய எண்ணிக்கையைப் பற்றி கூறப்படுகிறது.

पञ्च चितय उपदधाति । ......तच्चिनुते ।

அக்நி ஐந்து விதமானதாக உள்ளதால் ஐந்து சிதிகள் பொருத்தமானவையல்லவா. அக்நியின் பாஞ்ச வித்யமாவது 1. ஆஹவநீயம் 2. கார்ஹ பத்யம், 3. தக்ஷிணுக்நி, 4. ஸப்யாக்நி, 5. ஆக வனீயாக்நி, பஞ்சவிதமான அக்நிகள், பஞ்சசிதி களால்-நன்கு அடுக்கப்பட்டவர்களாக ஆனுர்கள்.

लोकंपृणया द्वितीयामुपदधाति । ......परोरजाः पादः ।

இரண்டாவதாக சயனம் செய்யப்படும் ஸர்வ பூரகமான லோகம்ப்ருணுச்யனம், சயனத்தால் (சிதியில்) பூர்த்தியாகாத ப்ரதேசங்களை நிரப்புவ தால் லோகத்தில் எல்லாப் ப்ரதேசத்தையும் வியாபித்துள்ள விராட்ஸ்வரூப துல்யமாய் உள்ளதால், இந்த லோகம்ப்ருணு இஷ்டகை விராட்ரூபியாக ஆகிறுர்.

அந்த விராட் மூர்த்தி பஞ்சபாதம் பொருந்தி யவர். ப்ருதிவீ, அந்தரிக்ஷம், தேவலோகம், திக்குகள் ஆகிய நான்கு பாதங்களைக் காட்டி லும் மேலான, ரஜோகுணத்மான ஸம்ஸார ப்ரபஞ் சத்திற்கு அப்பாற்பட்ட சுத்த சைதன்ய ரூப

மானது ப்ரஹ்ம ஸ்வரூபம் ஐந்தாவது பாதம்' ஆகவே இந்த இஷ்டகை மிகவும் பெருமை வாய்ந்தது என்பது தாத்பர்யம். இதை அனுஷ்டித்தவருக்கும், இதை அறிந்தவர்க்கும் பலம் கூறப்படுகிறது.

विराज्येव प्रतितिष्ठति......य उचैनमेवं वेद ।

இவ்விருவரும் (அனுஷ்டித்தவர், அறிந்தவர்) விராட் ஸ்வரூப ப்ரஹ்ம ஸ்வரூபத்தில் ப்ரதிஷ்டையை (ஸ்திரதன்மையை) அடைவர்.

அனுவாகம்—26

अग्नि......एवं वेद ।

முன் அனுவாகத்தில் புஷ்கர பர்ணுதீ உபதானம் சொல்லப்பட்டது. இந்த அனுவாகத்தில் பல விசேஷங்களும், வ்ரத விசேஷங்களும் நியமங்களும் உபதேசிக்கப்படுகிறது. மேலும் முன்பு (கூறப்யட்டுள்ள) விதிக்கப்பட்டுள்ள பதார்த்தங்களை (விஷயத்தை) அனுவாதம் செய்து சில விசேஷங்கள் சொல்லப்படுகின்றன.

अग्निं प्रणीयोपसमाधाय ।......सर्वेषु यज्ञक्रतुष्विति ।

இவை योऽपां पुष्पं वेद

எனும் அனுவாகத்தில் வ்யாக்யானம் செய்யப் பட்டுள்ளது.

अथ हस्माहारुणस्स्वायंभुवः । .... सावित्रं घा एतेषां

वीर्याणि ।

ஸ்வயம்பு முனிபுத்ரரான அருணர் எனும் முனிவர் இந்த ஆருண கேதுக சயனம் ஸ்வதந்தர மாக ஒரு க்ரதுக்கு (யாகத்திற்கு) அங்கமாக ஆகமுடியாது. ஏனெனில் ஸாவித்ர, நாசிகேத, சாதுர் ஹோத்ரிய, வைச்வஸ்ருஜ உபானுவாக்ய சயனங்களில் ஒன்றை ஒன்று சார்ந்துள்ளன. அதாவது ஸாவித்ர சயன தர்மம், அடுத்த சயனத் திற்கும் இதே போல் அதனதன் தர்ம விசேஷம் மற்றவைக்கும் அனுஷங்கம் செய்யப்படுகிறது. ஆகவே, இந்த ஆருண கேதுக சயனம் வளர யாவுமே ஸாவித்ர சயனம் என்றே கொள்ளல் ஆகும். ஆகவே இந்த ஆருண கேதுக சயனம் ஸ்வதந்த்ரமாய் அந்த ஸ்வபாவத்தை அடையாது என்று அபிப்ராயம் கூறுவர். இது ஸரியல்ல என்று ப்ரஹ்மவாதிகள் கண்டித்து, இது ஸ்வதந் தரமானது என்று ஸித்தாந்தம் செய்கின்றனர்.

ஏனெனில் அந்தந்த சயனத்திற்கும் பின்னபின்ன மான பலன்கள் கூறப்பட்டுள்ளன.

यश्चाग्निं चिनुते । सवित्रमग्निं चिन्वानः ।...

ह्यस्मारुणकेतुक मग्निं चिन्वान इति ।

ஸத்ராங்கமாக செய்யப்படும் சயனம் ஸத்ரியம் எனப்படும். ஸத்ரிய சயனத்திற்கு ஸம்வத்ஸர தேவதாத்மக பலம்.

ஸாவித்ர சயனத்திற்கு ஆதித்யாத்மக பலம்.

நாசிகேத சயனத்திற்கு ப்ராண தேவதாத்மக ப்ராப்தி (வாயுதேவதா).

சாதுர் ஹோத்ரிய சயனத்திற்கு வேதபுருஷ ப்ராப்தி.

வைவஸ்ருஜ	,,	ஹிரண்யகர்ப்ப ப்ராப்தி.
உபானுவாக்ய	,,	மஹானுபாவ: ஸர்வ லோக ப்ராப்தி.
ஆருண கேதுக	,,	ஆதித்யாத்ம ப்ராப்தி.

ஆகவே ஆருணகேதுக சயனம் ஸ்வதந்த்ர மானதே.

वृषा वा अग्निः ।... तस्मात्तानुपव्ययः ।

மேலும் இந்த சயனத்தில் ஸாவித்ர சயன தர்மத்தை சேர்த்துக் கொண்டால் இதை அனுஷ்டிக்கும் யஜமானனுக்கு கெடுதல் ஸம்பவிக்கும். யக்ஞமும் கெட்டுவிடும்.

सोत्तरवेदिषु क्रतुषु चिन्वीत ।...क्षीयते ।

உத்தரவேதி ஸஹிதமான பசுபந்த க்ரதுக்களில் இந்த சயனம் அங்கமாக அனுஷ்டானம் செய்யவேண்டும். மேலும் இந்த சயனம் குறிப்பிட்ட அதாவது பின்ன பின்ன காமனைகளுக்காக அனுஷ்டிக்கலாம் என்று விதிக்கப்பட்டிருக்கிறது.

प्रजाकामश्चिन्वीत ।.... प्रजावान् भवति । य एवं वेद ।

நல்ல ப்ரஜையை விரும்புவன் இதை அனுஷ்டிக்க வேண்டும்.

அக்நி, ப்ரஜைகள் இவ்விருவரும் ப்ரஜாபதியால் ஸ்ருஷ்டிக்கப்பட்டவர்கள். ஆகவே இந்த அக்நி சயனம் ப்ரஜாரூப பலத்தை அளிக்கும். இந்த சயனத்தை அறிந்தவர்க்கும் இந்த ப்ரஜாரூப பலத்தை அளிக்கும்.

காமனை (விருப்பம்)

पशुकामश्चिन्वीत । .... य एवं वेद ।

பசுக்களை விரும்புபவன் இந்த சயனம் செய்ய வேண்டும். இதனை அனுஷ்டிப்பவனுக்கும் அறிந்தவனுக்கும் பசு சம்ருத்தி கிடைக்கும். ஏனெனில் தாகத்தோடு கூடிய பசுக்கள் ஆங்காங்கு தேடி ஜலம் இருக்குமிடத்தை குறிப்பாய் உணர்ந்து தாகம் தீர்த்துக் கொள்கிறது. ஆகவே இந்த அபீஷ்டக உபதானத்தினுல் ஜல சம்மந்தம் உண்டு.

காமனை (விருப்பம்)

वृष्टिकामश्चिन्वीत । ..... य एवं वेद ।

மழை விரும்புபவன் இந்த சயனம் செய்தால் நன்கு மழை பொழியும். மழைக்கும், ஜலத்திற்கும் சம்மந்தம் ப்ரஸித்தம். இந்த உபதானம் ஜலமயமானதாம். இதை அனுஷ்டிப்பவர் மற்றும் அறிந்தவர் ஆகிய இருவரும் பயனடைவர்.

காமனை (விருப்பம்)

आमयावीश्चिन्वीत । .... सर्वमायुरेति ।

ரோக நிவர்த்தியை (ஆரோக்யத்தை + வியாதி நிவர்த்தியை) விரும்புபவன் இந்த அக்னி சயனத்தை அனுஷ்டிக்க வேண்டும். ஜலம், தாபம் எல்லாவற்றையும் போக்கிவிடும். பாபம், தாபம், ரோகதாபம், யாவற்றையும் போக்கும் மேலான

மருந்தாகும். ஆகவே முன்போல் இருவர்களும் ரோக தாபத்திலிருந்து விடுபட்டு நீண்ட ஆயுளை பெறுவர்.

காமனா (விருப்பம்)

अभिचरंश्चिन्वीत । .... स्तृणुत एतम् ।

சத்ரு நிவர்த்தியை விரும்புபவன் இந்த சயனத்தை அனுஷ்டிக்கலாம். ஜலமானது வஜ்ர ஸ்வரூபம். ஆகவே வஜ்ராயுதம் போன்று சத்ருக்களை வீழத்தி விடுகிறது. அதனால்தான் ஸந்த்யா வந்தனத்தில் கொடுக்கப்படும் அர்க்ய ஜலமானது ஜ்வராயுதமாக மாறி சூரியனோடு போரிடும் மந்தேஹர் என்னும் அசுரர்களை வீழ்த்தி சூரியனுக்கு உதவி செய்கிறது என்று ஸ்வாத்யாய ப்ராம்மணத்தில், ஸந்த்யாவிதி ப்ரகரணத்தில் கூறப்பட்டுள்ளது.]

6, 7, 8, 9 ரிக்குகள் (காமனாகள் - விருப்பம்)

तेजस्कामो यशस्कामः ....तदवरुन्धे ।

தேஜஸ்ஸை விரும்புபவர் மேலும் யசஸ், ப்ரம்மவர்ச்சஸ், ஸ்வர்க்கம் [இவைகளை விரும்புபவர் இந்த சயனத்தால் பெறுவர். ஏன் ? இது மட்டுமா ? இன்னும் உத்தமமான எல்லா விதத்

தையும் அடைவர். தர்ம விருத்தமில்லாத எல்லா மேலான நன்மைகளையும் இந்த சயனத்தினால் பெறமுடியும். இந்த சயனத்தை அனுஷ்டிப்பவர் களுக்கு நியம விசேஷம் சில கூறப்படுகிறது.

तस्यै तद्व्रतम् । ......अमृतस्यान्तरित्यै ।

இதை அனுஷ்டித்தவர் க்ராமாந்தரம் செல்லும் போது (வெளியில் செல்லும் போது) மழை பெய்தால் நனைந்து விடுவோமோ! என்று ஓடக் கூடாது. ஏனெனில் அம்ருதரூபமான இந்த ஜலம் சம்பந்தம் தவிர்க்கப்பட்டு விடுவதால், அம்ருத சுகத்தை அளிக்கும் ஸ்வர்க்க ப்ராப்தி தடைபப்பட்டுவிடும்.

नाप्सु मूत्रपुरीषंकुर्यात्....एतस्याग्नेरनतिदाहाय ।

[ஜலத்தில், ஜலமல விஸர்ஜனம் செய்யக் கூடாது. நிஷ்டிவனம் செய்யக்கூடாது (எச்சில் துப்பக்கூடாது) வஸ்த்ரம் இல்லாமல் ஸ்நாநம் செய்யக்கூடாது.] ஏனெனில் தீர்த்தத்தில் ஸூக்ஷ்மமாக அக்நி இருக்கிறார். அவர் இந்த தவறுகளை செய்பவனை கொளுத்தி விடுவார். ஆகவே இவ்விதம் நேராமல் இருக்க இந்த நியமத்தை கடைபிடிக்கவேண்டும். பொது வாகவே யாவரும் மேலே குறிப்பிட்ட தவறுகளை

செய்யக் கூடாது என்று பொதுவிதி உள்ளது. அப்படி செய்பவர்களுக்கு ப்ராயசித்தமும் உள்ளது. அப்படியிருக்க அக்நி சயனத்தை செய்பவர்க்கு விசேஷமாக கூறப்பட்ட காரணம், எல்லோருக்கும் பொதுவாக கூறப்பட்ட ப்ராய சித்தம் போதாது. விசேஷமாக ச்ரௌத ப்ராய சித்தம் செய்து கொள்ளவேண்டும்.

மேலும் சில நியமங்கள் கூறப்படுகின்றன.

न पुष्करपर्णानि हिरण्यं वाऽधि तिष्ठेत् .... एतस्याग्नेः

अनभ्यारोहाय ।

[தாமரை இலையிலும், தங்கத்திலும் கால் வைத்து நிற்கக்கூடாது.] ஏனெனில் அக்நி ரூப மான அவைகளில் காலால் ஏறி நின்ற அபராதம் ஏற்படும். அந்த அபராதம் நேராமலிருக்க இவ் விதி கூறப்பட்டுள்ளது. மேலும் நியமம்.

न कूर्मस्याश्नीयात् । ..... य उ चैनमेवं वेद ।

[கூர்மத்தின் மாமிசத்தையும் மேலும் ஜல சரங்களான (நீரில் வாழும் ப்ராணிகள் मत्स्य (மீன்) முதலியவைகளேயும் சாப்பிடக் கூடாது] இப்படி நியமமாக இருந்தால் ஜலசரப்ராணிகளிலிட் மிருந்து இவனுக்கு ஹிம்ஸை ஏற்படாது.

ஜலத்திஞலும் ஹிம்ஸை ஏற்படாது. ஜலத்தில் மரணம் ஏற்படாது என்று தாத்பர்யம். இந்த பல விசேஷங்கள், அனுஷ்டிப்பவர்களுக்கும், அறிந்தவர்களுக்கும் ஸித்திக்கின்றன.

அனுவாகம்—27

इमानुकं....देवीरिहाहिता ।

மூன்று இஷ்டிகைகளின் மந்த்ரம்.

इमानुकं भुवना सीषधेम । इन्द्रश्च विश्वे च देवाः ।

இந்திரன், விச்வேதேவர்கள் நாங்கள் சயனம் செய்பவர்கள். இந்த புவனங்களுக்கு ஸுகத்தை உண்டுபண்ணுவோமாக.

यज्ञञ्च नस्तन्वञ्च....सीषधातु ।

இந்த இந்த்ரன் ஆதித்யர்களோடு கூடியவர் களுக்காக இந்த யக்ஞத்தை நிறைவேற்றி வைப்பார்களாக.

आदित्यैरिन्द्रस्सगणो मरुद्भिः । .... तनूनाम् ।

ஆதித்யர்கள், மருத்துக்கள் இவர்களோடு கூடிய இத்தகைய கணங்களோடு கூடிய இந்த்ரன் நம்முடைய சரீரத்தை ரக்ஷிக்கட்டும்.

க்ஷ மணிகள் எனும் 17 இஷ்டகா மந்த்ரங்கள்.

माछ्वस्व प्रच्छ्वस्व । .... प्रतिमुञ्चस्व स्वां पुरम् ।

ஜனன மரண சக்ரவடிவமான இந்த ஸம்ஸாரத்தில் உழலும் ஹே யஜமானனே, அடிக்கடி (மேலும் மேலும்) ஜனன மரணத்தை அடைய வேண்டாம். மேலும் ஸுகத்தை முதலில் உடையதும் (தோற்றுவிப்பதும்) முடிவில் துக்கத்தையே அளிப்பதுமான இந்த ப்ரபஞ்சமான ப்ரஹ்மாண்டத்தை அடிக்கடி (மேலும் மேலும்) அடைய வேண்டாம். அதாவது அடையாமல் இருக்க முயற்சி செல்வாயாக என்பது தாத்பர்யம். ஏனெனில் நீ முன்பு அகண்ட ஸ்வரூபமாக இருந்தாய், அதாவது பரமாத்மாவாகத்தான் இருந்தாய். எனக்கு புரியாத காரண சக்தியினுல் ஆண்டி (ஸம்ஸாரி ஜீவனுக) ஆனவன்.

मरीचयस्स्वायंभुवाः । .... मा च ते क्षयास्म तीरिषत् ।

ஸூரிய மண்டல மத்தியவர்த்தியான பரமாத்மாவினுடைய ரச்மிகள் (கிரணங்கள்) யஜமானனே உனக்கு பரமாத்மாவை உபஸரிக்கத் தகுந்த நல்ல சரீரங்களை உண்டு பண்ணட்டும். அத்தகைய தேஹத்துடன் ஸம்சார சக்கரத்திலிருந்து விடுபட்டு பரமாத்ம ஸ்வருபத்தை

அடைந்து விளங்குவாய். இந்த பெருமை அழியாமல் சாச்வதமாக இருக்கட்டும்.

उत्तिष्ठतमास्वन्त । .... सूर्येण सयुजोषसः ।

ஹே ரித்விக்குகளே, நீங்கள் சோம்பலில்லாமலும் உற்சாகத்துடனும் யக்ஞத்திற்கு வேண்டிய ஹவிராதிகளை சேர்த்துக்கொண்டும், யஜமானர் செய்கின்ற யாகங்களில் ஸோமபானத்தினால் திருப்தி உடையவர்களாகவும், சூர்யனுக்கு சமானமான ப்ரீதிகளுடனும் விளங்குவீர்களாக.

युवासुवासाः

இந்த வாக்யம் யக்ஞங்களில் யூபஸ்தம்பத்திற்கு வஸ்த்ர பரிதானம் செய்வதற்கு உள்ள மந்த்ரம். அந்த மந்த்ரத்தின் ப்ரதீகம். (ஆரம்பம்) மந்த்ர ஸ்வரூபம்.

युवासुवासाः परिवीत आगात् । .... देवयन्तः ।

மூன்ருவது அஷ்டகம் ஆருவது ப்ரச்னத்தில் உள்ளது.

எவ்வாறு உலகில் நல்ல வஸ்தரம் அணிந்த வாலிபன் வருகிருனே, அதுபோல் இந்த யூபம் தர்ப்பை கயிற்ருல் சுற்றப்பட்டு இந்த கர்மாவில்

வந்துள்ளது. அதே யூபம் இக்கர்மாவில் உண் டாக்கப்பட்டு தினமும் கொண்டாடத் தகுந்ததாக ஆகிறது. அந்த யூபத்தை புத்திசாலியும், வித் வான்களுமான யஜமானர் முதலியவர்கள் துதி கத்தகுந்த குணங்களால் மேல் நோக்கியதாகச் செய்கிறார்கள். ஸ்வதந்தர புத்தியுள்ளவர்களும், தங்கள் மனதின் மூலம் தேவர்களை அடைய விரும்புவர்களுமான அந்த யஜமானர்கள் யூபத்தை புகழ்கிறார்கள்.

अष्टाचक्रा नवद्वारा। .... स्वर्गो लोको ज्योतिषाऽऽवृतः।

இந்த்ராதி தேவர்களுடைய "பூ:" எனும் சரீர மானது ஒன்றின்மேல் ஒன்றான (சுற்றிலுமுள்ள) எட்டு ஆவரணங்களை உடையது. அவைகளாவன ... த்வக்கு (தோல்) 2. அஸ்ருக்கு 3. மாம்ஸம் 4. மேதஸ் (கொழுப்பு) 5. அஸ்தி 6. மஜ்ஜா (ஊநதன்) 7. சுக்ரம் (ரேதஸ்) 8. ஓஜஸ் (பலம்) இவைகளால் மறைக்கப்பட்டது. "अष्टाचक्रा" மேலும் சிர: ப்ரதேசத்தில் உள்ள ஏழு துவாரங் கள் அதோ பாகத்தில் உள்ள இரண்டு த்வாரங்கள் ஆக 9 துவாரங்கள் உள்ளது. இந்த சரீரம் கர்ம கதியினால் தான் போக்க (அழிக்க) முடியும். மற்ற வைகளாலும் இதை அழிக்க முடியாது. இந்த சரீரத்தில் ஸ்வர்ணமயமான ஒரு கோசம் உள்ளது. இது புண்டரீக (ஹ்ருதய) அந்தர்வர்த்தியான உத்தமமான ப்ரதேசம், ஸுகமயமான ஸ்வயம்

ப்ரகாசமான ஸ்வர்க்கதுல்யமான லோகம். இத்தகைய சரீரம் ப்ரகாச ஸ்வரூபமான ஜீவாத்மாவால் வியாபிக்கப்பட்டது.

यो वै तां ब्रह्मणो वेद । .... आयुः कीर्तिं प्रजां ददुः ।

எவன் இந்த புரியை (சரீரத்தை) ஸத்யம், ஞானம், அநந்தம், ப்ரஹ்ம, என்று உபநிஷத்தால் பிரதிபாதனம் (விளக்குதல்) செய்யப்படுகிற ஆனந்த ஸ்வரூபியான பரமாத்மா ஸ்வரூபத்தோடு ஸம்பந்தமுள்ளது என்பதை அறிகிருனே அந்த மஹானுக்கு பரமாத்மாவும், ப்ரஜாபதியும் ஆயுராரோக்யாதிகளைக் கொடுத்து அனுக்ரஹம் புரிகின்றனர்.

विभ्राजमानां हरिणीम् । .... विवेशापराजिता ।

ப்ரஜாபதியானவர் பிரகாசிக்கின்றதும் பாபத்தைப் போக்குவதை ஸ்வபாவமாகக் கொண்டதும் ஜகத்தை ஸ்ருஷ்டித்தல் முதலிய கீர்த்தியை உடையதும், ஸ்வர்ணமயமானதும், பராஜயமில்லாததுமான இந்த சரீரத்திற்குள் ப்ரவேசித்துள்ளார்.

पराङेत्यज्यामयी । .... विद्वान्देवासुरानुभयान् ।

பரப்ரஹ்மத்தை அறிந்தவன் பரப்ரஹ்ம ஸ்வரூபமாகவே ஆகிவிடுகிருன். ब्रह्मवित् ब्रह्मैवभवति। என்பது உபநிஷத்தின் முடிவு (ஸித்தாந்தம்). இன்மையிலும் மறுமையிலும் ரோகம்—அபம்ருத்யு முதலியவை அணுகா, இவைகளை உண்டு பண்ணும் கர்மாக்களும் இவனை கட்டாது. (இவ னுக்கு கர்ம ஸம்பந்தம் ஏற்படாது). ஏனெனில் இவனுக்கு தேஹாபிமானமே கிடையாதல்லவா. ஆகவே இவன் மறுபிறவி இல்லாதவனுக ப்ரம்ம ஸ்வரூபத்தை அடைகிருன்.

यत्कुमारीमन्द्रयते । .... अग्निस्तदनुवेधति ।

விவாஹம் ஆகாத குமாரி, யுவதி, இவர்களெல் லாம் காலதேசவர்தமான சூழ்நிலேகள் காரணமாக தவறுதலான எண்ணங்களுக்கு இடம் கொடுத்த தால் ஏற்பட்ட பாபத்தையும், பதிவ்ரதாஸ்த்ரீ நீண்ட நாள் பர்தாவின் அசலூர் வாஸத்தால் பிரிவினுல் தேகத்யாகம் செய்துவிடலாமா? எனும் எண்ணத்தால் ஏற்படும் பாபத்தையும், (இத்த கைய பாபங்கள் தானுதிகளால் நிவர்த்தி ஆகாது) அத்தகைய பாபத்தையும் இந்த वारुण केतुक चयनम् - நிவர்த்தி செய்து விடுகிறது.

अश्रृता सश्शृतासश्च । .... इन्द्रमग्निञ्च ये विदुः ।

பக்குவப்படாத ''சித்''தை (மனதை) உடைய வர்களும், பக்குவப்பட்ட மனதை உடையவர்

களுமான யஜ்வாக்களோ (யாகம் செய்தவர் களோ), யாகம் செய்யாதவர்களோ இருப்பர். இவர்களுக்குள் எவர் ஸர்வேச்வர்யம் பொருந்திய பரமாத்மாத்மாவையும், பரமாத்ம பாவத்தை அடைவதற்கு சாதகமான இந்த அக்நி பகவானை யும் நன்கு அறிகிருரோ அந்த ஞானிகள் விரும்பி யபடி ஸ்வர்கத்தையோ, மோக்ஷத்தையோ அடை வார்கள். அதாவது சித்தசுத்தித்வாரா ஸத்குரு மூலம் ஞானத்தை அடைந்து மோக்ஷ ஸாம்ராஜ் யத்தை பெறுவார்கள்.

सिकता इवसंयन्ति । .... ऋषिभिरदात् पृश्निभिः ।

மணல், வாயு வேகத்தால் கடத்தி செல்லப் பட்டு அவ்வப்போது ஒன்ருக சேர்கிறதோ (குவிக் கப்படுகிறதோ), குவிக்கப்பட்டு ஒன்ருக சேர்கி றதோ அதுபோல ஜீவர்கள் அந்தந்த புண்ய வசத் தால் இந்த லோகத்திலோ அந்த லோகத்திலோ (ஸ்வர்க்கத்திலோ) சேர்கின்றனர். அவர்களுக்கு அனுக்ரஹம் புரிவதற்காக பரிசுத்தமான (வெண்மையான) தத்வக்ஞானத்தை உபதேசிக் கும் மஹா வாக்யங்களால் பரமேச்வரன் ஞானத் தைக் கொடுக்கிருர்.

अपेतवीतविच सर्प तातः । .... यमोददातु अवसानमस्मै ।

இந்த பூமி முழுவதும் யம தேவருடையது. இதைப் பாதுகாப்பதற்கு யம தேவர் தன்னுடைய தூதர்களை நியமித்துள்ளார். ஆகவே இந்த ப்ரதேசத்தில் செய்யும் யக்ஞாதி புண்ய கார்யங்களையெல்லாம் செய்யுமுன்பு அவரிடம் உத்தரவு பெற்றுச் செய்ய வேண்டும். அந்த முறையில் இந்த மந்திரம் இவ்விடம் உபதேசிக்கப்படுகிறது.

ஹே யமதூதர்களே, புராதனமாகவும், நூதனமாகவும் நியமிக்கப்பட்டுள்ள நீங்கள் இந்த ப்ரதேசத்தை விட்டு வெகு தூரம் விலகிச் செல்லுங்கள். ஜலேஷ்டகைகளால் அஹோராத்ர சயனம் செய்வதற்காக இந்த ப்ரதேசத்தை யம தேவர் எங்கள் யஜமானருக்கு கொடுக்க வேண்டும். அவரால் கொடுக்கப்பட்ட இந்த இடத்தில் சயனாதிகளைச் செய்வோம்.

नृ मुणन्तु नृपात्वयः । .... जारिणीषुच ये हिताः ।

பிறருக்கு துன்பத்தை கொடுக்கின்ற மனிதன் இந்த ப்ரதேசத்தை விட்டு விலகிச் செல்லட்டும். இவர்களின் ஸ்வாமியும் விலகிச் சென்று யஜமானர்களான எங்களை பாதுகாக்கட்டும், இடையூறு புரியாமல் இருப்பதே பாதுகாப்பாக ஆகிறது. கர்மயோக்யதை அற்ற பாபத்தினால் பிறந்தவர்களான மனிதர்களும் நல்ல வம்சத்தில் ஜனித்திருந்தும் குருட்டுத்தன்மை முதலிய காரணத்தால்

கர்ம யோக்யதையற்றவர்களும் விலகிச் செல்லட்டும். தவறுதலான முறையில் ஜனித்தவர்களும் விலகிச் செல்லட்டும்.

ऽसः पीता आऽऽपीताः । .... युवेऽहं यमराजगान् ।

அபக்ஷ்ய பக்ஷணம், அபேய பானம் செய்பவர்களும், சாஸ்திர விதிமுறையின்றி அக்நியில் ஹோமம் செய்யப்பட்டவைகளும், அவ்விதம் ஹோமம் செய்பவனும், புத்ர பௌத்ர, தலை முறையாக நல்லது செய்யாதவர்களும் இவ்விடத்தை விட்டு வெளியே செல்லட்டும். யம தேவரால் தண்டிக்கத் தக்கவர்களும் இந்த இடத்தை விட்டு செல்லட்டும்.

சாகாந்தர மந்த்ரத்தின் ஆரம்பம் கூறப்படுகிறது.

शतमिन्नुशरदः ।

இந்த மந்த்ரம் உபநயன ஹோமத்திலும் வருகிறது. ஹே தேவர்களே, எங்களுடைய ஸந்ததிகள் நூற்றுக்கணக்கான வருஷங்கள் வாழ வேண்டும். இது கூட குறைவானதுதான். பின் எவ்வளவு ஆயுஸ் தேவை? அது கூறப்பட்டுள்ளது. என் புத்ர பௌத்ராதி ஸந்ததிகள் புத்ர, பௌத்ரர்களை அடைந்து குடு குடு கிழவர்களாக

ஆகி (ஆனால் ஆரோக்யத்துடன்) நடுவில் அபம்ருத்யுவினால் பீடிக்கப்படாமல் நீண்ட நாள் நல்வாழ்வு வாழவேண்டும். அவ்விதம் அனுக்ரஹம் செய்வீர்களாக.

शतमिन्नु शरदो अन्तिदेवा यत्रा नश्चक्रा जरसं तनूनाम् ।

पुत्रासो यत्र पितरो भवन्ति मा नो मध्या रीरिषता-

युर्गन्तोः ॥

अदो यद्ब्रह्म विलबम् । ....मरुताञ्च विहायसाम् ।

ஜகத் காரணரூபமான ப்ரப்ரம்ஹந்தான் (பரமாத்மாதான்) பித்ருக்கள், யமர், வருணன், அச்விநி தேவர்கள், அக்நி, மருத், ஆகாசத்தில் ஸஞ்சரிக்கும் யக்ஷன், கந்தர்வர் என்று எல்லா வஸ்துக்களுக்குமே ஆலம்பனமானவர் (தாங்குபவர்) யாவுமே அவர் ஆதீனம் என்று தாத்பர்யம்.

कामप्रयवणं मे अस्तु । .... पुत्रानापो देवीरिहाहिता ।

நான் என்னுடைய அபீஷ்டங்களை நன்கு அடைய வேண்டும். பரப்ரஹ்மமானது எல்லா

அபீஷ்டகாகளேயும் அடைவிக்க வேண்டும். ஏனெனில் நானே அந்த ஸநாதனமான ப்ரஹ்ம வஸ்துதானே (முக்யமாக எண்ணவேண்டும்). நான் எப்பொழுதும் அந்த பரமாத்மா விஷயமான சப்தங்களேயே கேட்டுக் கொண்டிருக்க வேண்டும்.

ஜல ப்ரார்த்தனே-ஹே ஜலங்களே, பிரகாச மான அபீஷ்டகா ரூபிகளான நீங்கள் இந்த கர்மா வில் (அன்வயித்து) ஸத்புத்ரர்களே அளித்து ரக்ஷிக்க வேண்டும்.

அனுவாகம்—28

विशीर्ष्णी.....सन्दृशः ।

இரண்டு இஷ்டகா மந்த்ரங்கள் உபதேசிக்கப் படுகின்றன.

विशीर्ष्णीं गृध्रशीर्ष्णीश्च । .... निजङ्घं शबलोदरम् ।

ஹே அக்னி பகவானே, ஹிம்ஸை செய்யும் துஷ்ட ராக்ஷஸர்களே நாசம் செய்து ரக்ஷிக்க வேண்டும். எப்படிப்பட்ட ராக்ஷஸர்கள்? தலே யில்லாதவர்களும், கழுகுடையது போன்ற தலேயுள்ளவர்களுமான ராக்ஷஸிகளேயும், நான்கு புறங்களிலும் ஹிம்ஸை கொடுக்கும் 'பரிபாதர்' எனும் ராக்ஷஸர்களேயும், வெண்மை நிறமுள்ள

வயிற்றோடு கூடிய அரக்கர்களையும், கீழ் நோக்கும், கோணலான கணுக்காலோடு, கையோடு கூடிய அரக்கர்களையும் வெண்மை நிறம் கலந்த வயிற்றோடு கூடிய அரக்கர்களையும் வதம் செய்து எங்களை ரக்ஷிக்க வேண்டும்.

सतान् वाच्यायंया सह । .... अग्ने नाशंय सन्दृशः ।

மஹா சக்தி வாய்ந்த அக்நி பகவானே ! தாங்கள் பரிவாதர் முதலிய அரக்கர்களான சந்ததிகளை (மக்களை) விரும்பும் அந்த அரக்கர்களின் மாதாவான "வாச்யாயா" எனும் தாயுடன் கூட அந்த அரக்கர்களை சம்ஹரிக்க வேண்டும். மேலும் எந்த சத்ருக்கள் எங்கள் விஷயத்தில் ஈர்ஷ்யை (குணத்தை சகிக்க முடியாமை) அசூயை-இல்லாத தோஷத்தை ஆரோபனம் (சுமத்துதல்) செய்வது, புபுக்ஷை - (பசி) புஜிப்பதற்கு விரும்புதல், மந்யு - கோபம், க்ருத்யா - ஆபிசாரம் இவைகளை செய்கின்ற சத்ருக்களையும் எந்த சமயத்தில் எங்களுக்கு இடையூறு செய்யலாம் என்று தத்தத்ருஷ்டிகளாக (அதிலேயே கண்ணோட்டமாக) இருப்பவர்களையும் (சமயம் எதிர்ப்பார்த்து இருத்தல்) இத்தகைய க்ரூரர்களை அவர்களின் ரதத்தோடு கூட அழிக்க வேண்டும். அந்த ரதத்தில் ப்ராணிகளுக்கு ஹிம்சை அளிக்கின்ற 'கிளி' உருவம் பொருந்திய அரக்கர்கள் राक्षसः நிரம்பி உள்ளனர். ஆகவே அத்தகைய ரதங்களோடு கூட ராக்ஷஸர்களை அழிக்க வேண்டும்.

அனுவாகம்—29

पर्जन्याय ... पुरुषीणाम् ।।

இதில் மூன்று இஷ்டகா மந்த்ரங்கள் உப தேசிக்கப்படுகின்றன.

पर्जन्याय प्रगायत । ... सनोयवसमिच्छतु ।

ஹே ரித்விக்குகளே, ஹே யஜமானர்களே, நீங்கள் வ்ருஷ்டிக்கு அபிமாநியான பர்ஜன்ய தேவதைக்காக ஸ்தோத்ரம் செய்யுங்கள். அவர் ஆகாசத்தில் உள்ளவர் அவர் மழை ரூபமான ஜலத்தை நமக்கு வர்ஷித்து நமக்கு அன்னம், பசுக்களுக்கு வேண்டிய புற்பூண்டுகள் இவைகளை அளிக்கட்டும். ஸ்தோத்திரத்தால் மகிழ்ந்து அவர் ஆசையுடன் நமக்கு அளிக்கட்டும்.

इदवचः पर्जन्याय स्वराजे । ... सुपिप्पला ओषधीः

देव गोपाः ।

ஸ்வயமாக விளங்குகிற பர்ஜன்ய தேவதை யின் மனதில் நம்முடைய ஸ்தோத்திரங்கள் ப்ரவேசிக்கட்டும். நம்முடைய ஸ்தோத்திர ரூப மான வாக்யம் அவரின் ஹ்ருதயத்தில் கலக்கு மாறு முயற்சி செய்யுங்கள். வாயு பகவான்

நமக்கு சுகத்தை உண்டு பண்ணட்டும். சர்வ ஜனங்களும் நம்விஷயத்தில் சுகத்தை உண்டு பண்ணட்டும். யவை, வ்ரீஹி முதலிய ஓஷதிகள் நல்ல பலத்தோடுகூட தேவர்களின் பொருட்டு ஹவிஸ்ஸை அளித்து தேவர்களுக்கு த்ருப்தியை உண்டு பண்ணட்டும்.

यो गर्भमोषधीनाम् । ... पर्जन्यः पुरुषीणाम् ।

அந்த பர்ஜன்ய தேவர் வ்ரீஹி, யவை முதலிய ஓஷதிகளுக்கும், பசுக்களுக்கும், அச்வங்களுக்கும், மனுஷ்ய ஸ்திரீகளுக்கு கர்ப்பபோஷத்தை செய்து நமக்கு சுகத்தை அளிக்கட்டும்.

அனுவாகம்—30

पुनर्मामैत्विन्द्रियम् ... प्रजसं कुरु ॥

மூன்று மந்த்ரங்கள் உபதேசிக்கப்படுகின்றன

पुनर्मामैत्विन्द्रियम् । ... पुनर्द्रविणमैतु मा ।

கண் முதலிய இந்திரியங்கள் இந்த விஷயங்களை அனுபவித்து சக்தியை இழந்தவைகளாக ஆயினவோ அவை சக்தியுடன் கூட என்னை அடையட்டும். இழந்த ஆயுஸும் (இழந்தது பலம்) மறுபடியும் என்னை அடையட்டும். இழந்த ப்ரஹ்மவர்ச்சஸும் மறுபடியும் என்னை அடையட்டும், இழந்த என்னுடைய தனமும் என்னை

அடையட்டும். இவைகள் மேலும் மேலும் அபி வ்ருத்தி ஆகவேண்டும் என்பது தாத்பர்யம்.

यन्मेऽद्यरेतः पृथिवीमस्कान् । ... दीर्घायुत्वाय वर्चसे ।

இன்று என்னுடைய ரேதஸ் ஆனது ப்ருதிவி களிலோ, ஒஷதிகளிலோ, ஜலத்திலோ சிந்தி இருக் கலாம். அதை என்னுடைய ஆயுள் வ்ருத்திக்காக வும், ப்ரஹ்மவர்ச்சஸிற்காகவும் மறுபடியும் ஸ்வீ கரித்துக் கொள்கிறேன்.

यन्मेरेतः प्रसिच्यते । ... तेन सुप्रजसंकुरु ।

ஹே அக்நி பகவானே! கர்ப்ப ரூபமாக பரிண மித்த (மாறிய) என்னுடைய ரேதஸானது புத்ர ரூபமாக ஜனிக்கட்டும். அந்த அபத்யத்தினால் அதாவது புத்ரனால் யஜமானனான என்னை சுகம் உள்ளவராக செய்யவேண்டும். அந்த புத்ரரூப மான ரேதஸ்ஸால் (உத்பாதக) சக்தியால் என்னை நல்ல சந்ததிகளை உடையவனாக அதாவது புத்ர, பௌத்ர, நப்த்ரு, (கொள்ளுபேரன்) பரம்பரை யுடன் கூடியவனாக அவிச்சின்ன ஸந்ததிகளை உடையவனாகவும், அதனால் நிரந்தர சுகம் உள்ள வனாகவும் விளங்க அனுக்ரஹம் செய்யவேண்டும்.

அனுவாகம்—31

अह्नयस्तिरोधाजायत .... सन्दृशि ।

வைச்ரவன யக்ஞமந்த்ரங்கள் உபதேசிக்கப் படுகின்றன. முதலில் நான்கு ரிக்குகளால் குபேர பகவானை ஆராதனம் செய்யவேண்டும்.

अङ्गूयस्तिरोधाजायत । .... ये अपोश्नन्ति केचन ।

அநாதி ஸித்தரான (சாச்வதமாய் உள்ள) குபேர பகவானை அழைத்துக் கூறப்படுகிறது. ஹே குபேர பகவானே! தங்களுடைய பரிஜனமான (ப்ராதாவான) வைச்ரவனர் தங்களுடைய நல்ல காரியங்களை மறைத்து வைத்து வருகிறாரல்லவா. அப்படி மறைக்கும் தன்மையை உடைய அந்த வைச்ரவன தேவரைக் கொண்டு என்னுடைய சத்ருக்களை நாசம் செய்து ரக்ஷிப்பீராக! மேலும் எவர் என்னுடைய கர்ம பலன்களை, என்னுடைய ஸத்கர்மாக்களை நாசம் செய்கின்றனரோ அவர்களையும் அழித்து விடுவாயாக!

त्वाष्ट्रीं मायां वैश्रवणः .... आस्थायायाहि नो बलिम् ।

ஹே குபேர! அந்த வைச்ரவனுடன் கூடிய தாங்கள் ஆயிரம் ஆரக்கால்கள் கொண்ட (Radius) அநேக சக்கரத்தை உடையதும், ஆயிரம் குதிரைகள் பூட்டபட்டதும், தேவதச்சர் த்வஷ்டாவினால் ஆச்சரியமாக நிர்மானிக்கப் பட்டது போன்று ப்ரகாசிக்கின்ற ரதத்தில் ஏறிக் கொண்டு எங்களுடைய பூஜையை பெற்றுக் கொள்வதற்கு வந்தருள் புரிவீராக.

यस्मै भूतानि बलिमावहन्ति । .... श्रियंबिभ्रतोऽन्नमुखीं विराजम् ।

முக்யமாக அன்னம் முதலிய நல்ல பொருள் கள்களை பக்தர்களுக்கு அருள்வதற்காக கையில் தரித்துக் கொண்டிருக்கும் குபேர பகவானுக்கு எல்லா ப்ராணிகளும் தனம் (மணி. முத்து, முதலியவைகள்), யானையோடு கூடிய தங்கம் முதலிய பதார்த்தங்களால் பூஜை செய்கின்றார்கள் (ஆராதிக்கிறார்கள் - காணிக்கை செலுத்துகின்றனர்). அத்தகைய குபேரனுடைய அனுக்ரஹ புத்தியில் நாங்கள் இருப்போமாக, அதாவது அவர்களின் அனுக்ரஹத்திற்கு பாத்திரர்களாக இருப்போமாக.

सुदर्शने च क्रौञ्चे च .... स॑ह्यायै नगरं तव ।

ஹே குபேர பகவானே! தாங்கள், நூற்றுக் கணக்கான கட்டுக்களை உடையதும், நூற்றுக் கணக்கான இருப்பிடங்களை உடையதும், அதாவது நூறு ஸ்தானம் உடையதும், சுகமாய் நடந்து செல்லக்கூடிய வீதிகளை உடையதும் சுதர்சனம், க்ரௌஞ்சம், மைநாகம் முதலிய மூன்று பர்வதங்களில் வ்யாபித்ததுமான தங்கள் அழகான நகரத்தை விட்டு முன் கூறிய உத்தம ரதத்தில் ஆரோகணித்து என் யக்ஞபூமிக்கு வந்தருள வேண்டும்.

इतिमन्त्राः । कल्पोऽत ऊर्ध्वम् ।

நான்கு மந்த்ரங்கள் கூறப்பட்டுள்ளன. இனி அனுஷ்டான க்ரமம் கூறப்படுகிறது.

यदिबलिं हरेत् । .... अथ बलिं हृत्वोपतिष्ठेत ।

இந்த கர்ம பலிஹரணம் உபஸ்தானம். அக்நி ப்ரதிஷ்டை, சமிந்தனம் (ஹோமம்) செய்ய வேண்டிய காலம், இந்த க்ரந்தத்தை அத்யயனம் நியமங்கள் 6, மேலும் ஒரு பலிஹர மந்த்ரம், உபஸ்தான மந்த்ரம் என்ற விவரங்கள் அடங்கியது. முதல் நாலு மந்த்ரங்கள் ஆவாஹனத்திற்காகக் கூறப்பட்டுள்ளது. முதல் பலிஹரணம் (பலிபோடுதல்) वैकल्पिकम् (செய்யவும் செய்யலாம், செய்யாமலும் இருக்கலாம்) என்று பாஷ்யகாரர் यदि என்னும் பதத்தால் இந்த அபிப்ராயம் கூறியுள்ளார். பலிஹரணம் செய்வதாய் இருந்தால் "ஹிரண்ய நாபயே' என்று ஆரம்பித்து सर्व भूताधिपतये नमः என்று முன்பு ஆவாஹனம் செய்யப்பட்ட குபேர பகவான் சந்நிதியில் பலியை ஸமர்ப்பிக்க வேண்டும். ஸமர்ப்பித்த பின் உபஸ்தானம் ப்ரார்த்தனை.

உபஸ்தான மந்த்ரம்:—

क्षत्रं क्षत्रं वैश्रवणः । .... अस्मात्प्रविश्यान्नमद्धीति ।

தாங்கள், ஆபத்துக்களிலிருந்து, ரக்ஷிப்பீர். மேலும் தாங்கள் க்ஷத்ரிய ஜாதியும்கூட. நாங்கள் ப்ராஹ்மணர்கள் யக்ஞம் புரியும் யஜமான்ர்களும் கூட. ஆகவே நீங்கள் எங்களை ரக்ஷிக்க வேண்டி யுவர். தங்களுக்கு நமஸ்காரம். எங்களுக்கு ஹிம்ஸையை அளிக்காமல் ரக்ஷிக்க வேண்டும். ஆகவே, இந்த பலி ஸமர்ப்பிக்கும் ப்ரதேசத்திற்கு வந்தருளிய பல் பதார்த்தங்களை, அங்கீகரிக்க வேண்டும். (புஜித்தருள வேண்டும்) அக்நி ஸ் தா ப ன ம் விதிக்கப்படுகிறது. (அக்நி ப்ர திஷ்டை)

अथतमग्निमादधीत .... यस्मिन्नेतत्कर्म प्रयुञ्जीत ।

வைஶ்ரவன ஹோமத்திற்காக மேல்வரும் மந்திரத்தை சொல்லி ஸ்தாபனம் செய்ய வேண்டும்.

மந்த்ர ஸ்வரூபம்

तिरोधाभूः । .... सर्वेषांलोकानामाधिपत्ये सीदेति ।

ஹே அக்நி பகவானே! பூலோகத்தை தங் களுடைய தேஜஸ்ஸால் வ்யாபிக்க வேண்டும். இதுபோல் புவர்லோகம், ஸுவர்லோகம் போன்ற வற்றையும் வ்யாபிக்க வேண்டும். எல்லா லோகத்தையுமே நன்கு பரிபாலிப்பதற்காக என்று இந்த இடத்தில் அமர்ந்தருள வேண்டும். ஸமிந் தனம் (समिन्धनम्) விதிக்கப்படுகிறது. இதன் பேர்தான் ஸமிந்தனம் ஸமிதாஹுதி.

अथतमग्निमिन्धीत .... यस्मिन्नेतत् कर्म प्रयुञ्जीत ।

எவ்விடத்தில் (எந்த அக்னியில்) இந்த கர்ம அனுஷ்டிக்கப்படுகிறதோ, அந்த அக்னியில் மேல் வரும் மந்த்ரத்தை சொல்லி ஸமித்தை ஆதானம் செய்து ப்ரகாசிக்க செய்ய வேண்டும்.

तिरोधा भूस्स्वाहा .... भूर्भुवस्स्वस्स्वाहा ।

இந்த ஸமித்து நன்கு ஹோமம் செய்யப் பட்டதாக ஆகட்டும். பூலோகம் தங்களுடைய தேஜஸ்ஸினுல் மறைக்கப்படட்டும். (அதாவது தங்களுடைய ப்ரகாசத்தால் நிரப்பப்படட்டும்) இதே போன்று எல்லா லோகமும் நிரப்பப் படட்டும். இந்த வைச்ரவன யக்ஞ காலம் கூறப் படுகிறது.

यस्मिन्नस्यकाले सर्वा आहुतीः हुता भवेयुः । .... परः

सुप्तजनाद्वेपि ।

இந்த வைச்ரவன யக்ஞமானது இந்த नारण केतुक चयन த்திலுள்ள சர்வ ஆஹூதிகளும் இந்த சயனத்திற்கு இதர ப்ராஹ்மணங்களிலிருந்து விதிக்கப்பட்ட ஆஹூதிகளும் செய்து முடித்தப் பிறகு இந்த வைச்ரவன யக்ஞத்தை அனுஷ்டிக்க வேண்டும். नारण केतुक चयन - ஆஹூதிகள் பூர்த்தி

யான தினத்தன்று இதை அனுஷ்டிக்க வேண்டும் என்பது தாத்பர்யம். அல்லது எல்லா ஜனங்களும் தூங்கின பிறகு அனுஷ்டிக்கலாம் (அனுஷ்டிக்க வேண்டும்). இந்த க்ரந்தத்தை அத்யயனம் செய்வதற்கு சில நியமம் உபதேசிக்கப்படுகிறது.

नाऽस्मप्रमा यन्तमाध्यापयेत् । .... सर्वार्थास्सिध्यन्ते ॥

நடத்தை பிசகு உள்ளவர்களுக்கு இந்த க்ரந்தத்தை அத்யயனம் செய்து வைக்கக்கூடாது. இந்த க்ரந்தத்தை குருமுகமாக நியமத்தோடு எவன் நன்கு அறிகிருனே அவனுக்கு சர்வார்த்தங்களும் சித்திக்கும். இந்த பலி கர்மாவை குருமுகமாக அறியாதவர்களுக்கும் பூர்வ பாபகர்மாவினுல் அன்னம் கிடைக்காமல் தாரித்ரியத்தில் உழலுபவர்களுக்கும் (மூழ்கி உள்ளவர்களுக்கும்) ஒரு அபீஷ்டமும் சித்திக்காது. மேலும் ஒரு பலிஹரண மந்த்ரம் விவரிக்கப்படுகிறது (உபதேசிக்கப்படுகிறது).

यस्ते विघातुको भ्राता । .... मयिस्वाहा ।

ஹே குபேர பகவானே, எல்லோருக்கும் ஹிரண்யம் (தங்கம் முதலிய த்ரவ்யம்) கிடைப்பதில் விக்னம் செய்வதை ஆசாரமாக உள்ள (இடையூறு புரியும்) உன்னுடைய ப்ராதாவான வைச்ரவனர் என்னுடைய மனதை இருப்பிடமாக கொண்டுள்ளார். அவரை த்யானம் செய்து

அவரின் பொருட்டு ச்ரேஷ்டமான பலித்ரவ்யத்தை ஹோமம் செய்கிறேன். அவருக்கு அர்பணம் செய்கிறேன். அந்த வைச்ரவனர் எனக்கு ஹிரண்ய லாபம் முதலியவைகளுக்கு ப்ரதிபந்தம் செய்யாமல் இருக்கவேண்டும். அந்த விஷயத்தில் எனக்கு கெடுதல் செய்யாமல் இருக்கவேண்டும். ஹிரண்யாதி த்ரவ்யங்கள் எனக்கு கிடைக்கும்படி அனுக்ரஹம் செய்யவேண்டும். அதற்காக இந்த ஹோமம் அனுஷ்டிக்கப்படுகிறது: நல்லமுறையில் ஹோமம் ஆகட்டும். ஹோமம்: பலிஹரணம் ரூபம்.

உபஸ்தான மந்த்ரம் கூறப்படுகிறது.

राजाधिराजाय प्रसह्य साहिने .... महाराजाय नमः ॥

அரசர்களுக்கு, எல்லா அரசனுக்கும் கிடைக்கும் லாபத்தில் பலாத்காரமாக ப்ரதிபந்தகம் புரியும் அந்த வைச்ரவனருக்கு, நமஸ்காரத்தை செய்கிறோம். அவர் அபீஷ்டங்களை விரும்புகிற என்னுடைய காமங்களை கொடுக்கட்டும். ப்ரதிபந்தகம் புரியும் அந்த வைச்ரவனர், காமேச்வரராக ஆகி என்னுடைய விருப்பங்களை நிறைவேற்ற வேண்டும். மஹாராஜாவான குபேர ரூபனான வைச்வரனருக்கு நமஸ்காரம் செய்கிறேன்.

कत्तुवो अरुणासश्च । मातेऽयोम सन्दृशि ।

இதன் அர்த்தம் முதல் அனுவாகத்தில் கூறப்பட்டுள்ளது.

அனுவாகம்—32

संवत्सरं .... भवति ॥

संवत्सरमेतद्व्रतं चरेत् । .... द्वौवामासौ ।

ஆருணகேதுக சயனம் அனுஷ்டிப்பதற்கு முன் அதிகாரஸம்பத்தை பெறுவதற்கு வ்ரதானுஷ்டானம் செய்யவேண்டும். வ்ரதானுஷ்டானம் (சில நியமங்களை அனுஷ்டித்தல்) மேலே கூறப்படும் நியமங்களை ஒரு வருஷம் அல்லது இரண்டு மாதங்களோ நியமங்களை முழுவதும் அனுஷ்டிக்கவேண்டும்.

नियमस्समासेन

பொதுவாக நியமங்களையாவற்றையும் அனுஷ்டிக்கவேண்டும் என்று உபதேசிக்கப்பட்டது. அந்த நியமங்கள் விஸ்தாரமாக உபதேசிக்கப்படுகின்றன.

तस्मिन्नियमविशेषाः .... अरुणाः काण्डऋषयः ।

1. பிரதிதினம் ப்ராதः காலம், மத்யந்தின காலம், சாயங் காலம் மூன்று வேளைகளிலும் ஸ்நானம் செய்தல் வேண்டும். 2. சதுர்த்த காலத்தில் போஜனம் செய்யவேண்டும். 2A. சதுர்த்த காலம் என்பது—வேத விதிப்படி ஒரு

நாளைக்கு இரண்டு வேளை போஜனம். இங்கு சதுர்த்த காலம் என்றுக் கூறப்பட்டது, முதல் நாள் இரண்டு காலம், மறுநாள் பகல் ஒரு காலம், மற்றும் இரவு காலம் ஆகவே முதல் மூன்று காலத்தை தள்ளி நான்காவது காலமான மறுநாள் இரவில் போஜனம் செய்யவேண்டும். இந்த கணக்கில் (க்ரமத்தில்) நான்காவது காலத்தை தீர்மானித்துக் கொள்ளவேண்டும் 2B. அல்லது ப்ரதிதினம் பிக்ஷை எடுத்து போஜனம் செய்ய லாம். ஆனால் இது அசக்தர்கள் விஷயம் ஆகும். 3. அத்தி சமித்தினால் அக்னி கார்யம் செய்ய வேண்டும். அந்த சமித்து ஹோமத்திற்கு மந்த் ரங்கள் முன்பு கூறப்பட்ட पुनर्मामैत्विन्द्रियम् அனு வாகத்தில் உள்ளது.

4. நதி, தடாகம் இவைகளிலிருந்து ஜலத்தை பாத்திரத்தில் பிடித்து எடுத்து வந்து வஸ்த் ரத்தால் வடிக்கட்டி அந்த ஜலத்தையே உபயோ கித்து வரவேண்டும். 5. ப்ரக்ஷாலனம், ஆசமனம் முதலியவைகளை நேரடியாக ஜலாசயத்தில் (நதி, தடாகாதிகளில்) செய்யக்கூடாது. 6. பக்ஷ்யாதி வஸ்த்துக்களை சேர்த்துவைத்துக் கொள்ளக் கூடாது. பிக்ஷாபாத்ரத்தில் மட்டும்தான் வைத் துக் கொள்ளவேண்டும். 7. ப்ரதிதினம் அக்னி, வாயு, ஸூர்யன், ப்ரஹ்மா, ப்ரஜாபதி, சந்திரன், நக்ஷத்ரங்கள், ருதுக்கள், ஸம்வத்ஸரம், வருணன், அருணன் இவர்களுக்கு ஹோமம் செய்தல் வேண்டும். இதற்கு மந்திரம் . . . .

अग्नये स्वाहा, वायवे स्वाहा इत्यादि

இந்த வ்ரதாதேசம், (வ்ரதோபதேசம்) ப்ரவர்க்ய காண்டத்தில் கூறப்பட்டது போல் செய்யவேண்டும். அருணர்கள் எனும் காண்ட ரிஷிகளுக்கும் ஹோமம் செய்ய வேண்டும். இனி இந்த आरुण केतुक चयन प्रश्नத்தை அத்யயனம் செய்வதற்குரிய நியமங்கள் உபதேசிக்கப்படுகின்றன.

अरण्येऽधोयीरन् .... तपस्वीपुण्योभवति

இந்த க்ரந்தம் அரண்யத்தில் அத்யயனம் செய்ய வேண்டும். அத்யயனம் ஆரம்பிக்கும் போது சாந்தி பாடமாக भद्रंकर्णेभि: என்ற இரண்டு ரிக்குகளை ஜபிக்கவேண்டும்.

மஹாநாம்னிகள் என்னும் ரிக்குகளால் आपमापामपस्सर्वा: என்பது முதலிய ரிக்குகளால் உதகஸ்பர்சம் செய்து வைக்கவேண்டும். பிறகு அந்த மாணவனை வ்ரதத்தின் (வ்ரதானுஷ்டானத்தின்) நியமனம் செய்யவேண்டும். சிவாந: என்னும் மந்த்ரத்தினால் ஒஷதிகளை ஸ்பர்சனம் செய்யவேண்டும். सुमृडीकासरस्वती என்னும் மந்த்ரத்தினால் பூமியை ஸ்பர்சனம் செய்யவேண்டும். இந்த வேத பாகத்தை அத்யயன ஸமாப்தியிலும் கீழேக் கூறப்பட்ட (இதுவரை கூறப்பட்ட) அனுஷ்டானங்களை அனுஷ்டிக்க வேண்டும். ஸமாப்தியானதும் ஆசார்யனுக்கு பசுவையும்

போஜனம் செய்வதற்கு தகுந்த வெங்கலப் பாத்திரத்தையும், பட்டு வஸ்த்ரத்தையும், பட்டு கொடுக்க சக்தி இல்லாவிடில் வெண்மையான பருத்தி வஸ்த்ரத்தையும், அத்யந்தம் அதாவது மிகவும் தாரித்ரிய நிலையில் இருந்தால் யதாசக்தி: முடிந்த ஏதாவது பொருளை தக்ஷிணையாகக் கொடுக்க வேண்டும். இவ்விதம் ஸ்வாத்யாய நியமத்துடன் இந்த க்ரந்தத்தை அரண்யத்தில் அத்யயனம் செய்ய வேண்டும். செய்பவன் மஹாதபஸ்வியாகவும், புண்யவானாகவும் க்ஷேமத்தோடு ப்ரகாசிப்பான்.

शुभं भूयात्, मङ्गलानि भवन्तु
सर्वे जनाः सुखिनो भवन्तु, समस्त सन्मङ्गलानि सन्तु ।

कमल चरण युक्ताः कल्पवृक्षेण तुल्याः
निखिल निगम सारं भावयन्तो महान्तः ।
विदित सकल विद्या वेदमार्गे चरन्तः
करकृतमपराधं क्षन्तुमर्हन्ति सन्तः ॥

(தாமரைக் கால்களை உடையவர்களும், கல்பக வ்ருக்ஷத்திற்கு ஒப்பானவர்களும் எல்லா வேத ஸாரத்தையும் ஹ்ருதயத்தால் அனுபவிப்பவர்களும், எல்லா வேதங்களில் சொல்லப்பட்ட நல் வழிகளில் செல்பவர்களுமான ஸாதுக்கள் எழுத்தில் ஏதாவது ஏற்பட்டிருக்கும் தவற்றை மன்னிக்கட்டும்.)